


போட்டிப் பரீட்சைகளுக்கான வழிகாட்டி நூல்

# பொது அறிவு

வேதநாயகம் தபேந்திரன்

J. Saseenthiran

# பொது அறிவு
# *GENERAL KNOWLEDGE*

**போட்டிப் பரீட்சைகளுக்கான வழிகாட்டி நூல்**

**க. பொ. த. (உயர்தரம்)**

**புதிய பாடத்திட்ட மாணவர்களுக்கும் ஏற்றது**


ஆக்கம்

**வேதநாயகம் தபேந்திரன்**

சமூக சேவைகள் அலுவலர்

பிரதேச செயலகம்

தீவுகளின் தெற்கு

வேலணை



வெளியீடு

**'கிறிப்ஸ்'**

**பொது அறிவு (வழிகாட்டி நூல்)**

ஆசிரியர்
**வேதநாயகம் தபேந்திரன்**

உரிமை
**செல்வன் தபேந்திரன் இலக்கியன்**

பதிப்பு
***(புதுப்பித்த) ஆறாம் பதிப்பு : 2003 ஜுன்***
***முதலாம் பதிப்பு : 1996 ஆகஸ்ட்***

கணினி வடிவமைப்பு
**கிறிப்ஸ்**

விநியோகஸ்தர்
**லங்கா புத்தகசாலை**
F. L. 1-14, **டயஸ் பிளேஸ்**
**குணசிங்கபுர**
***கொழும்பு - 12***
***தொ. பே. 341942***

***விலை ரூபா : 150.00***

## வாழ்த்துரை

இன்றைய மாணவர்களிடையே விழிப் புணர்வை ஏற்படுத்துவதே நாட்டினதும், சமுதாயத்தினதும் வளர்ச்சிக்கு அடிப் படை என்பதை எல்லோரும் ஏற்றுக் கொள்வர். இத்தகைய நடவடிக்கைக்கு அவசியமானதே பொது அறிவின் வளர்ச்சியாகும்.

இதற்கென ஆங்கிலத்தில் தனியான புத்தகங்களும், சஞ்சிகைகளும் நாளாந்தம் வெளிவந்தவண்ணமுள்ளன. ஆனால், தமிழில் இத்தகைய வாய்ப்பு இல்லை. இது தமிழ் மாணவர்களுக்குப் பெரும் குறைபாடாகும். இதனை நிவர்த்திக்கும் வகையில் இன்று வெளிவந்திருப்பதே திரு. வே. தபேந்திரன் அவர்களின் பொது அறிவு எனும் இந்நூலாகும்.

இந்நூலின் ஆசிரியர் திரு. வே. தபேந்திரன் எனது அன்புக் குரிய மாணவன். அவர் வணிகப் பட்டதாரியாக வெளியேறி இப்பொழுது சமூகசேவைகள் அலுவலராகப் பணியாற்றுகின்றார்.

அவர் படிப்பினாலும், அனுபவத்தி னாலும் பெற்ற அறிவைப் பயன்படுத்தி இந்நூலை எழுதியுள்ளார். தற்காலத்திலே க. பொ. த. (உயர்தர) வகுப்பு புதிய பாடத்திட்டத்தில் பொது அறிவு தனிப் பாடமாக இருப்பதுடன் பல்கலைக்கழகப் புகுமுகப் பரீட்சையாகவும் அமைந் துள்ளது. ஆதலால் அத்தகைய மாணவர் களின் அறிவுத்தேடலுக்கு மிகப் பயனுள்ள நூலாக இது அமையும் என்பதில் சந்தேகமில்லை.

போட்டிப் பரீட்சைகள், உள்நுழைவுத் தேர்வுகள் என்பவற்றுக்குத் தோற்று வோருக்கும் உதவக்கூடிய வகையில் இந் நூலை எழுதியுள்ளமை குறிப்பிடத் தக்கது. இத்தகைய நூலை உருவாக்கிய ஆசிரியர் வே. தபேந்திரன் நீடூழிகாலம் வாழ்ந்து தமிழ் பேசும் மாணவ உலகுக்கு உதவவேண்டுமென எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறேன்.

*க. தேவராஜா*
தலைவர், வணிகத்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

## அணிந்துரை

**யா**ழ்ப்பாணம் இந்துக்கல்லூரியின் பழைய மாணவன் திரு. வேதநாயகம் தபேந்திரன் "பொது அறிவு" எனும் நூலைத் தொடர்ச்சியாக வெளியிடுவதையிட்டு அகமிக மகிழ்கின்றேன்.

தற்பொழுது சமூக சேவைகள் அலுவலராகக் கடமை புரியும் திரு. வே. தபேந்திரன் 1981/ 1988 காலப் பகுதியில் யாழ். இந்துவின் சிறந்த மாணவனாக மிளிர்ந்தார். கல்லூரி வணிக மாணவர் மன்றச் செயலாளராக 1987/ 1988 கல்வி ஆண்டில் செயற் பட்டார். யாழ். பல்கலைக்கழக வணிகமாணி பட்டதாரியான இவர் பல்கலை ஆளுமை மிக்க இளைஞராவார்.

ஏற்கனவே ஐந்து பதிப்புக்களாக வெளிவந்த பொது அறிவுப் போட்டிப் பரீட்சைக்கான வழிகாட்டி நூல் எதிர் காலத்திலும் பொதுப் பரீட்சைகளுக்குத் தோற்றும் பரீட்சார்த்திகளுக்கு நல்லதோர்

வழிகாட்டி நூலாக அமையும் என்பது எனது துணிபு. நூலாசிரியரின் அரிய முயற்சியை கல்வி உலகம் பாராட்டி வரவேற்கும் என்பதில் ஐயமில்லை. நல்லாசிகள் பல.

*அ. சிறிக்குமாரன்*

அதிபர்,
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி,
யாழ்ப்பாணம்.

## என்னுரை

எனது முயற்சிகளுக்கு நீங்கள் வழங்கி வரும் பேராதரவு என்னை இத்துறையில் இன்னுமின்னும் உழைக்கச் செய்கின்றது. தேடல்களின் ஆர்வத்தையும் கூட்டு கின்றது.

ஒவ்வொரு பதிப்பையும் ஏதோவொரு வகையில் தர ரீதியாக உயர்த்தப் பாடுபட்டு வருகின்றேன்.

குறுகிய காலத்தில் இத்துறையில் எனக்குப் பலமான அங்கீகாரத்தைத் தந்த அனைத்துத் தரப்பினருக்கும் என் மனம் நிறைந்த பல்கோடி நன்றிகள்.

புத்தக வெளியீட்டுத் துறையில் அகரம் இட்டுத் தந்து என்னை ஆளாக்கி விட்ட அமரர் கனகசபை ஆனந்தகுமார் (Bond Master) அவர்களை என்றென்றும் நன்றியுடன் மனதில் சுமக்கின்றேன்.

புதிய திருத்திய பதிப்பாக இந்நூலை அழகுற வெளியிடும் 'கிறிப்ஸ்' பதிப்பகத் திற்கும் நாடாளவிய ரீதியில் விநியோ கிக்கும் கொழும்பு லங்கா புத்தக சாலைக்கும் எனது மனமார்ந்த நன்றிகள்.

எனது ஆக்கம் முதலாம் பதிப்பாக தேசிய ரீதியில் வெளிவர உதவிய கொழும்பு சரசு பதிப்பகத்தின் இயக்குனர் மதிப்பிற்குரிய திரு. இ. செல்வநாயகம் அவர்களையும் நன்றியுடன் மனதில் கொள்ளுகின்றேன்.

இந்நூலுக்கு உரைகள் வழங்கிய யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வணிகத் துறைத் தலைவர் திரு. க. தேவராஜா அவர்கட்கும், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அதிபர் திரு. அ. சிறிக்குமாரன் அவர்கட்கும் என் மனம் நிறைந்த நன்றிகள்.

இவ் வெளியீடு தொடர்பாக உங்களது ஆக்கபூர்வமான மதிப்பீடு களையும், ஆலோசனைகளையும் இருகரம் கூப்பி வரவேற்கின்றேன்.

***"உள்ளியது எய்தல் எளிதுமன் மற்றுந்தான்
உள்ளியது உள்ளப் பெறின்"***

- குறள் 540

**வேதநாயகம் தபேந்திரன்**

"தேன்தமிழ் இல்லம்"
70/7, பழைய பூங்காசாலை,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்,
2003 மே 26.

# உள்ளே ......

பக்கம்


11 ............ இலங்கை

32 ............ இலங்கையின் கல்வித்துறை

40 ............ அண்மைக்கால இலங்கை நடப்புகள்

50 ............ அண்மைக்கால உலக விடயங்களில் பிரபலமானோர்

54 ............ அண்மைக்கால உலக நடப்புகள்

63 ............ நாடுகள், ஆட்சித் தலைவர்கள்

64 ............ சர்வதேச உடன்படிக்கைகள்

69 ............ உலகம் கண்ட போர்கள்

76 ............ சர்வதேச நாட்கள் / தினங்கள்

78 ............ சர்வதேச நிறுவனங்கள்

88 ............ உலக விருதுகள்

91 ............ விண்வெளி அறிவியல்

95 ............ மருத்துவம்

100 ............ சினிமா

103 ............ விஞ்ஞானம்

107 ............ கலை இலக்கியம்

118 ............ பல்துறைக் களஞ்சியம்

131 ............ உலக விளையாட்டுக்கள்

137 ............ சுருக்கப் பெயர்கள், நிறுவனங்கள்

139 ............ மாதிரி வினாத்தாள்

## இலங்கை

- இந்து சமுத்திரத்தின் முத்து, இந்து சமுத்திரத்தின் நித்திலம் ஆகிய சிறப்புப் பெயர்களால் இலங்கை அழைக்கப்பட்டு வருகின்றது.
- நாட்டின் பரப்பளவு - 65 610 சதுர கிலோ மீற்றர்.
- இலங்கை 9 மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. ஆனால் தற்போது நிர்வாக ரீதியாக 8 மாகாண சபைகள் இயங்கி வருகின்றன. காரணம் வட மாகாணம், கிழக்கு மாகாணம் என்பன இணைந்து வடக்கு - கிழக்கு மாகாண சபையாக நிர்வாக ரீதியில் இயங்குவதேயாகும்.
- நாட்டில் தற்போதுள்ள நிர்வாக மாவட்டங்களின் எண்ணிக்கை - 25.

  1984ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்திலிருந்து கிளிநொச்சி பிரித்தெடுக்கப்பட்டதன் மூலம் 25ஆவது நிர்வாக மாவட்டம் உருவாக்கப்பட்டது.
- நாட்டில் தற்போதுள்ள தேர்தல் மாவட்டங்கள் - 22.

காரணம் யாழ்ப்பாணம், கிளிநொச்சி ஆகிய நிர்வாக மாவட்டங்கள் இணைந்து யாழ்ப்பாணம் எனும் தேர்தல் மாவட்டமாக உள்ளது. வவுனியா, முல்லைத்தீவு, மன்னார் ஆகிய நிர்வாக மாவட்டங்கள் மூன்றும் வன்னி என்ற தேர்தல் மாவட்டமாக உள்ளது.

- இலங்கையில் கூடுதலான மாவட்டங்களைக் கொண்டது வடமாகாணம். இதில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா, மன்னார், முல்லைத்தீவு, என 5 நிர்வாக மாவட்டங்கள் உள்ளன.

- நிலப்பரப்பில் கூடிய மாகாணம் - வடமத்திய மாகாணம்
10 472 சதுர கிலோமீற்றர் பரப்பளவு

- நிலப்பரப்பில் கூடிய மாவட்டம் - அனுராதபுரம்
7 180 சதுர கிலோ மீற்றர் பரப்பளவு

- நிலப்பரப்பில் குறைந்த மாவட்டம் - கொழும்பு
700 சதுர கிலோ மீற்றர்

- இலங்கையின் ஒரேயொரு பிரதான குடாநாடு - யாழ்ப்பாணக் குடாநாடு

- **இலங்கையின் தேசிய.....**

| | |
|---|---|
| கீதத்தை இயற்றியவர் | - ஆனந்த சமரக்கோன் |
| மரம் | - நாக மரம் (மெசுவா நாகசூரியம்) |
| விளையாட்டு | - கரப்பந்தாட்டம் (Volley ball) |
| கொடி | - வாளேந்திய சிங்கம் |
| மலர் | - நீலோற்பலம் (நீல அல்லிமலர்) |
| பறவை | - காட்டுக் கோழி |
| மிருகம் | - யானை |

- பௌத்தர்களால் புனித மரமாக வெள்ளரசு வழிபடப்படுகின்றது.

- தற்போது நடைமுறையிலுள்ள நேரம் GMT நேரத்துடன் 6 மணி நேரம் கூட்டப்பட்டது.

- நேர அமைப்பு மின்சக்திப் பற்றாக்குறை நெருக்கடி காரணமாக 1996 ஜூனில் 1 மணி நேரம் முன் நகர்த்தப்பட்டது. பின்னர் 1996 ஒக்ரோபரில் 1/2 மணி நேரம் பின் நகர்த்தப்பட்டது.

- கி. பி. 1505ஆம் ஆண்டு போர்த்துக்கேயர் இலங்கையைக் கைப்பற்றினார்கள். கண்டி இராச்சியம் தவிர்ந்த நாட்டின் ஏனைய பகுதிகள் போர்த்துக்கேயரால் ஆளப்பட்டன.

- கி. பி. 1658இல் ஒல்லாந்தர் போர்த்துக்கேயரை விரட்டியடித்து ஆட்சியைத் தம் வசப்படுத்தினார்கள். அப்போதும் கண்டி இராச்சியம் சுதந்திரமாகவே இயங்கியது.
- கி. பி. 1796இல் ஆங்கிலேயர் ஒல்லாந்தரைத் தோல்வியுறச் செய்து இலங்கையைக் கைப்பற்றினார்கள். ஆனால் கண்டி இராச்சியம் கைப்பற்றப்படாது சுதந்திரமாகவே இயங்கியது.
- 1802 இல் இலங்கை பிரித்தானியாவின் முடிக்குரிய குடியேற்ற நாடாகப் பிரகடனம் செய்யப்பட்டது.
- பிரித்தானியர் 1815 இல் கண்டி இராச்சியத்தின் மீது போர் தொடுத்துக் கைப்பற்றினார்கள்.
- 'றொபேட் பிரவுண்றிக்' என்பவரே அப்போது ஆளுனராக இலங்கையில் கடமை புரிந்தார். இவராலேயே படையெடுப்புக்கான உத்தரவு பிறப்பிக் கப்பட்டது.
- போர்த்துக்கேயரின் இலங்கை வருகையின்போது 'யாழ்ப்பாணம், கண்டி, கோட்டை' என 3 இராச்சியங்களையும் ஆங்கிலேயரால் கைப்பற்ற முடிந்தது.
- கண்டியை ஆண்ட கடைசி மன்னன் - ஸ்ரீவிக்கிரம இராசசிங்கன்.

  இந்திய நாயக்க வம்சத்தைச் சேர்ந்த இவனை ஆங்கிலேயர் கைது செய்து இந்திய தமிழகத்து வேலூரில் சிறையிட்டனர். இவன் அங்கேயே இறந்து போனான்.
- யாழ்ப்பாண இராச்சியத்தை ஆண்ட கடைசி மன்னன் - சங்கிலியன்
- இலங்கையின் முதலாவது மாநகரசபை - கொழும்பு. 1865இல் நிறுவப் பட்டது.
- இலங்கை தேசிய காங்கிரஸ் 1919இல் நிறுவப்பட்டது. இதன் முதலாவது தலைவர் - சேர் பொன் அருணாசலம்
- அரிசிப் பங்கீட்டு முறை நடைமுறைக்கு வந்தது - 1942
- சிவில் சேவை நீக்கப்பட்டு பரிபாலனசேவை நிறுவப்பட்ட ஆண்டு - 1963
- அரசாங்கம் போயா நாள்களை வார விடுமுறை நாட்களாகப் பிரகடனம் செய்தது - 1966
- இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி நிறுவப்பட்டது - 1943 ஜூலை 03
- இலங்கை தமிழரசுக் கட்சி நிறுவப்பட்டது - 1949 டிசெம்பர் 18

- இலங்கை இராணுவம் நிறுவப்பட்டது - 1949. 10. 10
- இலங்கை கடற்படை நிறுவப்பட்டது - 1950. 12. 10
- ஆசியாவிலேயே இலங்கையில்தான் முதன்முதலாகக் குதிரை வண்டி ஓடியது. 1832ஆம் ஆண்டு அஞ்சல் சேவையினை இலகுபடுத்து வதற்காகப் பிரித்தானிய ஆட்சியாளரால் அறிமுகப்படுத்தபட்டது.
- நொத்தாரிசுச் சட்டம் 1902இல் வந்தது. இதில் காலத்துக்குக் காலம் பல்வேறு திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டது.
- தேச வழமைச் சட்டம் 1707இல் ஒல்லாந்தரால் நடைமுறைக்கு வந்தது.
- முஸ்லிம்கள் துருக்கித் தொப்பி அணிந்து சட்டத்தரணிகளாக நீதிமன்றத் தில் கடமையாற்றச் சட்டபூர்வமாக அனுமதிக்கப்பட்ட ஆண்டு - 1906.
- பெருந்தோட்டப் பயிர்ச்செய்கையின் விருத்திக்காக 'ஒறியன்றல் வங்கி' ஆரம்பிக்கப்பட்டது - 1841
- இலங்கை வர்த்தகப் பயிர்களின் அரசனெனத் தேயிலை அழைக்கப் படுகின்றது.

  தேயிலையின் பிறப்பிட முக்கோண வலயம் ''சீனா, கம்போடியா, அசாம் (இந்தியா)''
- இலங்கையில் தேயிலையை அறிமுகப்படுத்தியவர் ''கலாநிதி கிணேசர்''. இவர் பேராதனைப் பூங்காவில் கி. பி. 1839ஆம் ஆண்டு இந்திய அசாம் பகுதியிலிருந்து கொண்டுவரப்பட்ட 205 தேயிலை விதைகளை நாட்டினார். பின்னர் 1867இல் கண்டி மாவட்ட ''லூல் கந்தை'' தோட்டத்தில் 'ஜேம்ஸ் ரெயிலர்' என்பவரால் தேயிலை நடப்பட்டு பெருந்தோட்டங்களாக விருத்தி செய்யப்பட்டது.
- ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து தலைமைத்துவப் போட்டி காரணமாக S. W. R. D. பண்டாரநாயக்க வெளியேறி 1951 செப்ரெம்பர் 02இல் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை நிறுவினார்.
- தனிச் சிங்களச் சட்டம் பாராளுமன்றில் நிறைவேறியது - 1956 ஜூன் 5. S. W. R. D. பண்டாரநாயக்கவின் மகாஜன ஐக்கிய கூட்டு முன்னணி அரசே இச் சட்டத்தை நிறைவேற்றியது. இச் சட்டத்தை எதிர்த்து இலங்கைத் தமிழரசுக் கட்சியினர் எஸ். ஜே. வி. செல்வநாயகம் அவர்களின் தலை மையில் பாராளுமன்றிற்கு முன்பாகவுள்ள காலிமுகத்திடலில் சத்தியாக் கிரகம் செய்தனர். அரச ஆதரவு பெற்ற காடையர்கள் இவர்களைக் கடுமை யாகத் தாக்கி சத்தியாக்கிரகப் போராட்டத்தைக் குழப்பினர்.

- பண்டா - செல்வா ஒப்பந்தம் 1957 ஜூலை 26இல் பிராந்திய சபைகளுக்காக கையெழுத்தானது. அப்போதைய எதிர்க்கட்சித் தலைவர் ஜே. ஆர். ஜெயவர்த்தனாவினால் இவ் ஒப்பந்தத்தை எதிர்த்துக் கண்டி நகருக்கு எதிர்ப்புப் பாத யாத்திரை நடத்தப்பட்டது. இதனால் சிங்கள மக்கள் இனரீதியாகத் தூண்டப்பட S. W. R. D. பண்டாரநாயக்க - S. J. V. செல்வநாயகம் ஆகியோரால் எய்தப் பெற்ற குறித்த அவ் ஒப்பந்தம் கைவிடப்பட்டது.

- இலங்கையில் மிகக் குறுகிய காலம் பிரதமர் பதவியை வகித்தவர் - கலாநிதி தஹநாயக்கா. முதலாவது காபந்து பிரதமர் என்ற பெருமையை இவர் பெறுகின்றார். இவர் நாட்டின் 5ஆவது பிரதமராக S. W. R. D. பண்டாரநாயக்கவின் மறைவையடுத்து 1959 செப்ரெம்பர் 26இல் பதவியேற்றார். இவர் 'பாஷா பெரமுன' எனும் கட்சியின் தலைவராகவும் இருந்தார்.

- இரண்டு மாதங்கள், ஒன்பது தினங்கள் (71 நாட்கள்) பிரதமர் பதவி வகித்து 1959 டிசெம்பர் 05இல் பாராளுமன்றத்தைக் கலைத்ததுடன் பதவி துறந்தார்.

- தஹநாயக்க அவர்களினாலேயே பாராளுமன்றத் தேர்தல் ஒரே நாளில் நடத்தி முடிக்கப்படும் முறை அறிமுகப்படுத்தப்பட்டது சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது.

- 1960 மார்ச் 19இல் நடைபெற்ற 4ஆவது பொதுத் தேர்தலின்போது இந்நிகழ்வு இடம்பெற்றது. இதற்கு முன்னர் பாராளுமன்றத் தேர்தல் பல நாட்களாக நடைபெறும் முறையே வழக்கிலிருந்தது.

- அரச குடும்பத் திட்டமிடல் பிரிவு உருவானது - 1968

- பதவியிலிருந்தபோதே இலங்கையில் இரண்டு ஆட்சித் தலைவர்கள் கொல்லப்பட்டார்கள். பிரதமராக இருந்த S. W. R. D. பண்டாரநாயக்க 1959 செப்ரெம்பர் 25இல் கொலைஞனால் துப்பாக்கியால் சுடப்பட்டு மறுநாள் 26ஆம் திகதி இறந்தார். நிறைவேற்று அதிகாரமிக்க 2ஆவது ஜனாதிபதியான ரணசிங்க பிரேமதாஸ 1993 மே 1இல் மேதின ஊர்வலத்தில் வைத்து தற்கொலைக் குண்டுத் தாக்குதல் ஒன்றின் மூலமாகக் கொல்லப்பட்டார்.

- 4ஆவது உலகத் தமிழாராய்ச்சி மகாநாடு 1974 ஜனவரியில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது. அமரர் பேராசிரியர் சு. வித்தியானந்தன் அவர்களே இம் மகாநாட்டின் அமைப்புக் குழுத் தலைவராகப் பணியாற்றினார்.

- பயங்கரவாதத் தடைச் சட்டம் (Prevention of Terrorism Act - PTA) உருவானது - 1979.

- அரசதுறை ஊழியர்களின் மாபெரும் வேலை நிறுத்தம் நடைபெற்றது. - 1980 ஜூலை. இப்போராட்டத்தில் ஈடுபட்ட ஆயிரக்கணக்கான ஊழியர்கள் வேலையை இழந்தனர்.

- மாவட்ட அபிவிருத்திச் சபை உருவானது - 1981. பின்னர் இம்முறை கைவிடப்பட்டது.

- இந்திய - இலங்கை சமாதான உடன்படிக்கை கையெழுத்தானது - 1987 ஜூலை 29.

- இலங்கையின் இனப்பிரச்சனைக்குத் தீர்வொன்றை முன்வைத்து J. R. ஜெயவர்த்தன, ராஜீவ் காந்தி ஆகியோரால் தமிழ் மக்களின் மீது திணிக்கப்பட்டதே இவ் உடன்படிக்கை. காலப்போக்கில் வந்த அரசியல் மாற்றங்களால் இவ் உடன்படிக்கை தானாகவே செயலிழந்தது. இவ் உடன்படிக்கை கையெழுத்தானதைத் தொடர்ந்து 1987 ஜூலை 30இல் இந்தியப் படைகள் இலங்கையின் வடக்கு - கிழக்கு மாகாணங்களுக்கு வந்தன. அப்போதைய ஜனாதிபதி J. R. ஜெயவர்த்தனவின் அழைப்பின் பேரிலேயே இந்திய அமைதி காக்கும் படை (IPKF) என்ற பெயரில் இந்தியப் படைகள் நிலை கொண்டன.

    - ரணசிங்க பிரேமதாஸ ஜனாதிபதியாகப் பதவியேற்றதன் பின்னர் அவரின் வேண்டுதலின் பேரில் இந்தியப் படைகள் 1990 மார்ச் 24இல் இலங்கையை விட்டுப் பூரணமாக வெளியேறின.

    - இதற்கு முன்னர் 1971 ஏப்ரலில் அரசைக் கவிழ்க்க மக்கள் விடுதலை முன்னணி (JVP) நடத்திய ஆயுதம் ஏந்திய கிளர்ச்சி வெற்றி பெறும் தறுவாயில் அதனை முறியடிக்கவென ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க அரசால் இந்தியப் படைகள் வரவழைக்கப்பட்டமை குறிப்பிடத் தக்கது.

- இலங்கை - இந்திய சமாதான உடன்படிக்கையைத் தொடர்ந்தே 1988இல் மாகாண சபைகள் எனும் நிர்வாக முறை ஏற்படுத்தப்பட்டது. இலங்கை முழுவதற்கும் இது ஏற்படுத்தப்பட்டது குறிப்பிடத்தக்கது.

- ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவின் குடியுரிமையைப் பறிப்பதற்கான குடியுரிமைத் தடைச் சட்டம் 1980 ஒகஸ்ட் 29இல் கொண்டு வரப்பட்டது. அப்போது ஆட்சி செய்த J. R. ஜெயவர்த்தனவின் ஐக்கிய தேசியக்கட்சி அரசே குடியுரிமைப் பறிப்பைச் செய்தது.

- இலங்கையின் முதலாவது பிரித்தானிய தேசாதிபதி - பிரெட்ரிக் நோர்த் (1798 - 1805). இவராலேயே இலங்கையில் நிலவி வந்த இராசகாரிய முறை ஒழிக்கப்பட்டமை சிறப்பிற்குரியது.

- இலங்கையின் முதலாவது பிரதம நீதியரசர் - சேர் எட்மன்ட் கரிங்டன் (1802 - 1806)

- **முதலாவது இலங்கையர் . . . . .**

  பிரதம நீதியரசர் - சேர் ஆர்தர் விஜயவர்த்தன (1949 - 1950)

  தற்காலிகப் பிரதம நீதியரசர் - C. நாகலிங்கம்

  சிவில் சேவைப் பதவி - சேர் பொன்னம்பலம் அருணாச்சலம்

  முதலாவது உதவி மாகாண அதிபர் - C. L. விக்கிரமசிங்கம்

- அரசாங்க சபையின் சபாநாயகராகப் பதவி வகித்த ஒரேயொரு தமிழர் - சேர் வைத்திலிங்கம் துரைசாமி (1936 - 1947)

- அரசாங்க சபையின் முதலாவது சபை முதல்வர் - சேர் பரன் ஜயதில

- **சுதந்திர இலங்கையில் முதலாவது. . . . .**

  பாராளுமன்ற சபாநாயகர் - சேர் பிரான்சிஸ் மொலமூரே

  மகாதேசாதிபதி - சேர் ஹென்றி மெங்க் மேசன்மூர்

  செனற் சபைத் தலைவர் - சேர் கெராட் விஜயக்கோன்

  நிதியமைச்சர் - J. R. ஜெயவர்த்தன

  பிரதம நீதியரசர் - சேர் ஜோன் ஹவார்ட்

- **முதலாவது இலங்கையர். . . . .**

  கோமறைக் கழக உறுப்பினராக (பிரிவுக் கவுன்சிலராக) நியமனம் பெற்றவர் - D. S. சேனநாயக்க

  சேர் (Sir) பட்டம் பெற்றவர் - கலாநிதி ஆனந்தக் குமாரசுவாமி

  விஞ்ஞானக் கலாநிதி (DSc) - கலாநிதி ஆனந்தக் குமாரசுவாமி

  முதுகலைமாணி (MA) - B. மகாதேவா

  முதுவிஞ்ஞானமாணி (MSc) - P. கனகசபாபதி

  அரசாங்க சபையின் பெண் உறுப்பினர் - திருமதி A. F. மொலமூரே

  பெண் நீதிபதி (மஜிஸ்ரேட்) - செல்வி சுதர்ம தர்மதாஸ

செனற் சபையின் பெண் உறுப்பினர் - செல்வி சி. சி. கூரே

பெண் பரிஸ்ரர் - திருமதி எஸ்லின் தெரணியகல

மாகாண அரசாங்க அதிபர் - சேர் வேலுப்பிள்ளை குமாரசுவாமி

- பிரதம மந்திரி பதவி வகித்த ஒரேயொரு செனற்றர் - ஸ்ரீமாவோ பண்டார நாயக்க.
- ஒரே நேரத்தில் இரு தேர்தல் தொகுதிகளுக்குப் பாராளுமன்ற உறுப்பின ராக அங்கம் வகித்த ஒரேயொருவர் - R. G. சேனநாயக்க இவர் 1956 - 1960 வரை களனி, தம்பதெனிய ஆகிய இரு தொகுதிகளுக்குப் பாராளு மன்ற உறுப்பினராக இருந்தமை குறிப்பிடத்தக்கது.
- கொழும்பு - கண்டி வீதியை 1802ஆம் ஆண்டு சேர் எட்வேட் பாண்ஸ் திறந்து வைத்தார்.
- இரண்டாம் பராக்கிரமபாகு மன்னனால் எழுதப்பட்ட பெருங்காவியம் - கவிசிலுமின.
- முதலாவதாக வந்த சிங்களச் செய்திப் பத்திரிகை - சிங்கள ஹட.
- இலங்கையில் கோப்பி பயிர்ச்செய்கை 1823இல் சேர் எட்வேட் பாண்ஸ் எனும் ஆளுனரின் ஊக்கமளித்தலின் மூலம் ஆரம்பமாகியது.
- 17ஆம் நூற்றாண்டிலே மலையக இராச்சியத்தின் சிறைக் கைதியாக இருந்த "றொபேர்ட் நொக்ஸ்" என்பவரால் இலங்கை குறித்து எழுதப் பட்ட நூல் - Historical Relations of the Island of Ceylon
- கண்டியிலுள்ள தலதா மாளிகையைக் கட்டியது முதலாம் விமலதர்ம சூரிய. புனித தந்த தாது தலதா மாளிகையில் வைக்கப்பட்டுள்ளது.
- இலங்கையில் ஒழுங்கமைத்த முறையிலான சனத்தொகைக் கணக் கெடுப்பு முதன்முதலாக 1871ஆம் ஆண்டு நடத்தப்பட்டது. இறுதியாக சனத்தொகைக் கணிப்பீடு நாடளாவிய ரீதியில் 2001ஆம் ஆண்டில் இடம்பெற்றது. இது 13ஆவது தேசியக் குடிசன மதிப்பீடாகும்.
- 1876ஆம் ஆண்டில் ஆங்கிலேயர் பிரேசில் நாட்டிலிருந்து இறப்பர் விதைகளை இங்கு கொண்டு வந்ததிலிருந்து இறப்பர் பயிர்ச்செய்கை ஆரம்பமானது.
- இலங்கை ஆசிரியரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான M. G. மெண்டிஸ் அவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க ஒக்ரோபர் 06ஆம் திகதி சர்வதேச ஆசிரியர் தினமாகக் கொண்டாடப்படுகின்றது.

- 1990 இல் கோஸ்டாரிக்காவில் நடைபெற்ற உலக ஆசிரியர் சம்மேளன மகாநாட்டில் இத்தினத்தைக் கொண்டாடுவதெனத் தீர்மானிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

- 1984இல் ஜமேய்க்காவின் தலைநகரான ''கிங்ஸ்டன்'' நகரில் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் குடியிருப்பு ஆணைக்குழு மகாநாட்டின் மூலம் ஒக்ரோபரில் சர்வதேசக் குடியிருப்புத் தினம் கொண்டாடப்படுகின்றது.
    - சர்வதேசக் குடியிருப்புத் தினம் கொண்டாடப்பட வேண்டுமென்ற தீர்மானத்தை இலங்கையின் அப்போதைய பிரதமரான ரணசிங்க பிரேமதாஸ அவர்களே இம் மகாநாட்டில் கோரிக்கையாக முன் வைத்தமை குறிப்பிடத்தக்கது.
    - 1985ஆம் ஆண்டிலிருந்து ஒவ்வொரு வருடமும் ஒக்ரோபர் மாதத்தில் வரும் முதல் தினங்களில் சர்வதேச குடியிருப்பு தினம் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது.
- கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையம் 1957 நவம்பர் 17இல் இலங்கைக்குச் சொந்தமாகியது.
- கொழும்புத் துறைமுகம் 1958 ஒக்ரோபர் 01ஆம் திகதி தேசிய மயமாக்கப் பட்டது.
- மகாபோதி சங்கங்களை இலங்கையிலும் இந்தியாவிலும் நிறுவியவர் அநகாரிக தர்மபால. பௌத்த சமயத்தின் மறுமலர்ச்சிக்காகவும், அந்நிய மதங்களிலிருந்து பௌத்த சமயத்தை காப்பாற்றுவதற்காகவும் மகாபோதி சங்கங்களை அநகாரிக தர்மபால நிறுவினார்.
- இலங்கையை ஆண்ட முதல் போர்த்துக்கேயத் தளபதி - அசவேடோ
- ஐக்கிய நாடுகள் சபையில் 1955. 12. 14இல் இலங்கை உறுப்புரிமை பெற்றது.
- இலங்கையில் ரூபா சதக் குற்றி நாணயங்கள் புழக்கத்திற்கு வந்த ஆண்டு - 1872.
- தாள் நாணயங்கள் புழக்கத்திற்கு வந்த ஆண்டு - 1885
- இலங்கையில் அதிக தடவைகள் வரவு - செலவுத் திட்டத்தை தயாரித்து பாராளுமன்றத்தில் சமர்ப்பித்த ஒரேயொரு நிதியமைச்சர் - ரொனி டிமெல். இவர் 1977 முதல் ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தில் நீண்ட காலம் நிதியமைச்சர் பதவியை வகித்தமை குறிப்பிடத்தக்கது.
- முதன்முதலாக அமைக்கப்பட்ட புகையிரதப் பாதை கொழும்பு - கண்டிப் புகையிரதப் பாதை.

- முதன்முதலாக இலங்கையில் ஆரம்பிக்கப்பட்ட அரசியல் கட்சி - சமசமாஜக் கட்சி.

- ''சிகிரியா குகை ஓவியங்கள்'' காணப்படும் மலைக் கோட்டையைக் கட்டியவன் - காசியப்பன்.

- அநுராதபுரத்தை முதன் முதலில் இராசதானியாக்கிய மன்னன் - பண்டு காபயன்.

- இலங்கையையும் இந்தியாவையும் பிரிக்கும் பாக்குநீரிணையை முதன் முதலில் நீந்திக் கடந்தவர் என்ற பெருமையைப் பெறுபவர் - மு. நவரத்தினசாமி

- இலங்கையில் பௌத்த மதம் உருவாகி வளர வித்திட்டவர் - மகிந்த தேரோ

- இலங்கையின் தேசியப் பத்திரிகையின் ஆசிரியராகப் பதவி வகித்த முதல் பெண்மணி - ரீட்டா செபஸ்தியன். இவர் TIMES OF CEYLON எனும் ஆங்கிலப் பத்திரிகைக்கு ஆசிரியராக இருந்தார்.

- சிங்கள மொழி இலக்கியத் துறைக்கு அளப்பரிய சேவை செய்தவர் பேராசிரியர் எதிரி வீர சரத்சந்திர. இலங்கை பாரம்பரியக் கலைகளின் முன்னோடி எனவும் இவரைப் போற்றுகின்றனர். பிலிப்பைன்ஸ் அரசினால் வழங்கப்பட்டுவரும் ''ரமன் மச்சே சே'' விருதையும் இவர் சிங்கள இலக்கியத் துறைக்காகப் பெற்றுள்ளார். ''சிங்கபாகு, மகாசாரா'' உள்ளிட்ட பல வரலாற்றுச் சிறப்புமிக்க நாடகங்களை எழுதி மேடை ஏற்றியமையும் குறிப்பிடத்தக்கது.

- ஒலிம்பிக் போட்டிகளுக்குச் சென்ற இலங்கை அணிக்கு முதன் முதலில் தலைமை தாங்கிய பெண் - புஸ்பமாலி ராமநாயக்க. 1996 அமெரிக்காவின் அற்லான்ராவில் நடைபெற்ற 26ஆவது ஒலிம்பிக் போட்டியில் பங்கேற்ற இலங்கை அணிக்கு இவர் தலைமை தாங்கியமை குறிப்பிடத்தக்கது.

- இலங்கை இடதுசாரி இயக்கத்தின் முதுபெரும் தலைவியாக இருந்தவர் திருமதி - விவியன் குணவர்த்தன. இலங்கா சமசமாஜக் கட்சியைச் சேர்ந்த இவர் 1996இல் காலமானார்.

- ''திரிபோஷா'' நிகழ்ச்சித் திட்டம் ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு - 1973

- ''நாஸா''(NASA) எனப்படும் அமெரிக்க விண்வெளி ஆய்வு நிகழ்ச்சி அமைப்பின் பகுதி ஒன்றுக்கு தலைவராகக் கடமையாற்றிய இலங்கையர் - பேராசிரியர் சிறில் பொன்னம்பெரும.

- இலங்கையில் ஒல்லாந்தர் காலத்தில் அர்ப்பணிப்புடன் கிறிஸ்தவ மதப்பணி புரிந்த யோசப் வாஸ் அடிகளாரை பாப்பரசர் இரண்டாவது அருளப்பர் சின்னப்பர் 1995ஆம் ஆண்டு இலங்கைக்கு வந்து புனித ராகத் திருநிலைப்படுத்தி முத்திப்பேறு பெற்றவராக பட்டமளித்தார்.

- இலங்கையின் முதலாவது பெண் பிரதமராக ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க 1960 ஜூலை 20ஆம் திகதி பதவியேற்றார். உலகின் முதலாவது பெண் ஆட்சித் தலைவர் என்ற பெருமையையும் இவர் பெறுகின்றார்.

- இலங்கையின் முதலாவது பெண் மாகாண முதலமைச்சர், பெண் ஜனாதிபதி ஆகிய பெருமைகளுக்கு உரியவர் - சந்திரிக்கா பண்டார நாயக்க குமாரதுங்க.

- நாட்டின் முதலாவது பெண்கள் பாடசாலையாக வட மாகாணத்தில் உடுவில் மகளிர் கல்லூரி 1824ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது.

- பங்கீட்டுத் திட்டத்தின் கீழ் இலவச அரிசி வழங்கும் திட்டம் ஆரம்பிக்கப் பட்ட ஆண்டு - 1965.

- இலங்கையின் முதலாவது தமிழ்த்துறைப் பேராசிரியர் - சுவாமி விபுலானந்தர்.

- இலங்கையில் மாகாண சபைகள் நிர்வாகமுறை ஏற்படுத்தப்பட்ட ஆண்டு - 1988. 1987 ஜூலை 29ஆம் நாள் கையெழுத்திடப்பட்ட இலங்கை - இந்திய சமாதான உடன்படிக்கையின் மூலமே மாகாண சபையெனும் நிர்வாக அலகு நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டது.

- இலங்கையில் தமிழ்மொழியில் முதன்முதலில் வெளியாகிய நாளிதழ் அல்லது பத்திரிகை - உதயதாரகை. இது 1841ஆம் ஆண்டு அமெரிக்க மிசனரியால் வெளியிடப்பட்டது. இன்றுவரையும் தொடர்ந்து வெளிவரு கின்றது.

- சிங்கள இராச்சியத்தின் முதலாவது தலைநகரம் - அநுராதபுரம்

  சிங்கள இராச்சியத்தின் இரண்டாவது தலைநகரம் - பொலனறுவ

- முதலாவதாகக் கட்டப்பட்ட வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஸ்தூபி - தூபராம தாபகே

- பிரித்தானியரின் ஆட்சிக் காலத்தில் இந்து மதத்தின் மேம்பாட்டிற் காகவும், மறுமலர்ச்சிக்காகவும் பாடுபட்டவர் - ஆறுமுக நாவலர்

  பௌத்த மதத்தின் மேம்பாட்டிற்காகப் பாடுபட்டவர் - அநகாரிக தர்மபால.

  இஸ்லாமிய மதத்தின் மேம்பாட்டிற்காகவும், மறுமலர்ச்சிக்காகவும் பாடுபட்டவர் - M. C. சித்திலெப்பை

- இலங்கைக்கு வந்த முதல் ஐரோப்பியர் - மார்க்கோ போலோ
  இலங்கைக்கு வந்த முதல் அராபியர் - இபன் பதூதா

- இலங்கையில் புத்த மதம் தோன்றிய 2500 ஆண்டு நிறைவு குறித்தான புத்த ஜெயந்தி கொண்டாடப்பட்ட ஆண்டு - 1957

- இலங்கையில் ஒல்லாந்தர் ஆட்சிக் காலத்தில்தான் அச்சுக்கலை அறிமுகமாகியது.
  - முதலாவது அச்சு நூல் 1737ஆம் ஆண்டில் சிங்கள மொழியில் வெளியாகியது.

- ஐக்கிய நாடுகள் சபையின் வலிமைமிக்க அமைப்பான பாதுகாப்புச் சபையில் இலங்கை 1962ஆம் ஆண்டில் உறுப்புரிமை பெற்றிருந்தது.

- "அணிசேரா இயக்க (NAM) தலைவர்கள்" பங்கேற்ற உச்சி மகாநாடு 1976 ஆம் ஆண்டு இலங்கையில் நடைபெற்றது.
  - பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மகாநாட்டு மண்டபத்தில் (BMICH) நடைபெற்ற அந்நிகழ்வுக்கு அப்போது சிறீமாவோ பண்டாரநாயக்க தலைமை வகித்தார்.

- இலங்கையில் முதலாவது அஞ்சல் முத்திரை 1857ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது.
  - முதலாவது அஞ்சல் அலுவலகம் 1895ஆம் ஆண்டு கொழும்பில் திறந்து வைக்கப்பட்டது.
  - உபதபால் அலுவலக முறை இலங்கையில் அறிமுகம் செய்து வைக்கப்பட்ட ஆண்டு - 1921

- இலங்கையில் தொழிற்சங்கத்தை முதன்முதலில் உருவாக்கியவர் - A. E. குணசிங்க.
  - இதனால் இவரை இலங்கை தொழிற் சங்க இயக்கத்தின் தந்தை யெனப் போற்றுகின்றனர்.

- இலங்கையின் முதலாவது கூட்டுறவுச் சங்கம் 1912ஆம் ஆண்டு மாத்தறை மாவட்டத்தின் வெல்லபொடபத்து கிராமத்தில் வைத்து ஆரம்பிக்கப்பட்டது. கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரி 1943 ஜூலை மாதம் கண்டி, பொல்கொல்லையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இதே ஆண்டில்தான் பாவனையாளர் கூட்டுறவுச் சங்கமும் உருவாக்கப்பட்டது.
  - 1957ஆம் ஆண்டில் பாவனையாளர் கூட்டுறவுச் சங்கங்கள் யாவும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களாக (MPCS) மாற்றியமைக்கப் பட்டன. இலங்கை கூட்டுறவு இயக்கத்தின் முன்னோடியாக காலஞ்சென்ற அமைச்சர் A. இரட்ணாயக்க கூறப்படுகின்றார்.

- கிராம சேவகர்கள் முறை அறிமுகமான ஆண்டு - 1963

- இலங்கையில் முதன்முதலில் தோன்றிய செய்தித்தாள் - கொழும்பு ஜேணல் (Colombo Journal)

- இலங்கையை ஆட்சி செய்த முதலாவது அரசி - அனுலா

- முதன்முதலாகச் சட்ட நிரூபண சபைக்குத் தெரிவு செய்யப்பட்ட கல்வி கற்ற இலங்கையர் அல்லது படித்த இலங்கையர் - சேர் பொன் இராமநாதன்.

- 1833ஆம் ஆண்டு கோல்புறூக் விசாரணைச் சபையின் சீர்திருத்தத்தின் பிரகாரம் இலங்கை வடக்கு, கிழக்கு, மேற்கு, தெற்கு, மத்தி என 5 மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டது. சட்ட நிரூபண சபையும், சட்ட நிருவாக சபையும் இந்த ஆண்டில்தான் நிறுவப்பட்டன.

- 1910இல் மக்கலம் கால அரசியல் சீர்திருத்தங்கள் ஏற்பட்டது. கல்வி கற்ற இலங்கையருக்குப் பிரதிநிதியைத் தெரிவு செய்யும் உரிமை வழங்கப் பட்டது.

- 1924இல் மன்னிங் கால இரண்டாவது அரசியல் சீர்திருத்தங்கள் ஏற்பட்டது.

- 1931ஆம் ஆண்டில் டொனமூர் அரசியல் யாப்பு ஏற்படுத்தப்பட்டது. இவ்யாப்பின் கீழ் இடம்பெற்ற முக்கிய அம்சங்கள் வருமாறு

    - சர்வசன வாக்குரிமை (21 வயதுக்கு மேற்பட்ட ஆண்களுக்கும் பெண்களுக்கும் வாக்குரிமை)
    - பிரதேசவாரிப் பிரதிநிதித்துவம்
    - அரசுக் கழகம்
    - நிருவாகக்குழு முறைமை

  61 உறுப்பினர்களைக் கொண்ட அரசுக் கழகம் ஏற்படுத்தப்பட்டது. இதில் 50 பேர் சர்வசன வாக்குரிமை மூலமும், 03 பேர் அரச அலுவலராகவும், 08 பேர் ஆளுநர் மூலமும் நியமிக்கப்பட்டனர்.

- 1947இல் சோல்பரி அரசியல் யாப்பின் கீழ் முதலாவது பொதுத்தேர்தல் நடைபெற்றது. செனற் சபை, பிரநிதிகள் சபை என்பன நிறுவப்பட்டது. இவ் ஆண்டில்தான் உள்ளூர் விமான சேவை ஆரம்பித்து வைக்கப் பட்டது.

- இலங்கை 1948ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 04ஆம் திகதி பிரித்தானியக் குடியேற்ற ஆட்சியாளர்களிடமிருந்து அரசியல் சுதந்திரம் பெற்றுக் கொண்டது. ஆண்டு தோறும் பெப்ரவரி 04ஆம் திகதி சுதந்திர தினமாகக் கொண்டாடப்பட்டு வருகின்றது.

- 1950ஆம் ஆண்டு வாளேந்திய சிங்கக்கொடி இலங்கையின் தேசிய கொடியாகப் பிரகடனம் செய்யப்பட்டு பறக்க விடப்பட்டது.

- சுதந்திர இலங்கையின் முதலாவது பிரதமர் - D. S. சேனநாயக்கா

- இலங்கைப் பாராளுமன்றத்தில் 1972 மே 22ஆம் திகதி இலங்கை சோசலிச ஜனநாயக குடியரசு யாப்பு நிறைவேற்றப்பட்டது. இந்த யாப்பை முதலாவது குடியரசு யாப்பு என அழைகின்றனர்.

  - இதனை உருவாக்கியவர் - கலாநிதி கொல்வின் R. D. சில்வா

  - மேற்படி யாப்பின் மூலம் இலங்கையில் பிரித்தானிய மகாராணியின் பிரதிநிதியாகக் கடமையாற்றிய ஆளுநர் அல்லது மகாதேசாதிபதி எனும் பதவி ஒழிக்கப்பட்டது. அதற்குப் பதிலாகச் சம்பிரதாயபூர்வ ஜனாதிபதி பதவி முறை ஏற்படுத்தப்பட்டது.

  - அவ்வாறு பதவி வகித்த முதலாவது ஜனாதிபதி - வில்லியம் கோபல்லாவ.

  - முதலாவது குடியரசு யாப்பு நிறைவேற்றப்பட்ட மே 22ஆம் நாள் இலங்கையில் தேசிய வீரர் தினமாகவும், குடியரசு தினமாகவும் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது.

- 1978ஆம் ஆண்டு இலங்கை அரசியல் வரலாற்றில் குறிப்பிடத்தக்க முதன்மை வாய்ந்த நிகழ்வொன்று நடைபெற்றது.

  - பாராளுமன்றத்தில் இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு யாப்பு மிக அறுதிப் பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேற்றப்பட்டதே அந்த நிகழ்வு. இந்த யாப்பின் அல்லது அரசியலமைப்பின் மூலம் பிரதமரை ஆட்சித் தலைவராகக் கொண்ட ஆட்சி முறை ஒழிக்கப் பட்டது.

  - அதற்குப் பதிலாகச் சர்வ வல்லமை பொருந்திய நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சிமுறை வந்தது.

  - நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதிப் பதவியை முதன் முதலாக வகித்தவர் - J. R. ஜெயவர்த்தன.

  - மேற்படி அரசியலமைப்பு இரண்டாவது குடியரசு யாப்பு எனவும் அழைக்கப்படுகின்றது. இந்த யாப்பின் மூலம் இலங்கைப் பாராளு மன்றத்திற்கு விகிதாசாரப் பிரதிநிதித்துவத் தேர்தல் முறைப்படி உறுப்பினர்களைத் தெரிவு செய்யும் முதலாவது பொதுத்தேர்தல் 1989 பெப்ரவரி 15ஆம் திகதி நடைபெற்றது. இதற்கு காரணம் 1982இல் சர்வஜன வாக்கெடுப்பின் மூலம் பாராளுமன்றத்தின் பதவிக்காலம் ஆறு வருடங்களால் நீடிக்கப்பட்டதனாலாகும்.

- விகிதாசாரப் பிரதிநிதித்துவத் தேர்தல் முறை மூலம் 22 தேர்தல் மாவட்டங்களிலிருந்தும் மக்களின் வாக்களிப்பின் மூலம் 196 பாராளுமன்ற உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படுவார்கள்.

- கட்சிகள் நாடளாவிய ரீதியில் பெறும் வாக்குகளின் விகிதாசாரத்தின் அடிப்படையில் 19 உறுப்பினர்கள் பாராளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்படுவார்கள். இது தேசியப்பட்டியல் முறையிலான நியமனமென அழைக்கப்படுகின்றது. ஆகவே தற்போது பாராளு மன்றத்தில் அங்கம் வகிக்கும் உறுப்பினர்களின் எண்ணிக்கை 225 (196, 29) ஆகும். 1978ஆம் ஆண்டு ஆக்கப்பட்ட புதிய அரசியல் அமைப்பின்படி ஜனாதிபதி நாட்டினதும் பாராளுமன்றத்தினதும் அமைச்சரவையினதும் முப்படைகளினதும் தலைவராக இருப்பார். அத்துடன் அமைச்சரவையில் ஒரு உறுப்பினராகவுமிருப்பார். தேர்தல் ஒன்றின் மூலம் தெரிவு செய்யப்படும் ஜனாதிபதியின் பதவிக்காலம் 6 ஆண்டுகளாக இருக்கும். ஜனாதிபதி பதவியை ஒருவர் தொடர்ச்சியாக இரு தடவைக்குமேல் வகிக்கமுடியாது. சந்தர்ப்பங்கள் ஏற்படும்போது ஜனாபதிக்குப் பதிலாகக் கடமை புரியும் பொறுப்பு பிரதமரைச் சார்ந்தது ஆகும். எக் காரணம் கொண்டாவது ஜனாதிபதியின் பதில் கடமைகளைப் பிரதமராலும் ஆற்ற முடியாதிருப்பின் சபாநாயகர் ஜனாதிபதியின் கடமைகளை ஆற்றுவார். ஜனாதிபதிப் பதவி அப்பதவியை வகிப்பவரின் கால எல்லை முடிவடைய முன் வெற்றிடமாக வந்தால் பாராளுமன்றம் தம் உறுப்பினர் ஒருவரை அப்பதவிக்குத் தெரிவு செய்யும். அவ்வாறு தெரிவு செய்யப்பட்டவர் அப்பதவிக்குரிய எஞ்சிய காலப்பகுதிக்கு மாத்திரமே ஜனாதிபதியாகப் பதவி வகிப்பார்.

- முன்னர் நடைமுறையிலிருந்த கிராமசபை, பட்டினசபை என்பவற்றை ஒன்றாக இணைத்து ''பிரதேச சபை'' எனும் உள்ளூராட்சி நிர்வாக அலகு உருவாக்கப்பட்ட ஆண்டு - 1988

- இலங்கையில் ஒலிபரப்புச் சேவைக்கெனப் பிரித்தானியரால் 1925ஆம் ஆண்டு கொழும்பு ஒலிபரப்பு நிலையம் ஆரம்பிக்கப்பட்டது.

  - சுதந்திரத்தின் பின் இந்நிலையம் 1949 ஒக்ரோபர் 01இல் இலங்கை வானொலி (Radio Ceylon) எனப் பெயர் மாற்றம் பெற்றது.

  - வர்த்தக சேவை 1951 ஏப்ரல் முதல் சிங்களத்திலும், தமிழிலும் ஆரம்பமானது.

  - இலங்கை வானொலி 1967ஆம் ஆண்டில் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனமாக (SLBC) மாற்றப்பட்டது.

- தொலைக்காட்சிச் சேவை 1978ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது. இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம் ஜப்பானிய அரசாங்கத்தின் நன்கொடையாகக் கட்டிக் கொடுக்கப்பட்டு 1982 பெப்ரவரி 12இல் திறந்து வைக்கப்பட்டது.
  - ரூபவாஹினியில் கல்விச் சேவை ஒளிபரப்பு 1986ஆம் ஆண்டு ஆரம்பமாகியது.

- இலங்கையிலுள்ள சர்வதேச தரம் வாய்ந்த மகாநாட்டு மண்டபம் - பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மகாநாட்டு மண்டபம் (BMICH). இது சீன அரசாங்கத்தின் நன்கொடையாக நிர்மாணிக்கப்பட்டு 1973ஆம் ஆண்டில் திறந்து வைக்கப்பட்டது.

- சுதந்திர வர்த்தக வலயம் (FTZ) எனும் அமைப்பை ஏற்படுத்துவதற்காக இயற்றப்பட்ட சட்டம் - பாரிய கொழும்புப் பொருளாதார ஆணைக்குழுச் சட்டம். இலங்கையின் முதலாவது சுதந்திர வர்த்தக வலயம் அல்லது ஏற்றுமதி மேம்பாட்டு (ஊக்குவிப்பு) வலயம் 1978ஆம் ஆண்டு கட்டுநாயக்க எனும் இடத்தில் அமைந்தது. இவ் அமைப்பிற்குப் பொறுப் பாகத் தற்போதுள்ள அரசதுறை நிறுவனம் - இலங்கை முதலீட்டுச் சபை (BOI). சுதந்திர வர்த்தக வலயம் உள்ள இடங்கள் - கட்டுநாயக்க, பியகம, கொக்எல, பல்லேகல. உலகின் முதலாவது சுதந்திர வர்த்தக வலயம் 1959ஆம் ஆண்டில் அயர்லாந்து நாட்டில் ஆரம்பிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

- செய்மதித் தகவல் தொடர்பு நிலையம் அமையப் பெற்றுள்ள இடம் - பாதுக்கை.

| நிறுவனங்கள் | அமைவிடம் |
|---|---|
| சோயா ஆராய்ச்சி நிலையம் | பள்ளேகல, கன்னறுவா |
| விவசாய நெல் ஆராய்ச்சி நிலையம் | மகாஇலுப்பலம, பத்தலகொட |
| இறப்பர் ஆராய்ச்சி நிலையம் | அகலவத்தை |
| பருத்தி ஆராய்ச்சி நிலையம் | அம்பாந்தோட்டை |
| விவசாய கால்நடை ஆராய்ச்சி நிலையம் | மகாஇலுப்பலம |
| தாழ்ந்த பிரதேச தேயிலை ஆராய்ச்சி நிலையம் | கல்கம்பொல |
| ஆயுர்வேத ஆராய்ச்சி நிலையம் | நாவின்ன |
| தேயிலை ஆராய்ச்சி நிலையம் | தலவாக்கொல |

| நிறுவனங்கள் | அமைவிடம் |
|---|---|
| தென்னை ஆராய்ச்சி நிலையம் | லுணுவில |
| உருளைக்கிழங்கு ஆராய்ச்சி நிலையம் | நுவரெலியா |
| அரசினர் சுதேச வைத்தியக் கல்லூரி | பொரல |
| குஷ்டரோக வைத்தியசாலை | மாந்தீவு (மட்டக்களப்பு) |

| தொழிற்சாலைகள் | அமைவிடம் |
|---|---|
| கட்டிப் பால் | பொலனறுவ |
| பால் பதனிடுதல் | அம்பேவல |
| பால் பவுடர் (லக்ஸ்பிறே) | வெலிசறை |
| இறப்பர் பால் | மாவனல்ல |
| மட்பாண்டம் | ரத்தோட்ட, கங்கொட்டுவ, பிலியந்தல |
| ரயர் | களனி |
| உருக்கு | ஒறுவல |
| புடவை | வியாங்கொடை, பூகொட, துல்கிரிய |
| எண்ணெய் சுத்திகரிப்பு | சபுகஸ்கந்த |
| உலோகப்பொருள் | யக்கல |
| ஒட்டுப் பலகை | ஜின்தோட்ட |
| தோற்பொருள் | மட்டக்குளிய |
| காகிதம் | வாழைச்சேனை, எம்பிலிப்பிட்டிய, ராஜாங்கன |
| சீமெந்து | கந்தளாய், பெல்வத்த, ஹிங்குரான |

- அதிகளவில் நெல் பயிரிடப்படும் மாவட்டம் - குருணாகல்
- தொலமி என்பவர் இலங்கையைத் தப்ரபேன் எனத் தனது தேசப்படத்தில் குறித்துள்ளார்.
- தாவரவியற் பூங்காக்கள் உள்ள இடங்கள் - பேராதனை, ஹக்கல, கனேபத்த (கம்பஹா)
- தேசிய அடையாள அட்டை (NIC) வழங்கப்படும் முறை அறிமுகமான ஆண்டு - 1972. ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களம் 16 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் தேசிய அடையாள அட்டையை விநியோகித்து வருகின்றது.
- மிருகக்காட்சிச்சாலை உள்ள இடம் - தெகிவளை

  யானைகளின் சரணாலயம் உள்ள இடம் - பின்னவெல

பறவைகள் சரணாலயம் - குமண

வனவிலங்குப் புகலிடங்கள்
(சரணாலயம்) உள்ள இடங்கள் - யால, வில்பத்து, றுகுணு, உடவளவ, லக்கல.

- இலங்கையில் இன்றுள்ள ஒரேயொரு இயற்கை வனம் - சிங்கராஜ வனம். சப்பிரகமுவ மாகாணத்தில் அமையப் பெற்றுள்ள இவ்வனம் யுனெஸ்கோ (UNESCO) ஆல் உலகப் பண்பாட்டுப் பிரதேசங்களுள் ஒன்றாகப் பிரகடனம் செய்யப்பட்டுள்ளது. உயிரின வாழ்க்கைச் சூழல் அடிப்படையில் சிங்கராஜவனம் பாதுகாக்கப்பட வேண்டுமென யுனெஸ்கோ கூறியுள்ளது.

- ஸ்ரீலங்கா துறைமுக அதிகாரசபை (SLPA) 1979ஆம் ஆண்டு ஜூலையில் உருவாக்கப்பட்டது.

- கடவுச்சீட்டு (Pass Port) விநியோகத்துக்குப் பொறுப்பாக உள்ள நிறுவனம் - குடிவரவு, குடியகல்வுக் கட்டுப்பாட்டுத் திணைக்களம்.

- இலங்கை வங்கி 1939ஆம் ஆண்டு ஜூலை 01ஆம் திகதி திறந்து வைக்கப்பட்டது.

- தேசிய சேமிப்பு வங்கி 1972 மார்ச் இல் ஆரம்பிக்கப்பட்டது.

- நாட்டின் சுற்றுச்சூழல், சூழற்பாதுகாப்புக்கென 1980ஆம் ஆண்டின் தேசிய சுற்றாடல் சட்டத்தின் கீழ் 1981ஆம் ஆண்டு மத்திய சுற்றாடல் அதிகாரசபை (Central Enviromental Authority) நிறுவப்பட்டது. 1988ஆம் ஆண்டின் தேசிய சுற்றாடல் (திருத்தச்) சட்டத்தின் கீழ் இச்சபைக்குக் கூடியளவு அதிகாரங்கள் வழங்கப்பட்டது.

- லக்ஷபான மின் நிலையம் 1950 இல் ஆரம்பிக்கப்பட்டது.

- ஸ்ரீலங்கா மத்திய வங்கியின் தலைமையகம் கொழும்பில் அமைந்துள்ளது. மத்திய வங்கி 1950இல் நிறுவப்பட்டது. நாட்டில் மக்களின் பாவனைக்குரிய பணச்சுற்றோட்டத்திற்கான தாள்களையும் நாணயங்களையும் இவ் வங்கியே வெளியீடு செய்கிறது. மத்திய வங்கியின் பிராந்தியப் பணிமனை உள்ள இடங்கள் - அநுராதபுரம், மாத்தளை, மாத்தறை

- அரசின் நிர்வாக ரீதியான செய்திகளைத் தாங்கி வெளிவரும் அதிகார பூர்வமான ஏடு - வர்த்தமானி அல்லது அரச செய்திமடல். இது பிரதி வெள்ளிக்கிழமை தோறும் வெளிவருகின்றது. வர்த்தமானி 1802ஆம் ஆண்டில் முதன்முதலில் வெளியாகியது.

- நாடளாவிய ரீதியில் இயங்கி வந்த தனியார் போக்குவரத்து நிறுவனங்கள் அரசுடைமையாக்கப்பட்டு இலங்கைப் போக்குவரத்துச் சபை (இ. போ. ச) நிறுவப்பட்ட ஆண்டு - 1958

- இலங்கையில் கணக்காளர்களை உருவாக்கி வரும் நிறுவனம் இலங்கை முகாமைத்துவப் பட்டயக் கணக்கறிஞர் நிறுவனம். இது 1919ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது.

- நாட்டில் தற்போது போதைப் பொருள் பாவனை ஒரு சமுதாயத் தீங்காக இடம்பெற்று வருகின்றது. போதைப் பொருள் ஒழிப்பு, தடுப்பு நடவடிக்கையில் ஈடுபடவென அரசாங்கம் உருவாக்கியுள்ள நிறுவனம் - தேசிய அபாயகர ஔடத கட்டுப்பாட்டுச் சபை.

- இலங்கையில் புற்றுநோயாளர்களுக்குச் சிகிச்சையளிக்கும் தேசிய புற்று நோய் மருத்துவமனை அமையப் பெற்றுள்ள இடம் - மஹரகம

  - இலங்கை புற்றுநோய்த் தடுப்புச் சங்கம் ஆரம்பித்து வைக்கப்பட்ட ஆண்டு - 1948. புகைபிடிப்பதனாலேயே இலங்கையர்களுக்கு அதிகளவில் புற்றுநோய் ஏற்படுவதாகத் தடுப்புச் சங்கத்தின் ஆய்விலிருந்து தெரிய வந்துள்ளது.

- இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம், இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் என்பன 1962இல் நிறுவப்பட்டன.

- அரசாங்கத்தால் நாட்டின் தொலைத் தொடர்புச் சேவைக்கென 1982ஆம் ஆண்டு தொலைத் தொடர்புத் திணைக்களம் உருவாக்கப்பட்டது. இத் திணைக்களம் 1990இல் ஸ்ரீலங்கா ரெலிகொம் கூட்டுத்தாபனமாக மாற்றப்பட்டது. பின்னர் 1997ஆம் ஆண்டில் ஜப்பான் ரெலிபோன் ரெலிகிராப் கம்பனிக்கு 35% பங்குகள் விற்கப்பட்டு ஸ்ரீலங்கா ரெலிகொம் தனியார் மயமாகியது. தனியார்மய மூலதனக் கட்டமைப்பில் அரசின் மூலதனம் 61.5% உம் தொழிலாளர் பங்கு 3.5% உம் உள்ளன.

- எயர் லங்கா (Air Lanka) 1979. 09. 01 இல் நிறுவப்பட்டது.

- இலங்கையில் ஆகக்கூடிய மழைவீழ்ச்சியைப் பெறும் மாவட்டம் - இரத்தினபுரி.

| குளங்கள் | கட்டிய மன்னர்கள் |
|---|---|
| *மின்னேரியா* | *மகாசேனன்* |
| *அபயவீவா* | *பண்டுகாபயன்* |
| *கலாவீவா* | *தாதுசேனன்* |
| *பதவியா* | *மொகலானன்* |

- பெருங்குளங்களை முதலிற் கட்டிய மன்னன் - வசபன். மகாசேனன் ''மின்னேரியாவின் தெய்வம்'' எனப் போற்றப்படுகின்றான்.

- இலங்கையில் மிக உயரமான நீர்வீழ்ச்சி பரம்பகந்தை. வளவை கங்கையில் அமைந்துள்ளது. இது 240 m உயரமானது. அப்புத்தளை எனுமிடத்தில் பரம்பகந்தை உள்ளது.

- வெந்நீர் ஊற்றுக்கள் ஏழு உள்ள இடம் கன்னியா (திருகோணமலை)
- தேசிய இயற்கை அனர்த்த முகாமைத்துவ நிலையம் 1996ஆம் ஆண்டு அரசாங்கத்தால் நிறுவப்பட்டது.
- கொழும்பைத் தலைமையகமாகக் கொண்டு இயங்கும் இந்த நிறுவனம் வெள்ளம், புயல், வறட்சி ஆகிய இயற்கை அனர்த்தங்களை முற்கூட்டியே அறிந்து அதனைத் தடுப்பதற்கான முகாமை நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றது.
- நாட்டில் தொல்பொருட்கள் அல்லது புராதன பொருட்கள் அதிகமாகக் காணப்படும் இடம் - அநுராதபுரம்.
- தெங்கு முக்கோண வலயம் எனச் சிறப்பாக அழைக்கப்படும் மாவட்டங்கள் - குருணாகல், சிலாபம், கொழும்பு.
- ஆகக் கூடிய சராசரி வெப்பநிலை உள்ள மாவட்டம் - திருகோணமலை.
  ஆகக் குறைந்த சராசரி வெப்பநிலை உள்ள மாவட்டம் - நுவரெலியா.
- **இலங்கையில்....**
  - மிக நீளமான ஆறு - மகாவலி கங்கை. இதன் நீளம் 335 km.
  - மிக உயரமான மலை - பீதுறுதலாகால மலை. உயரம் 2524 m.
  - மிக உயரமான குன்று - கொக்காகல.
  - மிகப் பெரிய குளம் அல்லது ஏரி - சேனநாயக்க சமுத்திரம்.
- கலாசார முக்கோண வலயம் அல்லது பண்பாட்டு முக்கோண வலயம் எனச் சிறப்பாக அழைக்கப்படும் மாவட்டங்கள் - அநுராதபுரம், பொலநறுவ, கண்டி.
- மூவின மக்களும் வழிபடச் செல்லும் புனிதமலை - சிவனொளிபாத மலை அல்லது ஸ்ரீபாத.
- இலங்கையின் புகழ்பூத்த குகை ஓவியங்கள் - சிகிரியா.
  இந்தியாவில் - அஜந்தா.
- இலங்கையின் தற்போதைய பாராளுமன்றம் அமைந்துள்ள இடம் - ஸ்ரீஜயவர்த்தனபுர.
  - இப்பாராளுமன்றத்தைச் சுற்றி தியவன்ன ஓயா என்னும் ஆறு ஓடுகின்றது.
  - பாராளுமன்றம் ஜப்பானிய அரசின் நன்கொடையாக நிர்மாணிக்கப் பட்டு 1982ஆம் ஆண்டில் திறந்து வைக்கப்பட்டது.
- பௌத்த மதத்தின் தேரவாதப் பிரிவு இலங்கையில் பெரும்பான்மையான பௌத்தர்களால் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது.

- "மும்மணிகள்" எனப் போற்றப்படுபவை - புத்தம், தர்மம், சங்கம்.
- இலங்கையில் மிக நீளமான பாலம் - வேலணை புங்குடுதீவுப் பாலம்.
  - இது 03 மைல்கள் நீளமானது.
- **உத்தியோகபூர்வ வதிவிடங்கள். . . . .**

  ஜனாதிபதி - ஜனாதிபதி மாளிகை

  பிரதமர் - அலரி மாளிகை

  சபாநாயகர் - மும்தாஜ் மஹால்
- இலங்கையின் ஐம்பெரும் வாவிகளென அழைக்கப்படுபவை - மகாவிலாச்சியா, மகாகந்தறவா, வவுனிக்குளம், பதவியா, பாவற்குளம்.
- துரித மகாவலி அபிவிருத்தித் திட்டத்தின் கீழ்வரும் திட்டங்களும் உதவி வழங்கிய நாடுகளும்

  கொத்மலை - சுவீடன்

  விக்டோறியா - பிரித்தானியா

  ரந்தெனிகல - ஜேர்மனி

  பொல்கொல்ல - ஜப்பான்

  மதுறு ஓயா - கனடா
- இலங்கையின் முக்கியமான இயற்கைத் துறைமுகம் அமைந்துள்ள இடம் - திருகோணமலை.
- ஐ. நா. சபையின் சர்வதேச நீதிமன்றத்தில் பணியாற்றிய இலங்கை நீதிபதியின் பெயர் - வீரமந்திரி.
- இலங்கைப் பாராளுமன்றத்தில் 1996ஆம் ஆண்டு $2/3$ க்கும் மேற்பட்ட பெரும்பான்மை வாக்குகளால் மனித உரிமைகள் சட்டம் நிறைவேறியது.
- இலங்கை பாராளுமன்றத்தில் உறுப்பினர்களால் ஆற்றப்படும் உரை களைப் பதிவு செய்யும் ஏடு "ஹன்சாா்ட்" என அழைக்கப்படுகின்றது.
- இலங்கையின் புகையிரதச் சேவை 1876ஆம் ஆண்டு ஆரம்பிக்கப் பட்டது.

* * *

> 'போர்க்களத்திலே பெறக்கூடிய சில வெற்றிகளை இழக்கக் கூட நான் சம்மதிப்பேன். ஆனால், காலம் வீணாக்கப்படுவதை, இழக்கப் படுவதை மட்டும் ஒருபோதும் நான் விரும்பமாட்டேன்.'
>
> நெப்போலியன் போனபார்ட்

## இலங்கையின் கல்வித்துறை

- இலவசக் கல்வித்திட்டம் அறிமுகப்படுத்தப் பட்ட ஆண்டு - 1945
  - C. W. W. கன்னங்கரா கல்வி அமைச்சராக இருந்தபோது இத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டதால் அவரை ''இலவசக் கல்வியின் தந்தை'' எனப் போற்றுகின்றனர். 1943ஆம் ஆண்டில் கன்னங்கரா குழுவின் அறிக்கை வெளியாகியது.
- இலண்டன் பல்கலைக்கழகக் கல்லூரியுடன் இணைந்ததாக கொழும்பில் இலங்கைப் பல்கலைக்கழகக் கல்லூரி 1921ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது. இலங்கைப் பல்கலைக் கழகக் கல்லூரியையும் இணைத்துக் கொழும்பில் இலங்கைப் பல்கலைக்கழகம் 1942ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது. இதன் முதலாவது துணை வேந்தராகப் பதவி வகித்த முதலாவது இலங்கையர் - சேர் நிக்கலஸ் அட்டிகல.
- யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கல்லூரி 1972ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது. 1974 ஒக்ரோபர் முதல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகமாகத் தரம் உயர்த்தப்பட்டது. அமைவிடம்: திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

- மட்டக்களப்புப் பல்கலைக்கழகக் கல்லூரி 01. 08. 1981இல் ஆரம்பிக்கப் பட்டது.
    - பின்னர் 01. 10. 1986இல் இது கிழக்குப் பல்கலைக்கழகமாகத் தரமுயர்த்தப்பட்டது.
    - அமைவிடம், வந்தாறுமூலை, மட்டக்களப்பு.
- இலங்கைப் பல்கலைக்கழகச் சட்டத்தின் கீழ் நாட்டின் உயர்கல்வித் துறையில் 1980ஆம் ஆண்டு இலங்கை திறந்த பல்கலைக்கழகம் நிறுவப்பட்டது. இதன் தலைமையகம் கொழும்பு மாவட்டத்தின் நாவல, நுகேகொட எனுமிடத்தில் உள்ளது. இதன் துணைவேந்தர் பதவியை முதன்முதலில் வகித்தவர் - பேராசிரியர் D. P. குணதிலக. இலங்கையின் தேசிய பல்கலைக்கழகங்களில் ஒன்றாக இலங்கை திறந்த பல்கலைக் கழகமும் கணிக்கப்படுகின்றது.
- பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு எனும் நிறுவனம் 1978ஆம் ஆண்டில் இலங்கைப் பல்கலைக்கழகச் சட்டத்தின் மூலம் நிறுவப் பட்டது.
    - இந்த நிறுவனம் இலங்கையின் தேசிய பல்கலைக்கழகங்களினது நிர்வாகத்திற்குப் பொறுப்பாக இருப்பதுடன் பல்வேறு பீடங் களுக்கும் மாணவர்களைத் தெரிவு செய்து அனுமதியும் வழங்கு கின்றது.
- இலங்கையின் தேசிய பல்கலைக்கழகங்களில் கல்வி பயிலும் வறிய மாணவர்களுக்கு உதவுவதற்காக 1986ஆம் ஆண்டில் ''மகாபொல நம்பிக்கை நிதியம்'' ஏற்படுத்தப்பட்டது. 1981ஆம் ஆண்டு முதல் வறிய மாணவர்களுக்கும், அதி திறமைப் புள்ளிகளுடன் பல்கலைக்கழகம் தெரிவாகும் மாணவர்களுக்கும் மகாபொல புலமைப்பரிசில் வழங்கப் பட்டு வருகின்றது.
- இளைஞர் அமைதியின்மை தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் சிபாரிசின் பேரில் 1989ஆம் ஆண்டு நாட்டின் உயர்கல்வித்துறை வரலாற்றில் ''இணைக்கப்பட்ட பல்கலைகழகக் கல்லூரி'' முறை அறிமுகம் செய்யப்பட்டது.
    - 1991முதல் செயற்பட ஆரம்பித்த இக்கல்லூரி முறையை 1996ஆம் ஆண்டு முதல் அரசாங்கம் நிறுத்தியது.
    - இக் கல்லூரிகள் ஒவ்வொரு பல்கலைக்கழகத்துடனும் இணைக் கப்பட்டு அவற்றுக்கு பல்கலைக்கழக அந்தஸ்து வழங்கப் பட்டுள்ளது.

- இலங்கைப் பல்கலைக்கழகங்களில் தாய்மொழி மூலம் அல்லது சுதேச மொழி மூலம் பட்டப்படிப்புக் கற்கைகள் உருவான ஆண்டு - 1960

- இலங்கை முஸ்லிம்களது கல்விவளர்ச்சியில் முதன்மை வாய்ந்த நிறுவனமாக ஜாமி ஆ நளீமியா உள்ளது. இக் கலாநிலையம் 1973ஆம் ஆண்டு அன்றைய கல்வி அமைச்சர் பதியுதீன் மஹ்முத் அவர்களால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

  - நளீம் ஹாஜியார் என்ற தனவந்தரால் இக் கலாநிலையமும் இஸ்லாமிய மறுமலர்ச்சி இயக்கமும் உருவாக்கப்பட்டன. இங்கு 07 வருடங்கள் கல்வி கற்று வெளியேறுபவர்கள் இரு நிலைப் பட்டங்களோடு வெளியேறுகிறார்கள். அவ் இரு துறைகள், இஸ்லாமிய அரபுத் துறை, கலைமாணி.

- பாடசாலைகளில் வகுப்பு நிலைகள் முன்னர் தரம் (Grade) எனக் குறிப்பிடப்பட்டது.

  - 1984ஜனவரியிலிருந்து இம்முறை ஆண்டு (Year) என மாற்றப் பட்டது. இதன்படி முன்னர் முதலாம் தரம் (Grade1) என இருந்தது. இரண்டாம் ஆண்டு (Year 2) என ஆகியது. காரணம் பாலர் வகுப்பு எனும் முறைமை நீக்கப்பட்டு அவ்வகுப்பு ஆண்டு 1 (Year 1) என ஆகியது.

- இலங்கை ஆசிரியர் சேவை 06. 10. 1994இல் சர்வதேச ஆசிரியர் தினத்தன்று அரசாங்கத்தினால் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப் பட்டது.

  - ஆசிரியர் சேவையினுள் ஆசிரியர்கள் 03 வகுப்புக்களில் வகைப் படுத்தப்படுவார்கள். அவை வகுப்பு III, II, I.

  - இவற்றில் பிரதான பிரிவுகளும் உப பிரிவுகளும் உள்ளன. அவை,

    வகுப்பு III தரம் II

    வகுப்பு III தரம் I

    வகுப்பு II தரம் II

    வகுப்பு II தரம் I

    வகுப்பு I

  - ஆசிரிய சேவை உருவாக்கப்பட்டமைக்கு அமைய 01. 01. 1995முதல் அதிகரிக்கப்பட்ட சம்பள அளவுத்திட்டம் நடைமுறைக்கு வந்தது.

- "இலங்கை அதிபர் சேவை" எனும் சேவையும் தற்போது நடைமுறையில் உள்ளது. இதன் பிரகாரம் அதிபர்கள் தரம் (Grade) III, II, I என 03 தரங்களாக நிலைப்படுத்தப்பட்டனர்.

- இலங்கை கல்விச் சேவை (SLES) 1985ஆம் ஆண்டில் இருந்து இலங்கை கல்வி நிர்வாக சேவை (SLEAS) எனத் தரம் உயர்த்தப்பட்டது. இது வகுப்பு III, II, I என 3 நிலைகளைக் கொண்டுள்ளது.

- தேசிய கல்வி நிறுவகம் (National Institute of Education - NIE) விசேட பாராளுமன்றச் சட்டத்தின் மூலம் 1985இல் உருவாக்கப்பட்டது. இது கொழும்பு, மகரகம எனுமிடத்தில் இயங்குகின்றது. இந் நிறுவகம் உருவாக்கப்படமுன்னர் 2 நிலையங்கள் கல்வி தொடர்பாக இயங்கின. அவை பாடவிதான அபிவிருத்தி நிலையம் (கொழும்பு), முகாமைத்துவ நிலையம் (களுத்துறை). இவை இரண்டும் இணைக்கப்பட்டே 1985இல் தேசிய கல்வி நிறுவகம் ஆரம்பிக்கப்பட்டது. அப்போது 22 பணிப் பாளர்களின் கீழ் 22 பிரிவுகளாகத் தேசிய கல்வி நிறுவகம் இயங்கியது.

  - இப் பணிப்பாளர்களுக்கு பணிப்பாளர் நாயகம் ஒருவர் தலைமை வகிக்கிறார்.

  - தேசியக் கல்வி நிறுவகம் பின்வரும் 06 பிரதான பணிகளை மேற்கொண்டு வருகின்றது.

    i) சட்டப்படி இலங்கையிலே ஆசிரியர்களுக்கு வழங்கப்பட வேண்டிய பயிற்சிகளை வழங்குகின்றது.

    ii) பாடசாலைகளில் கற்பிக்கப்படவேண்டிய பாடவிதானம் முழுவதையும் தயாரிக்க, மீளாய்வு செய்ய வழிகாட்டுகின்றது.

    iii) ஆசிரியர்களுக்காகிய வழிகாட்டிகளைத் தயாரிக்கின்றது.

    iv) கல்வித்திணைக்கள அதிகாரிகளுக்கும், பாடசாலை அதிபர் களுக்கும் முகாமைத்துவம் தொடர்பான கருத்தரங்குகளை வைக்க, தொடர் நிகழ்ச்சிகள் வைக்க பொறுப்பாகவுள்ளது.

    v) பல்கலைக்கழகங்களுக்குச் சமனான 1ஆம் பட்டம், 2ஆம் பட்டம், டிப்புளோமா ஆகிய சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன. இலங்கையிலே முதன்முதலாப் பல்கலைக்கழகம் அல்லாத நிறுவனத்துக்குப் பட்டம் வழங்கும் சட்டபூர்வமான அங்கீகாரம் அரசினால் தேசிய கல்வி நிறுவகத்துக்கே வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

    vi) கல்விசார் ஆய்வுகளை மேற்கொள்ளுகின்றது.

- 1943ஆம் ஆண்டு வெளியாகிய கன்னங்கரா குழு அறிக்கையில் ஆசிரிய பயிற்சியின் முக்கியத்துவத்திற்கு முன்னுரிமை அழுத்தம் அளிக்கப் பட்டது. அதன் விதப்புரைப்படி 1949இல் இலங்கைப் பல்கலைக் கழகமும் பட்டதாரி ஆசிரியர்களுக்கு ''கல்வி டிப்புளோமா'' வழங்கும் பொறுப்பை ஏற்றுக் கொண்டது.

- 1945இல் இலவசக் கல்வி அறிமுகத்துடன் அதிகளவில் ஆசிரியர்கள் சேர்க்கப்படலாயினர். 1960களில் ஆசிரியப் பயிற்சிக் கல்லூரிகளும் அரசுடைமையாக்கப்பட்டதால் ஆசிரியப் பயிற்சி முழுப்பொறுப்பையும் அரசு ஏற்க நேரிட்டது.

- இலங்கையில் 1985 ஒக்ரோபர் 01இல் இலங்கையின் கல்வித்துறையில் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கதான கல்வியியல் கல்லூரிகள் (College of Education) எனும் முறைமை அறிமுகம் செய்யப்பட்டது. ஒரே நேரத்தில் பின்வரும் 06 கல்வியியல் கல்லூரிகளும் தொடங்கப்பட்டன.

  பஸ்துன்ரட்ட கல்வியியற் கல்லூரி - களுத்துறை
  சியன கல்வியியற் கல்லூரி - வெயாங்கொட
  ஹாபிற்றிகம கல்வியியற் கல்லூரி - மீரிகம
  ஊவா கல்வியியற் கல்லூரி - பண்டாரவளை
  சாரிபுத்த கல்வியியற் கல்லூரி - நிட்டம்புவ
  மகாவலி கல்வியியற் கல்லூரி - உயன்வத்தை

  - அப்போதைய கல்வி, இளைஞர் விவகார, தொழிநுட்ப அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க அவர்களின் ஆலோசனையின் பேரிலேயே இவை உருவாகின. ஏற்கனவே ஆசிரிய பயிற்சிக் கலாசாலைகளாக இருந்தவையே இவ்வாறு கல்வியியற் கல்லூரிகளாக மாற்றம் பெற்று புதுமுறையிலான ஆசிரிய சேவை முன்பயிற்சி நிறுவனங் களாகச் செயற்படத் தொடங்கியவை என்பது குறிப்பிடத்தக்கது.
  - 1986இல் 30ஆம் இலக்க கல்வியியல் கல்லூரிச் சட்டத்தைப் பாராளு மன்றம் ஏகமனதாக அங்கீகரித்தமை சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது.
  - இச் சட்டவாக்கத்தினால் ஏலவே அமைக்கப்பட்ட கல்வியியற் கல்லூரிகளுக்கு அதிகாரபூர்வ அந்தஸ்து வழங்கப்பட்டது.
  - இவை 1985இல் உருவான தேசிய கல்வி நிறுவகத்தின் அனுசரணை யுடன் இயங்கும் வழிமுறைகளும் வகுக்கப்பட்டன.
  - இக் கல்லூரிகளுக்கு ''தேசிய கல்வி டிப்புளோமா'' வழங்கவும் படிப்படியாகக் கல்விமாணிப் பட்டம் வழங்கவும் ஏற்பாடுகள் சட்டத்தின் மூலம் குறிப்பிடப்பட்டுள்ளன.
  - பின்னர் பின்வரும் ஆண்டுகளில் குறிப்பிடப்படும் இடங்களிலும் கல்வியியற் கல்லூரிகள் உருவாக்கப்பட்டன.

    1987 - நில்வள கல்வியியற் கல்லூரி - அக்குரஸ்ஸ
    1992 - சிறிபாத கல்வியியற் கல்லூரி - பத்தனை
    1992 - அட்டாளைச்சேனை கல்வியியற் கல்லூரி - அட்டாளைச்சேனை

1993 - வவுனியா கல்வியியற் கல்லூரி - வவுனியா

1995 - மட்டக்களப்பு கல்வியியற் கல்லூரி - மட்டக்களப்பு

1998 - யாழ்ப்பாணம் கல்வியியற் கல்லூரி - கோப்பாய்

2000 - அழுத்கம கல்வியியற் கல்லூரி - அழுத்கம

- கல்வியியற் கல்லூரிகளில் மாணவர்களுக்கு ஆங்கிலம், விஞ்ஞானம், கணிதம், ஆரம்பக்கல்வி, உடற்கல்வி, பௌத்தம் போன்ற பல்வேறு பாடங்களில் 02 வருடங்கள் சிறப்புப் பயிற்சி அளிக்கப்படுகின்றது. அதன் பின்னர் ஏதாவது ஒரு பாடசாலையில் இணைக்கப்பட்டு 01 வருடம் உள்ளகப் பயிற்சி வழங்கப்படு கின்றது. 03 வருட காலப்பகுதியிலும் கல்வி நடவடிக்கைக்கென கொடுப்பனவு ஒன்றும் வழங்கப்படுகின்றது. கல்வியியற் கல்லூரி களும், ஆசிரிய பயிற்சிக் கல்லூரிகளும், ஆசிரிய தொழில்சார் பயிற்சிகளை அளித்தாலும் குறிப்பிடத்தக்க வேறுபாடுகள் உள்ளன.

- **பாடசாலை அபிவிருத்திச் சங்கம்**

  - பாடசாலைகள் அனைத்திலும் 31. 01. 1979ஆம் ஆண்டு 28 இலக்கச் சுற்றுநிருபத்தின்படி பாடசாலை அபிவிருத்திச் சங்கங்கள் அமைக்கப்பட வேண்டும். இச் சங்கத்திற்கு அதிபர் தலைவராக இருப்பார். நிர்வாகசபை உறுப்பினர்கள் வருடத்திற்கு ஒரு முறை புதுப்பிக்கப்படுவார்கள்.

- **பழைய மாணவர் சங்கம்**

  - பாடசாலையின் நன்மை, தீமைகள், அபிவிருத்தி இவைகளிலேயே பழைய மாணவர்கள் அக்கறையுடையவர்களாக இருப்பார்கள். எனவே பழைய மாணவர் சங்கம் பாடசாலையில் அக்கறை உள்ளதொரு இயக்கமாகக் கருதப்படல் வேண்டும்.

  - அதிபர் தலைவராக இருப்பார். ஏனைய அங்கத்தவர்கள் தேவைக் கேற்ப சுற்றுநிருபத்தின்படி இடம்பெறுவர். பழைய மாணவர் சங்கமும் அங்கத்தவர்களும் பாடசாலைக்கு உதவலாமே தவிர பாடசாலை நிருவாகத்தில் தலையிடக்கூடாது.

- **மாகாண அடிப்படையில் கல்வி அமைப்பு**

  - மாகாணசபை ஆட்சி முறை 1987ஆம் ஆண்டு 13வது அரசியல் சட்டத் திருத்தத்திற்கும், தொடர்ந்து வந்த மாகாணசபைச் சட்டத் திற்கும் பின்னர் நாட்டில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. இதன்படி கல்வி நிருவாக முறை மத்திய அரசு, மாகாண அரசு என இரு முறைகளாகியது. மாகாணக் கல்விப் பணிமனைக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் இருப்பார். கல்வி சம்பந்தப்பட்ட பல அதிகாரங்கள் மத்திய அரசாங்கத்திற்கும் மாகாண அரசாங்கத்திற்கும் இடையில் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன.

- இலங்கைப் பாடசாலைகளில் சாரணர் இயக்கம் நிறுவப்பட்ட ஆண்டு - 1917.
    - உலக சாரணர் இயக்கத்தின் தந்தையென இங்கிலாந்தைச் சேர்ந்த பேடன் பவெல் பிரபு போற்றப்படுகின்றார்.

- பாடசாலை மாணவர்களுக்கு இலவச பாடநூல் விநியோகிக்கும் திட்டம் நடைமுறைக்கு வந்தது - 1980. இலவச மதிய உணவு வழங்கும் திட்டம் பின்னர் 1990இல் இலவச மதிய உணவு முத்திரைத் திட்டமானது. 1996இல் அதுவும் கைவிடப்பட்டது.

- 1987இல் தேசியப் பாடசாலைகள் என்ற கோட்பாடு அறிமுகப்படுத்தப் பட்டது. முழுநிலைப் பாடசாலைகள் 14 தேசியப் பாடசாலைகளாக உருப்பெற்றன. 2003ஆம் ஆண்டு தரவின்படி ஏறத்தாழ 310 தேசிய பாடசாலைகள் நாடுமுழுவதும் உள்ளன.

## புதிய கல்விச்சீர்திருத்தம்

- முக்கிய கொள்கை சீரமைப்புக்களை விதந்துரைப்பதற்காகவும், நடவடிக்கைத் திட்டத்தினைத் தயாரிப்பதற்காகவும் 1996இல் ஜனாதிபதி செயலணிக் குழு ஒன்று நியமிக்கப்பட்டது. பொதுக் கல்வியை மேம்படுத்துவதற்காகப் பின்வரும் முக்கிய சீரமைப்புக்கள் விதந்துரைக் கப்பட்டன.

- 5 - 14 வயதிற்குமிடையிலான சிறார்களுக்கு கட்டாய கல்வி.
  க. பொ. த. (உ/த) இற்குப் புதியதொரு நியமனத்துக்கு மேம்பட்ட பொறிமுறை.
    - ஆசிரியர் பங்கீட்டின் தரத்தினை எய்துவதற்கும் செலவுகளைக் குறைப்பதற்குமான முயற்சி.
    - சிறந்த முகாமைத்துவத்திற்காக இருவரிசை அடிப்படையில் தற்போ துள்ள பாடசாலைகளை மீளமைத்தல்.
    - தரம் 1 - 9 வரையிலான வகுப்புக்கள் கொண்ட பாடசாலைகள் கனிஷ்ட பாடசாலைகள் எனவும், தரம் 10 - 13 வரையிலான வகுப்புக்கள் கொண்ட பாடசாலைகள் சிரேஷ்ட பாடசாலைகள் எனவும் பிரிக்கப்படும்.
    - ஆசிரியர் கல்விக்காகத் தேசிய மேலாண்மைச் சபையை நடை முறைப்படுத்தல்.
    - ஆசிரியர்களின் தரத்தினை மேம்படுத்துவதற்காக அவர்களை மதிப்பிடுகின்ற புதியதொரு திட்டம்.

- கற்பித்தல் தொழிலுக்காகப் புதிதாகச் சேர்க்கப்படும் அனைவருக்கும் பணிக்கு முந்திய பயிற்சி.
- பரீட்சார்த்திகளின் மீதான சுமையைக் குறைக்கும் பொருட்டு உயர்தரப் பரீட்சைகளை மீளவமைத்தல். பாடநெறி அமைப்பினையும், பாடவிதானத்தையும் திருத்தியமைப்பதன் மூலம் பல்கலைக்கழகக் கல்வியின் பயனுறும் தன்மையினை அதிகரித்தல்.

- பாடசாலை மாணவர்களுக்கு இலவச பாடசாலை சீருடை விநியோகிக்கும் திட்டம் அறிமுகமானது - 1993
- பாடசாலைகள் தேசிய மயமாகியது - 1960. இவ் ஆண்டிலேயே தாய்மொழி மூலமாகப் போதிக்கும் பாடசாலைகளும் உருவாகின.
- கல்விச் சீர்திருத்த வெள்ளையறிக்கை வெளியாகியது - 1980.
- 1990இல் தேசிய கல்வி ஆணைக்குழு உருவானது.
- அரசாங்கம் சுதேச மருத்துவக் கல்லூரிக்குப் பல்கலைக்கழக அந்தஸ்து வழங்கியது - 1997.
- பள்ளிக்கூட "விசுக்கோத்து" நிகழ்ச்சித் திட்டம் தொடங்கியது - 1968.
- வறிய குடும்பங்களில் இருந்து வரும் திறமையான மாணவர்களின் தகைமைக்காகப் புலமைப்பரிசில் நிகழ்ச்சித் திட்டம் ஆரம்பமாகியது - 1952.
- 1980இல் றாகமவில் வட கொழும்பு மருத்துவக் கல்லூரி உருவானது. பின்னர் இது பல்கலைக்கழக மாணவர்களின் தொடர் போராட்டங்களால் கைவிடப்பட்டது.
- 1978இல் உயர் கல்வி அமைச்சு உருவாக்கப்பட்டது. தொழில்நுட்பக் கல்வி உயர்கல்வி அமைச்சின் கீழ் கொண்டுவரப்பட்டது.
- 1987 இல் கணினித் தொழிநுட்ப நிறுவனம் ஆரம்பம்.

* * *

| |
|---|
| எனக்கென்று உள்ளதை எவரும் தடுக்க முடியாது.<br>எனக்கென்று இல்லாததை எவரும் கொடுக்க முடியாது. |

## அண்மைக்கால இலங்கை நடப்புகள்

- **நிறுவனங்கள் தலைவர்கள்**

தேசிய சேமிப்பு வங்கி
T. M. சுவாமிநாதன்

இலங்கை பெற்றோலியக் கூட்டுத் தாபனம்
தஹாம் விமலசேன

இலங்கை திரைப்படக் கூட்டுத்தாபனம்
ஜெயந்த தர்மதாச

வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம்
சுசந்த பெர்ணான்டோ

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு
Dr. கொட்பிறி குணதில

கிரிக்கெற் கட்டுப்பாட்டுச் சபை
திலங்க சுமதிபால

- இலங்கையின் இனப்பிரச்சனைக்குத் தீர்வு காணும் அடிப்படையில் அரசாங்கத்திற்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கும் இடையில் புரிந்துணர்வு உடன்படிக்கை 2002 பெப்ரவரி 22இல் கையெழுத்தானது. இதில் திரு. ரணில் விக்கிரமசிங்க, திரு. வே. பிரபாகரன் ஆகியோர் கையெழுத்திட்டனர். வடக்கு - கிழக்கில் இயல்பு நிலையைத் தோற்றுவிக்கும் அடிப்படைகள் இதில் வகுக்கப்பட்டுள்ளன. அரச படைகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் விடுதலைப் புலிகள் அரசியல் நடவடிக்கையில் ஈடுபடப் படிப்படியாக வந்தனர்.

- யாழ்ப்பாணத்திலிருந்து முகமாலை ஊடாக வவுனியாவிற்கு தரை வழிப்பாதையொன்று சர்வதேச செஞ்சிலுவைச் சங்கக் குழுவின் (ICRC) வழித்துணையுடன் 2002 ஏப்ரல் 08இல் திறக்கப்பட்டது. பொதுமக்களின் இயல்பான போக்குவரத்துக்கு வகை செய்யும் இந் நிகழ்வு முதன்மையானது. புரிந்துணர்வு உடன்படிக்கையின் மூலம் தொடர்ச்சியான போர் நிறுத்தம் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது. அவ்வப்போது சில சில அத்துமீறல் சம்பவங்கள் நடந்தாலும் அண்மைய 20 வருட போர் வரலாற்றில் இப்போர் நிறுத்தம் நீண்ட காலம் நிலைத்து நிற்கின்றது.

- போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு (SLMM) உருவாக்கப்பட்டது. இதன் தலைவராக நோர்வே நாட்டவரான மேஜர் ஜெனரல் புருஹோல்டே நியமிக்கப்பட்டார். இவரின் கீழ் நோர்வே, சுவீடன், பின்லாந்து நாடுகளைச் சேர்ந்தவர்களை உள்ளடக்கிய குழு இயங்குகிறது. இவர்கள் மாவட்டம் தோறும் தரை, கடல் கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின் றனர். மாவட்டந்தோறும் இந்தச் சர்வதேச கண்காணிப்பாளர்களுடன் அரசு, விடுதலைப் புலிகள் பிரதிநிதிகளும் இயங்குகின்றனர்.

- அரசு, விடுதலைப் புலிகளின் வேண்டுகோளின் பேரில் இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் புதிய தலைவராக ஓய்வு பெற்ற மேஜர் ஜெனரல் ட்ருக்வே டெல் எவ்சன் 2003 ஏப்ரல் முதல் கடமையில் ஈடுபடுகின்றார்.

- ஆஸ்லி வில்ஸ் இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர். இவர் இலங்கை இனப்பிரச்சினை குறித்து அரசு சார்பில் தெரிவித்த கருத்துக்கள் தமிழ் ஊடகங்களால், மக்களால் பெரிதும் விமர்சிக்கப்பட்டன.

- ஜோண் வெஸ்பேர்க் - இலங்கைக்கான நோர்வே தூதுவர் சமாதான முயற்சிகள் தொடர்பில் மிகுந்த அர்ப்பணிப்புடன் ஈடுபட்டவர். 2003 ஏப்பிரலில் பதவிக்காலம் முடிந்து செல்கின்றார்.

- எரிக்சொல்ஹேய்ம் - இலங்கையின் சமாதான முயற்சிகளில் ஈடுபடும் குழுவின் பிரதிநிதிகளில் ஒருவர். இவர் பொதுஜன ஐக்கிய முன்னணி யின் ஆட்சிக் காலத்தில் தொடங்கப்பட்ட சமாதான முயற்சிகளில் நோர்வேயின் விசேட தூதுவராகச் செயற்பட்டவர். பின்னர் ஜனாதிபதி யால் சமாதான முயற்சிகளிலிருந்து ஓரம் கட்டப்பட்டார்.

- யசூசி அகாஷி - இலங்கைக்கான ஜப்பானின் விசேட தூதுவர். சமாதான நடவடிக்கைகளில் மிகுந்த நாட்டம் கொண்டுள்ளவர்.

- ஜெனரல் சதீஷ் நம்பியார் - இந்தியாவின் முன்னாள் இராணுவ அதிகாரி. இலங்கையின் வடக்கு - கிழக்கிலுள்ள உயர் பாதுகாப்பு வலயங்களில் மக்களை மீளக் குடியேற்றும் நடவடிக்கைகள் பற்றி ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்கவென வரவழைக்கப்பட்டார். இவரது வருகை தொடர்பாக மிகுந்த சர்ச்சை உருவானது. இவர் இப் பிரச்சனைக்கு அரசியல், பாதுகாப்பு, மனிதாபிமானம் ஆகியவற்றைக் கொண்டே தீர்வு காணப்படு மென்றார்.

- ஜெனரல் மைக்கல் றோய் - பிரித்தானிய முன்னாள் படையதிகாரி. இவரிடமும் இலங்கை அரசு உயர் பாதுகாப்பு வலயங்களில் மக்களை மீளக் குடியமர்த்துவது தொடர்பான அறிக்கையைக் கோரியுள்ளது.

- பேணாட் குணதிலக - இலங்கை அரசின் சமாதான செயலகத்தின் பணிப் பாளர் நாயகம்.

- ஜோண் கியூம் - 1998இல் உலக சமாதானத்திற்கான நோபல் பரிசைப் பெற்ற இவர் அயர்லாந்து நாட்டவர். 2003 ஏப்ரலில் இலங்கைக்கு வந்து சமாதான முயற்சிகளுக்கு தமது ஆதரவைத் தெரிவித்தார். விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்கும் சென்றார்.

- டேவிட் குட் - அமெரிக்காவின் தென்கிழக்காசிய அரசியல் பிரிவுப் பொறுப்பதிகாரி. 2003 பெப்ரவரியில் இலங்கை வந்து யாழ்ப்பாணமும் வந்தார். இலங்கையின் இனப்பிரச்சனையில் அமெரிக்காவின் நேரடித் தலையீடுகள் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றது.

- நிரூபம் சென் - இலங்கைக்கான இந்தியத் தூதுவர்.

- ரிச்சர்ட் ஆர்மிரேச் - அமெரிக்காவின் பிரதி வெளிவிவகாரச் செயலாளர். இலங்கையின் சமாதான முயற்சிகளை நேரடியாக இங்கு வந்து பார்வை யிட்டார்.

- கிறிஸ்ரீனா ரொக்கா - அமெரிக்காவின் தெற்காசிய விவகாரங்களுக்குப் பொறுப்பானவர். 2002இல் நேரடியாக யாழ்ப்பாணம் வந்து சென்றவர்.

- அரசுக்கும் - புலிகளுக்கும் இடையே முதலாம் சுற்று சமாதானப் பேச்சுக்கள் 2002 செப்ரெம்பரில் தாய்லாந்தில் நடைபெற்றது. நோர்வே அரசின் அனுசரணையுடன் நடைபெற்ற இப்பேச்சுக்கள் கடந்த 20 வருட கால தீவிர உள்நாட்டு யுத்தத்தில் குறிப்பிடத்தக்க ஓர் நிகழ்வாகும்.

- அரசு - புலிகள் சமாதான முயற்சிகளின் ஓர் அங்கமாக உலகவங்கியின் மேற்பார்வையின் கீழ் வடக்கு - கிழக்கிற்கான உடனடி மனிதாபிமான புனர்வாழ்வுத் தேவைகளுக்கான உபகுழு (Sub Committe on Immediate Humanitraian Rehabilitation Needs of North East) உருவாக்கப்பட்டது. சிரான்

(SIHRN) எனச் சுருக்கப் பெயரில் அழைக்கப்படும் இக்குழுவின் தலைமையகம் கிளிநொச்சியிலுள்ளது.

- சமாதான முயற்சிகளின் ஓர் அங்கமாகப் பெண்களின் புனர்வாழ்விற்கான உபகுழு, சிறுவர்களின் நலன்களைப் பேணுவதற்கான உபகுழு ஆகியன உருவாக்கப்பட்டு அவை கூடி இப்பிரச்சனைகளை ஆராய்கின்றன.

- சமாதானப் பேச்சுக்களின் 6ஆம் சுற்று 2003 மார்ச்சில் ஜப்பானில் நடந்தன.

- புரிந்துணர்வு உடன்படிக்கையின் மூலம் மோதல் தணிவு, இயல்பு வாழ்க்கை நிலையை உருவாக்குவது தொடர்பான உபகுழு உருவாக்கப் பட்டது. ஆனால் பின்னர் அது தனது நோக்கத்தை அடைவதிலுள்ள குறைபாடுகளால் கலைக்கப்பட்டது.

- ஜெவ் - டாப்ட் - டிக்கி - ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி

- ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் 2002 டிசம்பரில் அமைச்சர் ரவூப் ஹக்கீம் தலைமையில் ஓர் அணியாகவும், அமைச்சர் அதாவுல்லா தலைமையில் இன்னோர் அணியாகவும் பிளவுபட்டது. இப் பிளவு 2001 ஜூனில் இடம்பெற்ற பிளவுடன் ஒப்பிடும்போது பாரிய பிளவாக இருந்தது.

- தென்கிழக்குப் பல்கலைக்கழகச் சமூகத்தின் ஆதரவுடன் 29. 01. 2003 இல் நாட்டின் பல பகுதிகளிலுமிருந்து திரண்ட முஸ்லிம் மக்கள் ஒலுவிலில் திரண்டு முஸ்லிம்களின் தேசம் ஒன்றைப் பிரகடனம் செய்தனர்.

- வடக்கு - கிழக்கு நீர்ப்பாசன விவசாய செயற்திட்டம் (நியாப்) (North - East Irigation & Agriculture Project - NEIAP) எனும் திட்டம் உலக வங்கியின் நிதி அன்பளிப்புடன் செயற்படுத்தப்பட்டு வருகின்றது. வடக்கு - கிழக்கின் குளங்களையும் விவசாயக் கிராமங்களையும் புனரமைத்து நீர்ப்பாசனத் திட்டங்களை அபிவிருத்தி செய்வதே இதன் நோக்கம். திட்ட தலைமைக் காரியாலயம் திருகோணமலையில் உள்ளது.

- வடக்கு - கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தித் திட்டம் (நிகோட்) - North - East Community Reconstruction Development Project (NECORD) எனும் திட்டம் கடந்த 2 வருடங்களுக்கு மேலாக நடைமுறையில் இயங்கி வருகின்றது. ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி உதவியுடனான இத்திட்டத்தின் மூலமாக போரினால் அழிவடைந்த வடக்கு - கிழக்கின் பொருளாதார உட்கட்டுமான நடவடிக்கைகள் மீளமைப்புச் செய்யப் பட்டு வருகின்றன.

  - தலைமைக் காரியாலயம் திருகோணமலையில் உள்ளது.

- தற்போதைய அரசு பாராளுமன்றில் கொண்டுவந்த விசேட திருத்தச் சட்டத்தின் மூலம் 2003 ஜனவரி மாதத்திற்குப் பின்னர் அரச சேவையில் சேரும் ஊழியர்களுக்கு ஊழியர் சேமலாப நிதியத்தின் மூலம் ஓய்வூதியம் வழங்கப்படும் முறை அமுலுக்கு வருகின்றது. இதற்காக ஊழியர் சேமலாப நிதிச் சட்டம் 2003 பெப்ரவரியில் திருத்தப்பட்டது. இதன் மூலம் புதிதாக நியமனம் பெறும் ஒருவர் தனது மாதாந்த வேதனத்தில் 8%உம், அரசாங்கம் 12%உம் ஊழியர் சேமலாப நிதியத்திற்குச் செலுத்தும். ஊழியர் சேமலாப நிதியம் இதன் மூலம் ஊழியருக்கு ஓய்வூதியம் வழங்கும். விதவைகள், அநாதைகள், ஆதரவற்றோர் ஓய்வூதியத் திட்டம் 1898ஆம் ஆண்டு முதலும், ஓய்வூதியத் திட்டமுறை 1898ஆம் ஆண்டு முதலும் நடைமுறையில் இருந்து வருவது குறிப்பிடத்தக்கது.

- பாதுகாப்பு அமைச்சருக்கு எதிராக 2003 பெப்ரவரியில் பாராளு மன்றத்தில் நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வரப்பட்டது. வாக்கெடுப்பின்போது தோற்கடிக்கப்பட்டது.

- தென்பகுதியில் நுளம்பினால் பரவி வரும் ''டெங்கு'' எனும் ஒருவகைக் காய்ச்சல் அடிக்கடி பரவி ஆட்களைப் பலியெடுத்து வருகின்றது. தேசிய ரீதியில் இதன் தடுப்பு நடவடிக்கைகளில் சுகாதார அமைச்சு தீவிரமாக ஈடுபட்டு வருகின்றது.

- ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் சர்வதேச பாராளுமன்ற உறுப்பினர் சங்கத்தின் 100ஆவது கூட்டம் 2003 ஜனவரியில் ஜெனீவாவில் நடந்தது. 150 நாடுகளைச் சேர்ந்த பாராளு மன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்ட இம் மாநாட்டில் இலங்கையின் தொழில் அமைச்சர் மகிந்த சமரசிங்கவை தலைவராகத் தெரிவு செய்தனர். ஆசிய நாட்டவர் ஒருவர் இப்பதவிக்கு நியமிக்கப் பட்டது இதுவே முதல் தடவை. இவர் முன்னர் சர்வதேச பாராளுமன்றக் குழுவின் உப தலைவராகவும் பதவி வகித்தமை குறிப்பிடத்தக்கது.

- யுனிசெவ் (UNICEF) நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளரான திருமதி. கரோல் பௌமி 2003 ஜனவரியில் இலங்கை வந்தார். ஆயுத மோதல்களால் பாதிக்கப்பட்ட சிறுவர்களின் நலன்களைப் பாதுகாக்கும் நோக்குடன் யுனிசெப்பினால் மேற்கொள்ளப்படும் திட்டங்களை அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளிலும் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளிலும் பார்வையிட்டார்.

- 2003 ஜனவரியில் சர்வதேச பௌத்த அமைப்புக்களின் மகாநாடு கொழும்பில் நடந்தது.

- 2003 ஜனவரியில் உலகவங்கியின் உபதலைவரான பேராசிரியர் மீகோ நிசிமிசி இலங்கைக்கு வந்தார்.

- அரசினால் மேல் கொத்மலை நீர் மின்சாரத்திட்டம் நடைமுறைக்கு விடுவதான பூர்வாங்க வேலைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இது தொடர்பில் மலையகத் தமிழரைப் பிரதிநிதித்துவப்படுத்தும் இரு பிரதான கட்சிகளான இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், மலையக மக்கள் முன்னணி ஆகியவற்றுக்கிடையே தீவிர அபிப்பிராய பேதங்கள் உள்ளன.

- கண்ணிவெடி ஒழிப்புப் பணியில் ஈடுபடும் கண்காணிப்பாளர்களின் முதலாவது ஆசிய, பசுபிக் மகாநாடு 2003 ஜனவரியில் கொழும்பில் நடைபெற்றது.

- நீதிமுறையைப் பலப்படுத்தும் நீதித்துறை அமைப்பின் 3ஆவது மகாநாடு 2003 ஜனவரியில் கொழும்பில் நடைபெற்றது. அவுஸ்திரேலியா, நைஜீரியா உட்பட 10 நாடுகளின் பிரதம நீதியரசர்கள் இதில் பங்கேற்றனர்.

- இலங்கைப் பாராளுமன்றில் தொழிலாளர்கள் தொடர்பான வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த 3 திருத்தச் சட்டங்கள் 2003 ஜனவரியில் நிறைவேற்றப்பட்டன.
    - கைத்தொழிற் பிணக்குகள், நடவடிக்கைகளை விசாரித்தலும் தீர்மானித்தலும்
    - வேலையாட்களின் தொழிலை முடிவுறுத்தல்
    - பெண்களையும், இளம் ஆட்களையும், பிள்ளைகளையும் தொழிலுக்கு அமர்த்துதல்

- 2001 டிசம்பரில் நடந்த பாராளுமன்றத் தேர்தலின்போது கண்டி உடத்தலவின்னவில் 10 முஸ்லிம் இளைஞர்கள் துப்பாக்கிதாரிகளால் படுகொலை செய்யப்பட்டனர். இது தொடர்பாக முன்னாள் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தவும் அவரது இரு மகன்களும் கைது செய்யப்பட்டுச் சிறையில் உள்ளனர். வழக்கும் நடைபெறுகின்றது.

- திருகோணமலை - சீனக் குடாவிலுள்ள எண்ணெய்க் குதங்களை இந்திய எண்ணைக் கூட்டுத்தாபனத்திற்கு இலங்கை அரசு நீண்டகாலக் குத்தகை அடிப்படையில் கொடுத்துள்ளது. இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தின் பிரகாரம் இலங்கையிலுள்ள 175 பெற்றோல் நிலையங்களையும் இந்திய எண்ணைக் கூட்டுத்தாபனம் வரிச்சலுகை அடிப்படையில் பெற்றுள்ளது.

- 2002ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் கொள்கை அபிவிருத்தி செயல் படுத்துகை அமைச்சினால் இளைஞர் படைத்தலைவர் பதவிகளுக்கான ஆட்சேர்ப்புத் திட்டம் அறிமுகமானது. சகல இளைஞர் யுவதிகளுக்கும் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் வேலைவாய்ப்பைப் பெற்றுக் கொடுக்கும் நோக்கில் இத்திட்டம் ஆரம்பமானது.

- 18 - 26 வயதுக்குட்பட்டவர்களுக்கு ஆங்கிலம், கணினி, வேறுதொழில் துறைகள் போன்றவற்றிலும் உடற்பயிற்சி, தற்பாதுகாப்பு, விளையாட்டு போன்றவற்றிலும் தொடர்ச்சியாக 18 மாதத்திற்குப் பயிற்சிகள் வழங்கப் படும். பயிற்சிக் காலத்தின்போது மாதம் 2000/= ஊக்குவிப்புக் கொடுப் பனவும், இலவசமாக சீருடைகள், உணவு வசதிகள், ஏனைய தொழிற் பயிற்சி செலவுத் தொகையும் வழங்கப்படும். இதற்கெனத் தொழில் இல்லங்கள் அமைக்கப்பட்டுவருகின்றன.

- பொலிஸ்மா அதிபர் - T. E. ஆனந்தராஜா

  கடற்படைத் தளபதி - அட்மிரல் தயா சந்தகரி

  இராணுவத்தளபதி - லெப். ஜெனரல் லயனல் பலகல்ல

- இரண்டாவது உலக இந்து மகாநாடு 2003 மே மாதம் இலங்கையில் கொழும்பு, நுவரெலியா ஆகிய இடங்களில் நடந்தது. முதலாவது மகாநாடு 1982இல் கொழும்பில் நடந்தது.

- வடக்கு - கிழக்கு மாகாணப் பாடசாலைகளில் கடமையாற்றும் தொண்டர் ஆசிரியர்கள் தம்மை நிரந்தரமாக்குமாறு கோரி 2003 மார்ச், ஏப்பிரல் மாதங்களில் தீவிரமான போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர்.

- ஆசியாவில் புலம்பெயர்ந்த தொழிலாளர்களை அனுப்பும் முன்னணி வாய்ந்த பத்து நாடுகளின் முதலாவது சர்வதேச அமைச்சர் மட்ட மகாநாடு 2003 ஏப்ரலில் பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மகாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

- ஆள்கடத்தல் மற்றும் பாரிய குற்றச் செயல்கள் குறித்துச் சர்வதேச ரீதியில் ஆராய்வதற்கான இருநாள் கருத்தரங்கு 2003 மார்ச் மாதம் கொழும்பில் நடந்தது.

- ஜனாதிபதியின் ஊடகத்துறைப் பேச்சாளர் - ஹரீம் பீரிஸ்

  அமைச்சரவைப் பேச்சாளர் - பேராசிரியர் G. L. பீரிஸ்

  பிரதம நீதியரசர் - சரத் என் சில்வா

  சட்டமா அதிபர் - கமலசபேசன்

- ஜனாதிபதி - அதிமேதகு சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க

பிரதம மந்திரி - மாண்புமிகு ரணில் விக்கிரமசிங்க

எதிர்க்கட்சித் தலைவர் - கௌரவ மகிந்த ராஜபக்ஷ

(அமைச்சர்களின் பெயருக்கு முன்பாக 'மாண்புமிகு' என்ற சொல்லை இட்டு அழைத்தல் வேண்டும்)

| அமைச்சுக்கள் | அமைச்சர்கள் |
|---|---|
| வெளிவிவகாரம் | ரிரோன் பெர்ணான்டோ |
| நிதி | கே. என். சொக்சி |
| கல்வி கலாசார அலுவல்கள் மனிதவள அபிவிருத்தி | கருணாசேன கொடிதுவக்கு |
| சமூக நலன்புரித்துறை | ரவீந்திர சமரவீர |
| அரசியல் யாப்பு விவகாரம், தொழில் முயற்சி அபிவிருத்தி, கைத்தொழிற் கொள்கை, முதலீட்டு ஊக்குவிப்பு | பேராசிரியர் G. L. பீரிஸ் |
| விஞ்ஞான, தொழிநுட்ப, பொருளாதார மறுசீரமைப்பு | மிலிந்த மொறகொட |
| சுகாதாரம், போசாக்கு, நலன்புரி | பி. தயாரத்ன |
| வீடமைப்பு, தோட்ட உட்கட்டமைப்பு | ஆறுமுகம் தொண்டமான் |
| சமூக அபிவிருத்தி | பெ. சந்திரசேகரன் |
| துறைமுக அபிவிருத்தி, முஸ்லிம் சமய விவகாரம் | ரவூப் ஹக்கீம் |
| மின்சக்தி, எரிபொருள் | கரு ஜயசூரிய |
| மாகாணசபைகள் உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் | அலிக் அலுவிகார |
| பொதுநிர்வாக முகாமைத்துவ மறுசீரமைப்பு | வஜிர அபேவர்த்தன |
| வர்த்தகம், நுகர்வோர் விவகாரம் | ரவி கருணாநாயக்க |
| உள்துறை, கிறிஸ்தவ விவகாரம் | ஜோன் அமரதுங்க |
| மூன்றாம் நிலைக் கல்வி | கபீர் காசிம் |
| வெளிநாட்டு வேலை வாய்ப்பு, சேமநலம் | லஷ்மன் யாப்பா அபேவர்த்தன |
| கூட்டுறவுத்துறை | A. R. M. காதர் |

| | |
|---|---|
| மேல் மாகாண அபிவிருத்தி | M. A. H. முகமது |
| இந்துசமய விவகாரங்கள் | தி. மகேஸ்வரன் |
| பாராளுமன்ற விவகாரம் | A. H. M. அஸ்வர் |
| சமுர்த்தி | S. B. திசநாயக்கா |
| நெடுஞ்சாலைகள் | அதாவுல்லா |
| தொழில், வேலைவாய்ப்பு | மகிந்த சமரசிங்க |
| காணி அபிவிருத்தி | ராஜித சேனாரத்ன |
| கிராமிய பொருளாதாரம் | பந்துல குணவர்த்தன |
| பாதுகாப்பு, நெடுஞ்சாலைகள், சிவில் விமானப் போக்குவரத்து | திலக் மாரப்பன |
| அரச போக்குவரத்துத்துறை | உபாலி பியசோம |
| பெருந்தோட்ட அபிவிருத்தி | லஷ்மன் கிரியெல்ல |
| கடற்றொழில், நீரியல் வளத்துறை | மகிந்த விஜேசேகர |
| நீர்ப்பாசனம் | H. G. B. நெல்சன் |
| கைத்தொழிற்துறை | ரோகித போகொல்லாகம |
| மத்திய பிராந்திய அபிவிருத்தி | திஸ்ஸ அத்தநாயக்க |
| சுற்றாடற் பாதுகாப்பு | ருக்மன் சேனநாயக்க |
| இளைஞர் விவகாரம், விளையாட்டுத் துறை | ஜோண்ஸ்ரன் பெர்ணான்டோ |
| மக்கள் தொடர்பாடல் | இம்தியாஸ் பாக்கீர் மாக்கர் |
| வன்னிப் புனர்வாழ்வு | நூர்தீன் மசூர் |
| புனர்வாழ்வு, புனரமைப்பு, அகதிகள் மீள்குடியேற்றம் | Dr. ஜயலத் ஜயவர்த்தன |
| பாடசாலைக் கல்வி | சுரநிமல ராஜபக்ஷ |

- ஜான் பீற்றர்சன் - நோர்வேயின் வெளிவிவகார அமைச்சர். இலங்கையின் இன முரண்பாடு தீர்க்கப்படல் வேண்டுமென்பதற்காகப் பலமுறை கொழும்பு வந்து சென்றிருக்கிறார்.

- இலங்கை அரசாங்கம் நடப்பு 2003ஆம் ஆண்டை வேலை வாய்ப்பு ஆண்டாகப் பிரகடனம் செய்துள்ளது. நாட்டின் வேலையின்மையைக் குறைக்கும் நோக்குடனும் முதன்மையான பிரச்சனைகளில் ஒன்றைத் தணிக்கும் நோக்குடனும் இப் பிரகடனம் செய்யப்பட்டுள்ளது.

- 2003 மே மாதம் இரத்தினபுரி, களுத்துறை மற்றும் தென் மாகாணங்களில் மாபெரும் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டது. இரத்தினபுரியில் மண் சரிவில், வெள்ளப் பெருக்கில் நூற்றுக்கணக்கான பொதுமக்கள் பலியாகினர். அண்மித்துள்ள மாவட்டங்களிலும் இதே நிலைமை ஏற்பட்டது. மீட்புப் பணிக்கென, உதவிக்கென இந்திய அரசாங்கமும் குழுக்களையும் பொருட்களையும் அனுப்பியது.

- பொருட்கள் சேவைகள் வரி (GST) என்பதற்குப் பதிலாக அண்மைய காலத்தில் பெறுமதி கூட்டிய வரி (VAT) என்பது அறிமுகம் செய்யப் பட்டுள்ளது. இது பொருட்கள், சேவைகளில் கூட்டப்பட்ட பெறுமதியில் 20% ஆக இருக்கும்.

- 2002 மார்ச் மாதம் பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் மூலமே இது அறிமுகமாகியது. அத்துடன் பாதுகாப்பு வரி அறவிடும் முறை கைவிடப்பட்டுள்ளது. அத்துடன் முத்திரை வரியும் சகலவற்றுக்கும் கைவிடப்பட்டுள்ளது.

- தேசிய சிறுவர் பாதுகாப்புச் சபை எனும் அமைப்பு இலங்கையில் சிறுவர் நலன்களைப் பேணவென அமைக்கப்பட்டு இயங்கி வருகின்றது. பேராசிரியர் ஹரேந்திர டி சில்வா இச்சபையின் தலைவராகப் பணி புரிகிறார்.

- நாட்டில் தற்போது 15 மாநகர சபைகள் இயங்கி வருகின்றன. 2001ஆம் ஆண்டில் கல்முனை மாநகரசபை உருவாகியது.

- இலங்கையின் உயர்கல்வித்துறையில் தற்போது 12 தேசிய பல்கலைக் கழகங்கள் இயங்கி வருகின்றன.

* * *

*'ஓய்வை விவேகத்துடன் பயன்படுத்துவதே கல்வியின் குறிக்கோள்'*

*அரிஸ்டோட்டில்*

## அண்மைக்கால உலக விடயங்களில் பிரபலமானோர்

- சதாம் ஹூசைன் - ஈராக்கின் முன்னாள் ஜனாதிபதி. அமெரிக்காவின் முதலாந்தர எதிரி. 2003 மார்ச், ஏப்ரல் மாதங்களில் இவரைக் கொன்றொழிக்கும் நோக்கில் பாரிய நடவடிக்கையை அமெரிக்க - பிரித்தானியப் படைகள் நடத்தின. ஈராக் அரசைப் பதவி கவிழ்க்கும் நோக்கம் நிறைவேறியது. ஆனால் சதாம் கொல்லப்பட்டாரா தப்பினாரா என்பது புரியாத புதிராகவேயுள்ளது.
- ஒஸாமா பின்லேடன் - அமெரிக்காவால் தேடப்படும் மிகத் தீவிரமான நபர். 2001 செப்ரெம்பர் 11இல் அமெரிக்காவின் நியூயோர்க் நகரிலுள்ள உலக வர்த்தக மையத்தின் (WTC) இரட்டைக் கோபுரங்கள் தகர்ப்பு, இராணுவத் தலைமையகமான பென்டகன் மீதான தாக்குதல் சம்பவங் களைத் திட்டமிட்டாரென தேடப்படு கின்றார். பயணிகள் விமானங்கள் சிலவற்றை ஒரே நேரத்தில் கடத்திச் செய்யப் பட்ட இத் தாக்குதல்களால் பல்லாயிரம் பொதுமக்கள் கொல்லப்பட்டனர். அரேபியா வில் பிறந்த கோடீஸ்வர வர்த்தகரான இவருக்குப் புகலிடம் வழங்கியதாகக் கூறி

ஆப்கானிஸ்தான் மீது அமெரிக்கா படையெடுத்தது. தலிபான் ஆட்சி யாளரை விரட்டியபின் அமெரிக்க ஆதரவுள்ள அரசொன்று இயங்கி வருகின்றது. ஆயினும் ஒஸாமா தப்பியோடிவிட்டதாக நம்பப்படு கின்றது.

- டொனால்ட் ரம்ஸ் பீல்ட் - அமெரிக்காவின் பாதுகாப்புத் துறைச் செயலாளர்
- கொலின் பவெல் - அமெரிக்காவின் வெளிவிவகாரத்துறைச் செயலாளர்
- டிக்செனி - அமெரிக்கத்துணை ஜனாதிபதி
- ஜக்ஸ்ரோ - பிரித்தானியாவின் வெளியுறவுத்துறை அமைச்சர்
- சேர் ஜேர்மி கிறீன்ஸ்டொக் - ஐக்கிய நாடுகள் சபைக்கான பிரிட்டிஷ் தூதுவர்
- ஹான்ஸ் பிளிக்ஸ் - ஈராக் வசம் பேரழிவு ஆயுதங்கள் உள்ளனவா எனப் பரிசோதிக்கச் சென்ற ஐக்கிய நாடுகள் சபைக் குழுவின் தலைவர்
- ஜோண் பொல்டன் - அமெரிக்க வெளிவிவகாரத்துணைச் செயலாளர்
- தாரிக் அஸீஸ் - முன்னாள் ஈராக்கிய துணைப்பிரதமர்
- முகமட் சயீத் அல் சகாவ் - முன்னாள் ஈராக்கின் தகவற்துறை அமைச்சர்
- ஹென்றி ஒலங்கா - 2003இல் நடந்த உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டி களின்போது சிம்பாவே அரசை எதிர்த்து கையில் கறுப்புப் பட்டியணிந்து விளையாடிய சிம்பாவே அணியின் நட்சத்திர வீரர். 'அன்டி பிளவர்' எனும் இவரது சக வீரரும் இவருடன் இணைந்து 'சிம்பாவேயில் ஜனநாயகம் செத்துவிட்டது' எனக் கூறி கையில் கறுப்புப் பட்டியணிந்தமை குறிப்பிடத்தக்கது.
- ஷேன் வோர்ண் - அவுஸ்திரேலிய அணியின் முன்னாள் கிரிக்கெட் வீரர். உலக முதல் தர பந்து வீச்சாளர்களில் ஒருவர். தடை செய்யப்பட்ட உடலுக்கு வலுவூட்டும் ஊக்க மாத்திரையைப் பயன்படுத்தினாரென சோதனையின்போது கண்டுபிடிக்கப்பட்டதால் 1 வருடத் தடை ICCஆல் விதிக்கப்பட்டது.
- ஹன்சி குரொஞ்சே - தென்ஆபிரிக்க கிரிக்கெற் அணியின் முன்னாள் தலைவர். பந்தயத்திற்காக பணம் கட்டுபவர்களுடன் ஆட்ட நிர்ணய சதியில் ஈடுபட்டமை காரணமாகப் பதவி விலகியவர். பின்னர் விமான விபத்து ஒன்றில் கொல்லப்பட்டார்.

- நெல்சன் மண்டேலா - தென்ஆபிரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி. இனவெறி வெள்ளையர்களுக்கு எதிராக ஆபிரிக்க தேசிய காங்கிரசில் (ANC) இணைந்து மிக நீண்ட விடுதலைப் போராட்டத்தை நடத்தியவர். 27 வருடங்கள் சிறையிருந்தவர். 1993இல் முதலாவது கறுப்பின ஜனாதிபதியாகி 1999இல் அரசியலில் ஓய்வு பெற்றுப் பொதுப்பணி களில் ஈடுபட்டு வருகின்றார். உலகம் முழுவதும் மதிக்கும் மாபெரும் தலைவர். தனது சுயசரிதையை விடுதலைக்கான நீண்ட பயணம் (Long Walk to Freedom) எனும் பெயரில் வெளியிட்டார்.

- ஷேக் அகமட் யாசீன் - பலஸ்தீன தீவிர வன்முறை இயக்கமான ஹமாசின் ஆன்மீகத் தலைவர்.

- ஆங் சாங் சூ கீ - மியன்மார் (பர்மா) சுதந்திரப் போராட்ட வீராங்கனை. இவருக்கு அமெரிக்க சுதந்திர அமைப்பு 2003இல் 01 மில்லியன் டொலரைப் பரிசாக அளித்தது. 1991இல் உலக சமாதானத்திற்கான நோபல் பரிசையும் பெற்றவர்.

- அன்னை தெரேசா - இந்தியாவின் கொல்கொத்தா நகரைத் தலைமைப் பணிமனையாகக் கொண்டு சமூகசேவையை உலகமெங்கும் நடத்தி வந்தவர். 1997இல் காலமானார். இவர் புரிந்த அற்புதம் ஒன்றைக் கருத்திற் கொண்டு 2003. 10. 19இல் இத்தாலியின் ரோம் நகரின் பீட்டர்ஸ் சதுக்கத்தில் புனிதர் பட்டம் வழங்கப்படவுள்ளது.

- மைக் ஒபிலியன் - பிரிட்டிஷ் வெளிவிவகார அமைச்சர்

- ஸொரான் ஜின்டிக் - சேர்பிய பிரதமரான இவர் 2003 மார்ச் மாதம் துப்பாக்கி நபர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

- டாடாவோ சினோ - ஆசிய அபிவிருத்தி வங்கியின் தலைவர்

- அலெக்ஸாண்டர் டவுனர் - அவுஸ்திரேலிய வெளிவிவகார அமைச்சர்

- ஷா உல் மொபாஸ் - இஸ்ரேலிய பாதுகாப்பு அமைச்சர்

- முகமத் அல் - பிராடி - சர்வதேச அணுசக்தி அமைப்பின் தலைவர்

- முகமட் அல்டெளரி - ஐ. நா.விற்கான ஈராக்கிய தூதுவர்

- டானியல் பேள்ஸ் - அமெரிக்கப் பத்திரிகையாளரான இவரைப் பாகிஸ் தானில் வைத்துக் கடத்திய இஸ்லாமிய தீவிரவாதிகள் படுகொலை செய்தனர்.

- கமால் கராசி - ஈரானிய வெளிவிவகார அமைச்சர்

- ஜாவிற் சொலானா - ஐரோப்பிய ஒன்றிய வெளிவிவகாரக் கொள்கைத் தலைவர். நேட்டோவின் முன்னாள் செயலாளர் நாயகம்.
- ஜோன் நிக்ரோ பொனட் - ஐ. நாவுக்கான அமெரிக்கத் தூதுவர்
- L. K. அத்வானி - இந்திய துணைப்பிரதமர்
- ஜஸ்வந் சின்ஹா - இந்திய வெளியுறவு அமைச்சர்
- பிராஜேஷ் மிஸ்ரா - இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர்
- வோற்ர சிசுலு - தென்ஆபிரிக்க சுதந்திரப் போராட்ட வீரரான இவர் தனது 90ஆவது வயதில் 2003 மே மாதம் காலமானார். நெல்சன் மண்டேலா வுடன் இணைந்து ஆபிரிக்க தேசிய காங்கிரசை (ANC) வழி நடத்தியவர். மண்டேலாவுடன் 26 வருடங்கள் சிறைவாசமும் அனுபவித்தவர். மக்கள் மத்தியில் பெருமதிப்பைப் பெற்ற தலைவராக விளங்கினார்.
- குரோ ஹார்லம் புரொன்லன்ட் - உலக சுகாதார நிறுவனத்தின் (WHO) தற்போதைய தலைவர். இவர் முன்னாள் இத்தாலியப் பிரதமர்.

* * *

*(2003 மே மாத காலப்பகுதியை அண்மித்ததாகத் திரட்டப்பட்ட இத்தரவுகள் காலத்திற்குக் காலம் மாற்றங்களுக்கு உள்ளாகும்.)*

## அண்மைக்கால உலக நடப்புகள்

### 2002ஆம் ஆண்டு

- உலக சமாதானத்திற்கான நோபல் பரிசை அமெரிக்க முன்னாள் ஜனாதிபதியான ஜிம்மி கார்ட்டர் பெற்றார். இவர் அண்மைக் காலமாக உலக நாடுகளிலுள்ள பிரச்சனைகள் இணக்கமாகத் தீர்க்கப்பட வேண்டுமென்பதற்காக மிகுந்த பாடுபட்டு வருகின்றார்.
- இஸ்ரேல் - பலஸ்தீன முரண்பாடுகள் தீவிரமாகவே நடந்தன. பலஸ்தீன தீவிரவாதிகள் இஸ்ரேலியர்களுக்கு எதிராகவும், படைகளுக்கு எதிராகவும் அடிக்கடி தற்கொலைக் குண்டுத்தாக்குதல்களை நடத்தினர். சில தாக்குதல்கள் பாரதூரமான சேதத்தையும் உண்டு பண்ணின. இஸ்ரேலிய படைகளும் பலஸ்தீன சுயாட்சிப் பிரதேசங்களுக்குள் அடிக்கடி புகுந்து தாக்குதல்களையும், கட்டடத் தகர்ப்பு நடவடிக்கைகளையும் மேற்கொண்டன. இரு பகுதியிலும் உயிரிழப்புக்கள் பாரதூரமாகத் தொடர்ந்தன. நிலைமையின் தீவிரத்தால் இஸ்ரேலிய பிரதமர் ஏரியல் ஷரோன் பாராளுமன்றத்தைக்கூடக் கலைத்து புதிய தேர்தல்களை நடத்த உத்தரவிட்டார்.

- இந்தியா - 'பொடோ' எனப்படும் பயங்கரவாதச் செயல்களை தடுக்கும் சட்டத்தின் கீழ் இந்தியப் பாராளுமன்ற உறுப்பினரும் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத் தலைவருமாகிய வை. கோபாலசாமி கைது செய்யப்பட்டுச் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். விடுதலைப் புலிகள் இயக்கத்தை ஆதரித்துப் பேசியதற்காகவே தமிழ்நாடு அரசாங்கம் இந்த நடவடிக்கையை மேற்கொண்டது.

- வெனிசுவேலாவில் ஆண்டின் இறுதிப் பகுதி முதல் ஜனாதிபதி ஹீகோ சாவெஸ் அவர்கள் பதவி விலக வேண்டுமென்று கோரி நாடு தழுவிய ஆர்ப்பாட்டம் நடந்து வருகின்றது.

- ஐவரிகோஸ்டில் வருட இறுதி மாதங்களில் உள்நாட்டு யுத்தம் தீவிரமாக நடந்தது. இதனை முடிவுக்குக் கொண்டு வர பிரான்ஸ் தலையீட்டைச் செய்துள்ளது. ஆனால் ஜனாதிபதி கபெக்கோவின் ஆட்சி மாறவேண்டு மெனப் புரட்சியாளர் உள்நாட்டுக் கலவரத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இதில் ஆயிரக்கணக்கானோர் பலியாகியுமுள்ளனர். பொதுத் தேர்தலை விரைவில் நடத்துவதற்கு அரசு இணக்கம் தெரிவித்துள்ளது. பிரான்சின் காலணியாக முன்பிருந்த இந்நாடு கொக்கோ உற்பத்தியில் உலகப் பிரபல்யமானது.

## 2003 ஆம் ஆண்டு

- இஸ்ரேல் - **ஜனவரி**யில் பாராளுமன்றத்திற்கும், பிரதமர் தெரிவுக்குமான தேர்தல்கள் நடந்தன. ஏரியல் ஷரோன் பிரதமராகத் தெரிவானார். அவரின் லிக்குட் கட்சி பாராளுமன்றில் அதிக ஆசனங்களை வென்றது. கடந்த 30 மாதங்களாகவே யூதர்களுக்கெதிரான பலஸ்தீனர்களின் கிளர்ச்சி தொடர் கிறது. பிரதமர் ஷரோன் இஸ்ரேலியர்களுக்கெதிரான தாக்குதல்கள் நிறுத்தப்படும் வரையில் பலஸ்தீனர்களுடன் பேச்சுக்கள் நடத்தப் போவதில்லையெனக் கூறியுள்ளார்.

- நேபாளம் - **ஜனவரி**யில் அரசும் - மாவோ தீவிரவாதிகளும் யுத்த நிறுத்த அறிவிப்பை வெளியிட்டனர். கடந்த 7 வருடங்களாக அரசுக்கும், மாவோ தீவிரவாதிகளுக்கும் இடையில் நடைபெற்ற யுத்தம் காரணமாக வருடாந்தம் நூற்றுக்கணக்கான மக்கள் பலியாகினார்கள். தீவிரவாதிகள் குறிப்பிடத்தக்க வெற்றிகளைப் பெற்றனர்.

- மலேசியா - ஆசிய பசுபிக் நாடாளுமன்ற சங்கத்தின் 11ஆவது கூட்டம் **ஜனவரி**யில் நடந்தேறியது.

- வடகொரியா - **ஜனவரி**யில் - தனது அணு உலைகளை மீண்டும் செயற் படுத்தத் தொடங்கிய பின்பு கொரியக் குடாவில் நெருக்கடிகள் தோன்றின. அணு ஆயுதத் திட்டங்களைக் கைவிடுமாறு அமெரிக்கா கோரியுள்ளது.

- மலேசியா - **பெப்ருவரியில்** தலைநகர் கோலாலம்பூரில் அணிசேரா இயக்கத் தலைவர்கள் பங்கேற்ற 13ஆவது மகாநாடு நடைபெற்றது. 117 நாடுகள் பங்கேற்றன. தலைமைப் பொறுப்பு மலேசியாவுக்கு வழங்கப் பட்டது. அதன்படி பிரதமர் மகதிர் மொகமட் அடுத்த மகாநாடு நடைபெறும்வரை தலைவராக இருப்பார். இதற்கு முந்திய தலைமைப் பொறுப்பைத் தென்ஆபிரிக்கா வகித்தது.

- அவுஸ்திரேலியா - ஓபன் (Open) டென்னிஸ் போட்டிகளில் மகளிர் பிரிவு இரட்டையர் ஆட்டத்தில் சாம்பியன் - செரீனா, வீனஸ் சகோதரிகள்
  - ஒற்றையர் சம்பியன் பெண்கள் - செரீனா வில்லியம்ஸ்
  - ஒற்றையர் சம்பியன் ஆண்கள் - அந்திரே அகாசி

- மலேசியா - **பெப்ருவரி** - ஈராக்மீது அமெரிக்க - பிரித்தானிய கூட்டுப் படைகள் மேற்கொள்ள முனையும் தாக்குதல் முன் ஆயத்தங்களுக்கு அணிசேரா இயக்கத் தலைவர்களின் கண்டனம் தெரிவிக்கப்பட்டது.
  - அணிசேரா இயக்க நிறுவக நாடுகளில் ஈராக்கும் ஒன்றென்பது குறிப்பிடத்தக்கது.

- பாகிஸ்தான் - **பெப்ருவரியில்** பாகிஸ்தான் விமானப்படைத் தளபதி முஷாரப் அலி மிர் பயணம் செய்த ஹெலிகொப்ரர் விபத்துக்குள்ளான தில் அவர் கொல்லப்பட்டார்.

- அமெரிக்கா - **பெப்ருவரியில்** விண்வெளியில் 16 நாட்கள் ஆராய்ச்சியை முடித்துக்கொண்டு 7 விண்வெளி வீரர்களுடன் பூமிக்குத் திரும்பிக் கொண்டிருந்த கொலம்பியா எனும் விண்கலம் அமெரிக்காவின் டெக்ஸாஸ் மாநிலத்தின் மேலாக வெடித்துச் சிதறியது. சிதறிய பாகங்கள் அமெரிக்காவின் 3 மாநிலங்களுக்கு மேலாகவும் விழுந்தன.
  - இந்தியாவில் பிறந்து பின் அமெரிக்கப் பிரசையான விண்வெளி விஞ்ஞானி கல்பனா சாவ்லா, இஸ்ரேலின் முதல் விண்வெளி வீரரான இலான் சமோன் ஆகியோரும் இதில் உடல் சிதறிப் பலி யானார்கள்.
  - 1986இல் சலெஞ்சர் எனும் விண்கலம் புறப்பட்ட சிறிது நேரத்தி லேயே சிதறி பயணிகள் அனைவரும் கொல்லப்பட்டமை குறிப் பிடத்தக்கது.

- இஸ்ரேல் - **பெப்ருவரியில்** பலஸ்தீன ஹமாஸ் இயக்கத் தலைவர்களில் ஒருவரான ரியாத் அபூஸீத் இஸ்ரேலிய துருப்புக்களால் சுட்டுக் கொல்லப் பட்டார். இதற்காக இஸ்ரேலைப் பழிவாங்குவோம் என ஹமாஸ் சூளுரைத்தது.

- ஈரான் - **பெப்ருவரி**யில் இராணுவ வீரர்களைச் சுமந்து பறந்த விமான மொன்று விபத்துக்குள்ளானதில் 302 பேர் பலியாகினர்.

- 8வது உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டிகள் **பெப்ருவரி, மார்ச்** மாதங் களில் தென் ஆபிரிக்கா, கென்யா, சிம்பாவே ஆகிய நாடுகளில் நடை பெற்றன. மொத்தம் 14 நாடுகள் A, B என இரு பிரிவுகளில் பங்கேற்றன. இப் போட்டிகளிலிருந்து சுப்பர் சிக்ஸ்க்கு அவுஸ்திரேலியா, இந்தியா, கென்யா, இலங்கை, சிம்பாவே, நியூசிலாந்து ஆகிய 6 நாடுகள் தெரிவாகின. அரையிறுதிப் போட்டிக்கு மேற்கூறியவற்றில் முதல் 4 அணி களும் தெரிவாகின. இறுதிப்போட்டி அவுஸ்திரேலிய - இந்திய அணிகளுக் கிடையே தென்ஆபிரிக்காவில் நடைபெற்றது. அவுஸ்திரேலிய அணி மிகச் சிறப்பாக ஆடி ICC கிரிக்கெற் கிண்ணத்தை வென்றது.
  - இறுதி ஆட்டத்தின் சிறந்த வீரராக அவுஸ்திரேலிய அணியின் ரிக்கி பொண்டிங் தெரிவானார். இவ் உலகக் கிண்ணத் தொடரின் சிறந்த வீரராக இந்திய அணியின் நட்சத்திர வீரர் சச்சின் டெண்டுல்கர் தெரிவானார்.
  - 4வது, 7வது, 8வது உலகக்கிண்ணங்களைக் கைப்பற்றி 3 முறை சம்பியன் ஆகிய சாதனையை அவுஸ்திரேலிய அணி படைத் துள்ளது.

- வடகொரியா - **பெப்ருவரி**யில் ஜப்பான் மற்றும் கொரியக் குடாப்பகுதிக் கடலில் ஏவுகணைப் பரிசோதனையொன்றை நடத்தியது.

- ஈராக் அதிபர் சதாம் ஹுசேன் **பெப்ருவரி**யில் பேரழிவு ஆயுதங்களின் உற்பத்தி மற்றும் இறக்குமதியைத் தடை செய்யும் ஆணையைப் பிறப்பித்தார்.
  - அமெரிக்கா, பிரித்தானியா உட்பட ஐ. நா. பாதுகாப்புச் சபையும் விடுத்த எச்சரிக்கைக்குப் பணிந்தே இந்த ஆணையை அவர் விடுத்தார். பேரழிவு ஆயுதங்களைச் சட்டரீதியாக ஈராக் தடை செய்ய வேண்டுமென அமெரிக்கா கோரிக்கையாகவும் அச்சுறுத்தலாகவும் விடுத்து வந்தது. ஈராக்கின் இம் முடிவால் அமெரிக்கா போர் தொடுக்கும் அபாயம் குறைந்துவிட்டதாக நம்பப்பட்டது.

- **மார்ச்** - அமெரிக்க, பிரித்தானியக் கூட்டுப்படைகள் ஈராக்கின் அண்டை நாடுகளில் குவிக்கப்பட்டன. ஈராக்கை அச்சுறுத்திப் பணிய வைக்கும் முயற்சிகள் எடுக்கப்பட்டன. 18. 03. 2003 அன்று அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் W. புஷ் ஓர் அறிவித்தலை ஈராக்கிற்கு விடுத்தார். சதாம் ஹுசைன்

தனது மகன்களுடன் அமெரிக்காவிடம் சரணடைய வேண்டும் அல்லது ஈராக்கை விட்டு வெளியேறி ஆட்சியைத் துறக்க வேண்டும். 48 மணி நேர காலக் கெடுவில் இது நிறைவேற்றப்படாவிட்டால் உடன் போர் தொடுக்கப்படுமென்பதே அப் பிரகடனம்.

- ஆனால் ஈராக் அதிபர் அதற்குப் பணியவேயில்லை. இந்நிலையில் 20. 03. 2003 இல் கூட்டுப்படைகள் ஈராக் மீது மாபெரும் தாக்குதலை ஆரம்பித்தன.

- சதாம் ஹுசைன் வசமுள்ள பேரழிவு ஆயுதங்களைக் களைவதுடன் அவரை ஆட்சியிலிருந்து அகற்றுவதே தமது நோக்கமென ஜோர்ஜ் W. புஷ் சூளுரைத்தார். கூட்டுப்படைகள் தரை, வான், கடல் என மும்முனைகளிலும் தமது தாக்குதல்களைத் தீவிரமாக நடத்தின. இதனால் நூற்றுக்கணக்கான அப்பாவி ஈராக்கிய மக்கள் கொல்லப் படுவதாகவும், கணக்கற்ற கட்டடங்கள் தகர்க்கப்படுவதாகவும் ஈராக் அறிவித்தது.

- அமெரிக்காவின் இச் செயலுக்கு அதன் சார்பான 37 நாடுகள் ஆதரவு தெரிவித்தன. அவுஸ்திரேலியாவும் தனது படையணியொன்றை இத் தாக்குதலுக்காக களம் இறக்கியது.

- முன்பதாக ஈராக் மீதான தாக்குதலுக்கு ஐ. நா. பாதுகாப்புச் சபையின் ஆதரவைப் பெறுவதற்காக அமெரிக்கா சமர்ப்பித்த 377ஆம் இலக்க தீர்மானத்தை அது வெற்றி பெறாதெனத் தோன்றியபோது அமெரிக்கா மீளப் பெற்றது. ஏனெனில் வெட்டுவாக்கு (வீட்டோ) அதிகாரமுள்ள பிரான்ஸ், சீனா, ரஷ்யா ஆகியன எதிர்க்குமென அமெரிக்கா ஊகித்த பின்பே தன்னிச்சையான முடிவை எடுத்தது. இந்தப் போரைத் தடுக்க முடியாமல் போனது ஐ. நா. சபையின் இயலாமையையும் பலவீனத்தையும் உலகிற்கு அம்பலமாக்கியது.

- இப்போரில் ஈராக்கிய குடியரசுப் படைகள் ஒரு சில அமெரிக்க, பிரித்தானியப் படைவீரர்களைப் போர்க் கைதிகளாகப் பிடித்து ஊடகங்கள் மூலம் பகிரங்கப்படுத்தியது.

- கூட்டுப்படைகளை எதிர்த்து ஈராக்கும் தற்கொலைத் தாக்குதல்கள் சிலவற்றை நடத்தியது.

- கூட்டுப்படைகள் ஈராக்கின் வசம் இருக்கக் கூடுமென எதிர்பார்க் கப்பட்ட உயிரியல், இரசாயன ஆயுதங்களால் எதிர்த்தாக்குதல் நடைபெறுமென எதிர்பார்த்தன. ஆயினும் அப்படியேதும் நடக்க வில்லை. அமெரிக்கா இப்போரில் ஈராக்கின் ஆயுதக் களஞ்சிய சாலைகள், உற்பத்தி நிலையங்கள், சதாம் ஹுசைன் மற்றும் அவரது

மகன்களின் மாளிகைகள் எனக் கருதப்பட்டவற்றையெல்லாம் பல ஆயிரம் கிலோகிராம் நிறையுள்ள குண்டுகளை விமானம் மூலம் வீசியழித்தது.

- ஈராக்கின் முக்கிய நகரங்கள் ஒன்றன் பின் ஒன்றாக கடும் சண்டையின் பின்பாக கூட்டுப்படைகள் வசம் வந்தன. ஏப்ரல் 10ஆம் நாளன்று தலைநகர் பாக்தாத் நகரும் வீழ்ச்சி கண்டது. ஆயினும் சதாம் ஹுசைனும் அவரது மகன்களும் என்னவானார்கள், எங்கே போனார்கள் என்ற விபரம் தெரிய வரவில்லை. போர் நடக்கும் போது இடையிடையே அவர்கள் கொல்லப்பட்டதாகக் கூட அமெரிக்கா அறிவித்தது. ஈராக் கூட்டுப்படைகள் வசம் வந்த பின்பு அவர்கள் சிரியாவுக்குத் தப்பிச் சென்றிருக்கலாமெனவும், சிரியா அவர்களுக்கு அடைக்கலம் கொடுத்திருக்கலாமெனவும் அமெரிக்கா நம்பியது.

- சிரியாவும் பேரழிவு ஆயுதங்களைத் தம்வசம் வைத்திருப்பதாகவும் கூறி அமெரிக்கா அச்சுறுத்த ஆரம்பித்தது. ஈராக் கூட்டுப்படைகள் வசமாகியபோது சதாம் ஹுசைனின் கடந்த 25 வருட கால ஆட்சியின்போது வெறுப்புற்றிருந்த மக்கள் பலர் வீதிகளில் இறங்கி மகிழ்ச்சி ஆரவாரம் செய்தமையும் குறிப்பிடத்தக்கது. அமெரிக் காவின் ஆக்கிரமிப்பை வெறுப்பவர்களும் பலர் இருந்தனர். அமெரிக்கப் படைகளை வெளியேறுமாறு கூறி ஆர்ப்பாட்டம் செய்தமையும் குறிப்பிடத்தக்கது. இப்போர் ஆரம்பமாவதற்கு முன்பும் ஆரம்பித்த போதும் அமெரிக்கா உட்பட உலகின் பல நாடுகளின் மக்கள் ஈராக் மீது போர் தொடுக்க வேண்டாமெனக் கூறி மாபெரும் ஆர்ப்பாட்டங்கள் செய்தமையும் குறிப்பிடத்தக்கது.

- **மார்ச்** - 75வது ஒஸ்கார் (OSCAR) விருது வழங்கும் வைபவம் அமெரிக்காவின் லொஸ் ஏஞ்சல்ஸ் நகரில் நடந்தது.

| | |
|---|---|
| சிறந்த நடிகர் | - 'அட்ரியன் பிராடி' (29 வயது) |
| நடித்த படம் | - 'த பியானிஸ்ட்' |
| சிறந்த படம் | - சிகாகோ. இப்படம் மேலும் 5 விருதுகளை யும் பெற்றது. |
| சிறந்த இயக்குனர் | - 'ரோமன் போலன்ஸ்கி (த பியானிஸ்ட்) |
| சிறந்த நடிகை | - நிகாலே இட்மன் (The Hours) |
| சிறந்த காட்டூன் படம் | - ஸ்பிரிடட் அவே (ஜப்பான்) |

- ஒஸ்கார் விருதின் உண்மையான பெயர் அகாடமி விருது. The Acadamy of Motion Pictures Arts & Science என்ற அமைப்பே 1929ஆம் ஆண்டு முதலாக ஹொலிவூட் நகரத்தில் விருதுகளை வழங்கியது. தற்போது மொத்தம் 24 விருதுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

- **ஏப்ரல்** - ஈராக் முழுவதும் ஏறக்குறைய அமெரிக்கா தலைமையிலான கூட்டுப்படைகள் வசம் வந்த பின்பு பாக்தாத் நகரிலுள்ள அரும்பொருட் காட்சியகம் உள்ளூர் மக்களால் கொள்ளையிடப்பட்டது. ஈராக்கின் பண்டைய மெசப்பத்தேமியா நாகரிகத்தைப் பறை சாற்றும் இரண்டாயிரம் ஆண்டு முந்திய கலைப் பொக்கிஷங்கள் எல்லாம் கொள்ளையிடப் பட்டன. அமெரிக்கப் படைகள் இதனைத் தடுப்பதற்கு எதுவித நடவடிக்கைகளிலும் ஈடுபடவில்லை. இது உலக அரங்கில் அமெரிக்கா வுக்கு பெரிய அவப் பெயரை ஏற்படுத்தியதுடன் அதிபர் புஷ்ஷின் கலாசார ஆலோசகர்கள் இருவர் தமது பதவிகளைத் துறந்ததும் குறிப்பிடத்தக்கது.

- **ஏப்ரல்** - அமெரிக்கப் படைகளால் தேடப்பட்டு வரும் சதாம் ஹுசைனின் விசுவாசிகள் 55 பேரில் பலர் கைதாகி வந்ததுடன், சிலர் சரணடையவும் ஆரம்பித்தனர். ஈராக்கின் துணைப் பிரதமராக இருந்த தாரிக் அஸீஸ் சரணடைந்ததுவும் குறிப்பிடத்தக்கது.

- **ஏப்ரல்** - கிரேக்கத் தலைநகர் ஏதென்சில் ஐரோப்பிய ஒன்றியத் தலைவர்களின் உச்சி மகாநாடு நடந்தது. ஈராக் மீதான கூட்டுப் படைகளின் போர், ஐரோப்பிய ஒன்றியத்தில் இணையப் புதிதாக விண்ணப்பம் செய்துள்ள 10 நாடுகள் தொடர்பாக இதில் ஆராயப்பட்டது.

- சார்ஸ் (SARS) எனும் ஒருவகை வைரஸ் தொற்றுநோய் உலகத்தின் கவனத்தை ஈர்த்துள்ளது. தென்கிழக்காசிய நாடுகளிலும் சீனாவிலும் பரவிவரும் நிமோனியா காய்ச்சலான இந்நோய் சாதாரண காய்ச்சலாக ஆரம்பித்து நுரையீரலைப் பாதித்து கடும் மூச்சுத்திணறலை ஏற்படுத்தி மிக விரைவாகவே மரணத்தை ஏற்படுத்துகின்றது.

  SARS - Severe Acute Respiratory Syndrome

  - சீனா, ஹொங்கொங், கனடா ஆகிய நாடுகளை இந்நோய் மிகவும் மோசமாகத் தாக்கியுள்ளதுடன் சகல நாடுகளுக்கும் மெல்ல மெல்லப் பரவ ஆரம்பித்திருக்கின்றது.
  - உலக சுகாதாரா நிறுவனம் (WHO) இதைத் தடுப்பதற்கான தீவிரமான ஏற்பாடுகளை முடுக்கிவிட்டுள்ளது. இந்நோயைத்

தடுப்பதற்கான மருந்து இதுவரையும் கண்டுபிடிக்கப்படவில்லை. உலகின் விஞ்ஞானிகள் மிகத் தீவிரமான முயற்சிகளில் இறங்கி யுள்ளனர்.

- ஆபிரிக்க நாடுகளில் இடையிடையே சார்ஸை ஒத்த எபோலா (Ebola) எனும் ஒருவகை தொற்று நோய் காரணமாக பெருமளவான மக்கள் இரத்த வாந்தி எடுத்து இறப்பதும் குறிப்பிடத்தக்கது.

- **ஏப்ரல்** - சார்ஜா வெற்றிக்கிண்ண கிரிக்கெற் போட்டிகள் இலங்கை, பாகிஸ்தான், கென்யா, ஸிம்பாவே அணிகளிடையே நடந்தன. இறுதி ஆட்டம் பாகிஸ்தான், ஸிம்பாவே ஆகிய அணிகளிடையே நடந்தது. பாகிஸ்தான் வெற்றிக் கிண்ணத்தைச் சுவீகரித்தது.

  - தென் ஆபிரிக்கா வளைகுடாப் போரைக் காரணம் காட்டி இப்போட்டிகளிலிருந்து விலகியதால்தான் கென்யா, ஸிம்பாபே அணிகள் சேர்க்கப்பட்டு நான்கு முனைப் போட்டிகளாகியது குறிப்பிடத்தக்கது.

- **ஏப்ரல்** - ஈராக்கின் ஒரு பகுதியில் வைத்து அமெரிக்கப் படைகளால் பலஸ்தீன விடுதலை இயக்கத் தாக்குதல் தளபதிகளில் ஒருவரான அபு அபாஸ் கைது செய்யப்பட்டார். யசீர் அரபாத் இவரை விடுதலை செய்யுமாறு அமெரிக்காவைக் கோரினார்.

- **மே** - இஸ்ரேல் - பலஸ்தீன சமாதான முயற்சிகள் நடந்து கொண்டிருந்த போது இஸ்ரேலின் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்குள் யூதர்களுக்கு எதிராக பலஸ்தீன ஹமாஸ் தீவிரவாதிகளால் சில தற்கொலைக் குண்டுத் தாக்குதல்கள் நடத்தப்பெற்றன. இதனால் சமரச முயற்சிகள் பாதிப் புற்றன.

- **மே** - பிரித்தானியப் பிரதமர் ரொனி பிளேயர் அவர்களுக்கு தங்க விருது வழங்கப் போவதாக அமெரிக்கப் பாராளுமன்றம் தீர்மானம் நிறைவேற்றி யுள்ளது. ஈராக் மீதான போரில் அமெரிக்காவிற்கு உதவியமைக்காகவே இவ் உயரிய விருதை வழங்குவதாக அறிவித்துள்ளது. பிரித்தானியா விலுள்ள முன்னாள் பிரதமரான சேர் வின்சன் சேர்ச்சிலுக்கு அடுத்ததாக ரொனி பிளேயர் அவர்களே இம் மதிப்புமிக்க விருதைப் பெறுவது குறிப்பிடத்தக்கது.

- **மே** - சவூதி அரேபியாவின் ரியாட் நகரிலுள்ள மேற்குலக நிலைகள் மீது கார் மூலம் தற்கொலைக் குண்டுத் தாக்குதல்கள் நடந்தது. 35 பேரளவில்

கொல்லப்பட்டனர். சில அமெரிக்கர்களும் இதில் அடங்குவர். இஸ்லாமிய தீவிரவாதியும் அதி தீவிர அமெரிக்க எதிர்ப்பாளருமான ஒஸாமா பின் லேடனின் அல் கொய்தா இயக்கமே இத் தாக்குதலை மேற்கொண்டதாக நம்பப்படுகின்றது.

- **மே** - வட ஆபிரிக்க நாடான மொரோக்கோவின் கஸப்லங்கா நகரிலுள்ள மேற்குலக நிலைகள் மீது 10 பேரளவிலான தற்கொலைக் குண்டுதாரிகள் தாக்குதல் நடத்தினர். 30 இற்கும் மேற்பட்டோர் பலி. ஐரோப்பிய நாட்டவர் சிலரும் கொல்லப்பட்டனர். அல் கொய்தா நடத்தியதாக நம்பப்படுகிறது.
- **மே** - புகைப்பிடித்தலுக்கு எதிரான சர்வதேச ஒப்பந்தம் ஜெனீவாவில் வைத்து ஏகமனதாக ஏற்கப்பட்டு கையெழுத்தானது.
- **மே** - ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையில் ஈராக் மீதான கடந்த 15 வருட காலப் பொருளாதாரத் தடையை நீக்கும் தீர்மானம் நிறைவேறியது. ஈராக்கை இடைக்காலம் நிர்வகிப்பது தொடர்பான தீர்மானங்களும் நிறைவேறின.
- **மே** - அல்ஜீரியாவில் பாரிய பூமி அதிர்ச்சி. இரண்டாயிரம் மக்கள் கொல்லப்பட்டனர்.

* * *

| நாடுகள் | ஆட்சித் தலைவர்கள் |
|---|---|
| ஐக்கிய அமெரிக்க ஜனாதிபதி | ஜோர்ஜ் W. புஷ் |
| இந்திய ஜனாதிபதி | அப்துல் கலாம் |
| இஸ்ரேல் ஜனாதிபதி | மொஷி கட்ஸாவ் |
| தென் ஆபிரிக்கா ஜனாதிபதி | தாபோ எம் பெகி |
| எகிப்து ஜனாதிபதி | ஹொஸ்னி முபாரக் |
| தென்கொரியா ஜனாதிபதி | ரே மூஹைறன் |
| பிரான்ஸ் அதிபர் | ஜக்ஸ் ஷிராக் |
| ஜேர்மன் அதிபர் | ஜெராட் ஸ்குரூடர் |
| ஜப்பான் பிரதமர் | ஜுனிரோ கொய்சுமி |
| இந்தியா பிரதமர் | வாஜ்பாய் |
| சுவீடன் பிரதமர் | கோயரான் பெர்சான் அன்னிகா |
| ஐவரிகோஸ்ட் பிரதமர் | செய்டோ டியாற்றா |
| ஸ்பெயின் பிரதமர் | ஜோசப் மரியா அஜ்னர் |
| பிரித்தானியா பிரதமர் | ரொனி பிளேயர் |
| மலேசியா பிரதமர் | மகதிர் மொகமட் |
| கியூபா ஜனாதிபதி | பிடல் காஸ்ட்ரோ |
| புருணே மன்னர் | ஹசனால் போல்கியா |
| ஐவரிகோஸ்ட் ஜனாதிபதி | கபெக்கோ |
| பாகிஸ்தான் பிரதமர் | ஜபருல்லா ஜமாலி |
| நைஜீரிய ஜனாதிபதி | ஒலுசுகன் ஒபசன் ஜோ |
| பாகிஸ்தான் அதிபர் | ஜெனரல் பெர்வஸ் முஷாரவ் |
| கனடா பிரதமர் | ஜீன் கிரீச்சியன் |
| அவுஸ்திரேலியா பிரதமர் | ஜோன் ஹவார்ட் |
| நேபாள மன்னர் | ஞானேந்திரா |
| ஜோர்தான் மன்னர் | அப்துல்லா |
| ஈரான் ஜனாதிபதி | முகமட் கதாமி |
| ஸிம்பாவே ஜனாதிபதி | ரொபேட் முகாபே |
| மாலைதீவு ஜனாதிபதி | அப்துல் கையூம் |
| பலஸ்தீன ஜனாதிபதி | யசீர் அரபாத் |
| ரஷ்ய ஜனாதிபதி | விளாடிமிர் புடின் |

(2003 மே 24இல் தொகுக்கப்பட்ட இவை மாற்றத்திற்குரியது.)

## சர்வதேச உடன்படிக்கைகள்

சர்வதேசத்தின் கவனத்தை அவ்வப்போது ஏற்படுத்தப்படும் உடன்படிக்கைகள் ஈர்த்து வருகின்றன. காலத்துக்குக் காலம் நாடுகளின் தலைவர்களாலும், நிறுவனங்களாலும் அக் காலச் சூழ்நிலைக்கேற்ப இவை ஏற்படுத்தப் படுகின்றன.

இவை அணு ஆயுதக் குறைப்பு, போர் நிறுத்தம், சமாதானம், சூழற் பாதுகாப்பு, பொருளாதார மேம்பாடு, மனித நலன்களை பேணலும் உயர்த்தலும் என்ற பல நோக்கில் இடம்பெறும். அவற்றில் சிலவற்றை இங்கே பார்க்கலாம்.

### 1) டேய்ட்டன் உடன்படிக்கை (Dayton Agreement)

யூகோஸ்லாவியா என்ற நாடு முன்னர் 6 குடியரசுகள் சேர்ந்த ஒரு கூட்டமைப்பாக இருந்தது. அவை சேர்பியா, மொண்ரே - நெக்ரோ, பொஸ்னியா - கெர்ச்சகோவினா, குரோஷியா, மசிடோனியா, சிலேவேனியா ஆகியவையே.

இதில் பொஸ்னியா - கெர்ச்சகோவினா என்ற குடியரசில் இடம்பெற்ற உள்நாட்டுப் போருக்குத் தீர்வாக 1995 டிசம்பரில் பிரான்ஸ் தலைப்பட்டினம் பாரிஸ் நகரத்தில் கையெழுத் தானதே இந்த டேய்ட்டன் உடன்படிக்கை.

பொஸ்னிய, சேர்பிய, குரோஷிய ஜனாதிபதிகள் இதனை ஏற்படுத்தி யிருந்தனர்.

அமெரிக்க, ஜேர்மனிய, பிரான்சிய ஆட்சித் தலைவர்களும் பொஸ்னி யாவில் இயல்பு நிலை திரும்ப டேய்ட்டன் உடன்படிக்கை ஏற்படப் பாடு பட்டனர். அமெரிக்காவின் டேய்ட்டன் நகரில் நடைபெற்ற இணக்கப் பேச்சுவார்த்தைகளின்போது இவ் உடன்படிக்கை தொடர்பான விதிகள் வகுக்கப்பட்டதால் இதற்கு இப்பெயர் வந்தது. இவ் உடன்பாட்டின்படி பொஸ்னிய குடியரசில் முஸ்லீம்கள், சேர்பியர்கள், குரோசியர்களுக்கெனத் தனித் தனியான ஜனாதிபதிகள் தேர்தலின் மூலம் தெரியப்பட்டனர். கிழக்கு ஐரோப்பாவில் கொழுந்து விட்டெரிந்த பிரச்சனை ஒன்றுக்கு பெருமளவு தீர்வை ஏற்படுத்திய வகையில் இவ் உடன்படிக்கை வெற்றிகரமான ஒன்றாக அமைந்துவிட்டது.

**2) ஒஸ்லோ உடன்படிக்கை** (Osslo Agreement)

மத்திய கிழக்கில் பல தசாப்தங்களாக தீராத இனப்பகையாகத் தொடரும் இஸ்ரேல், பலஸ்தீனப் பிரச்சினையைத் தணித்து நீக்கவென உருவானதே இதுவாகும். ஆனால் தனது நோக்கத்தில் எத்தனை வீதம் வெற்றியடைந்தது என்பது இன்றைய காலகட்டத்தில் கேள்விக் குறியாகவே உள்ளது. ஏனெனில் இஸ்ரேல் - பலஸ்தீன முரண்பாடுகள் புதிய, புதிய வடிவங்களை எடுத்து வருவதேயாகும். இஸ்ரேலிய பலஸ்தீனத் தலைவர்களால் 1993இல் அமெரிக்காவின் வெள்ளை மாளிகை வளாகத்தில் வைத்து ஒஸ்லோ உடன்படிக்கை கையெழுத்தானது. மத்திய கிழக்கில் சமாதான யுகத்தை இது தோற்றுவிக்கும் என உலகமே புகழ்ந்ததுடன் உரியவர்களுக்கு 1994இல் உலக சமாதானத்திற்கான நோபல் விருதும் கொடுக்கப்பட்டது.

ஹமாஸ் போன்ற பலஸ்தீனத் தீவிரவாதிகள் இவ் உடன்படிக்கையைக் கடுமையாக எதிர்த்து தொடர் கிளர்ச்சி நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின் றனர். இஸ்ரேலிலும் யூதத் தீவிர வலதுசாரிகள் இதனைக் கடுமையாக எதிர்த்ததுடன் உடன்பாட்டை ஏற்படுத்திய பிரதமர் யிற்சாக் ரபீனையும் சுட்டுக் கொன்றனர்.

பாரம்பரியமாகப் பகைமை பாராட்டி வந்த இஸ்ரேலிய யூதர்களும், பலஸ்தீனர்களும் ஒஸ்லோ உடன்படிக்கையின் மூலமே பரஸ்பரம் அங்கீ கரித்ததினால் இது முதன்மையும் பிரபலமும் பெற்றது.

அதாவது பலஸ்தீனர்கள் இஸ்ரேல் என்று ஒரு நாடு இருப்பதனை முதன்முதலாக அப்போதுதான் ஒப்புக் கொண்டனர். அதே போல இஸ்ரேலும்

பலஸ்தீன விடுதலை இயக்கத்தை விடுதலைக்காகப் போராடும் இயக்கமென முதற்தடவையாக ஒப்புக் கொண்டது. அதுவரை பலஸ்தீன விடுதலை இயக்கத்தை ஒரு பயங்கரவாத இயக்கமாகவே இஸ்ரேல் அழைத்து வந்தது.

ஒஸ்லோ உடன்படிக்கையைத் தொடர்ந்து இஸ்ரேலியப் படைகள் காசா, ஜெரிக்கோ போன்ற பலஸ்தீனர்களின் தாயகப்பகுதிகளிலிருந்து பின்வாங்கின. அத்துடன் யூதக் குடியிருப்புகளில் கணிசமானவற்றை மீள எடுத்துக் கொண்டது. பலஸ்தீன சுயாட்சிப் பிரதேசங்கள் உருவாக்கப்பட்டு யஸீர் அரபாத் தலைமையிலான பலஸ்தீன அதிகார சபையிடம் ஆட்சிப் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டது. அதுவரையும் நிலப் பரப்புக்கள் எதுவுமற்ற நிலையில் டூனிஸியாவில் இயங்கி வந்த பலஸ்தீன அரசாங்கம் இப்போது நிலப் பரப்புக்களுடன் கூடிய அரசாக உள்ளது. ஆயினும் இஸ்ரேலில் பலஸ்தீனர்கள் தற்கொலைக் குண்டுத் தாக்குதலை தீவிரமாக நடத்தும் காலங்களில் இஸ்ரேலியப் படைகள் பலஸ்தீனர்களின் நிலப்பரப்புக்குள் புகுவதும், ஜனாதிபதி யசீர் அரபாத்தின் தலைமையகக் கட்டடத்தைச் சுற்றி முற்றுகையிட்டு அவரைக் கைதி போன்றதொரு நிலைக்கு ஆளாக்குவதும் மாறி மாறி நிகழ்கின்றன. பலஸ்தீனப் பொலிசாரும் இஸ்ரேலின் தாக்குதல்களுக்கு ஆளாவதும் அன்றாட நிகழ்வுகளாகிவிட்டன. நோர்வேயின் தலைப்பட்டினம் ஒஸ்லோவில் வைத்து நோர்வேயின் மிகுந்த சமாதானப் பங்களிப்புடன் உருவாக்கப்பட்டு வரலாற்றாய்வாளர்களால் உரத்து உச்சரிக்கப்பட்ட இவ் உடன்படிக்கையும் அதன் முதன்மை நோக்கத்தை நிறைவேற்றத் தவறி விட்டது எனலாம்.

### 3) ஒட்டாவா உடன்படிக்கை (Ottawa Agreement)

உலகெங்கும் நிலக்கண்ணி வெடிகளைத் தடைசெய்யும் நோக்குடன் 1997ஆம் ஆண்டு கனடாவின் தலைநகர் ஒட்டாவா நகரில் வைத்து கையெழுத்தான உடன்படிக்கையே இது.

133 நாடுகளால் கையெழுத்திடப்பட்ட இவ் ஒப்பந்தம் கைச்சாத்தான இடத்தின் பெயரைக் கொண்டு அழைக்கப்படுகின்றது.

1999 மார்ச் 1ஆம் திகதி முதல் ஒட்டாவா ஒப்பந்தம் நடைமுறைக்கு வந்தது.

மிதிவெடிகளின் பாவனை, உற்பத்தி, சேகரித்து வைத்தல், கைமாற்றம் செய்தல் முதலியவற்றைத் தடை செய்யும் அதேவேளை முற்றாக ஒழித்து விடுவதற்கும் சட்டம் அமுல் செய்யப்பட்டுள்ளது. உலக நாடுகளில் குறிப்பாக யுத்தப் பிரதேசங்களில் பயன்படுத்தப்படும் நிலக்கண்ணிவெடி என்ற ஆயுதம் சர்தேச ஒப்பந்தம் ஒன்றின் மூலம் தடை செய்யப்படுவது வரலாற்றில் இதுவே முதன்முறை.

யுத்தத்தில் சம்பந்தமற்ற அப்பாவிப் பொதுமக்களின் பாதிப்புக்களைத் தவிர்க்க வேண்டுமென்ற சர்வதேச பலமுனை அழுத்தங்களின் விளைவே இவ் உடன்பாடு.

**4) வை நதி உடன்படிக்கை** (Y River Agreement)

இஸ்ரேல் - பலஸ்தீனப் பிரச்சினைக்கு 1993 இல் உருவான ஒஸ்லோ உடன்படிக்கையின் பின்னரான கொந்தளிப்பு நிலைகளைத் தணிக்கவென இடைக்கால ஏற்பாடாக 1998இல் அமெரிக்காவில் வைத்துக் கையெழுத் தானதே இவ் உடன்படிக்கை.

அமெரிக்காவின் வை நதிக் கரையோரம் உருவான இவ் உடன்படிக்கை 'நிலத்துக்காகச் சமாதானம்' (Land for Peace Deal) என்பதை தொனிப் பொருளாகக் கொண்டுள்ளது. அதாவது பலஸ்தீனர்களின் நிலத்தை அவர்களுக்கு வழங்கி இஸ்ரேலியர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் நோக்கிலானது. இதுவும் முழு வெற்றி பெறவில்லை.

**5) சிம்லா உடன்படிக்கை**

இந்தியாவினாலும், பாகிஸ்தானினாலும் சர்ச்சைக்குரியதான காஷ்மீர் தொடர்பாக 1972இல் ஏற்பட்ட உடன்படிக்கையே இது. அப்போதைய இந்திய, பாகிஸ்தானிய தலைவர்களான இந்திரா காந்தி, சுல்பிகார் அலி பூட்டோ ஆகியோரே இதில் ஒப்பமிட்டனர். ஆனாலும் காஷ்மீர் தொடர்பான இவ் இரு நாடுகளதும் சர்ச்சை காலாகாலம் தொடர்கின்றது. பாகிஸ்தானின் ஆதரவு பெற்ற காஷ்மீர் முஸ்லிம் தீவிரவாதிகள் இந்தியாவில் வன்முறை நடவடிக்கையில் ஈடுபடுவதை இந்தியா எல்லை தாண்டிய பயங்கரவாதம் என்கிறது.

**6) சர்வதேச சிறுவர் சாசனம்** CRC

சிறுவர்களது உரிமைகளும், நலன்களும் மேம்படுத்தப்பட வேண்டுமென் பதற்காக 1989 நவம்பர் 20இல் 139 நாடுகள் ஒன்று கூடி ஜெனீவாவில் கைச்சாத்திட்ட ஓர் ஒப்பந்தமே இது.

இச்சாசனத்தில் சிறுவர்களது உரிமைகள் தொடர்பாக 42 உறுப்புரைகள் கூறப்பட்டுள்ளன. இலங்கை 1990இல் இச் சாசனத்திற்கு உடன்பாடு தெரிவித்துக் கையெழுத்து இட்டது. சிறுவர் துஷ்பிரயோகங்களைத் தடுத்து சிறுவர் நலன்கள் பேணப்படல் வேண்டுமென்ற கருத்து அண்மைக் காலத்தில் படிப்படியாகக் கவனம் பெற்று வருவது குறிப்பிடத்தக்கது.

### 7) காம்ப் டேவிட் உடன்படிக்கை

இஸ்ரேலிய எகிப்தியத் தலைவர்கள் 1978இல் செய்த உடன்படிக்கையே இது. இஸ்ரேலுக்கு எதிராக எகிப்து அரபு நாடுகளுடன் இணைந்து 1967இல் நடத்திய 6 நாள் போரின்போது தனது சினாய் தீபகற்பப் பகுதியை இழந்தது. அப்பகுதியை மீளப் பெறுவதற்காக இஸ்ரேலுடன் செய்து கொண்ட சமாதான ஒப்பந்தமே இதுவாகும்.

இதற்காக 1979இல் உலக சமாதானத்திற்கான நோபல் பரிசை உரிய தரப்பினர் பெற்றுக் கொண்டனர். காம்ப் டேவிட் உடன்படிக்கையை விரும்பாத எகிப்திய தீவிரவாதிகளால் எகிப்திய ஜனாதிபதி அன்வர் சதாத் படுகொலை செய்யப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

### 8) பெரிய வெள்ளி உடன்படிக்கை (Good Friday Agreement)

வட அயர்லாந்துப் பிரச்சனைக்குத் தீர்வாக 1998 ஏப்ரலில் கிறிஸ்தவர்களின் புனித நாளான பெரிய வெள்ளி தினத்தன்று கையெழுத்தானதே இது.

* * *

*கடினமான வேலையைச் செய்வதில் மகிழ்ச்சியைக் காணும் மனநிலை கொண்ட மனிதர்களே எப்பொழுதும் வெற்றி வீரர்கள் ஆவார்கள்.*
*- மில்ரன்*

## உலகம் கண்ட போர்கள்

### 1) சிலுவைப் போர் (கி. பி. 1095 - 1291)

முஸ்லிம்களின் கட்டுப்பாட்டின் கீழிருந்த புனிதப் பிரதேசங்களைக் கைப்பற்ற மேற்கத்தைய கிறிஸ்தவர்களால் தொடரப்பட்ட யுத்தம் இது. எட்டுப் பாரிய சிலுவை யுத்தங்களும் தோல்வியில் முடிந்தன. 1291ஆம் ஆண்டு இறுதியாக நடைபெற்ற சிலுவை யுத்தத்தாலும் புனிதப் பிரதேசங்களைக் கைப்பற்ற முடியாமற் போனது.

### 2) அமெரிக்க சுதந்திரம் யுத்தம் (1775 - 1784)

பிரித்தானியாவின் காலனித்துவத்தின் கீழிருந்த அமெரிக்கா தன்னைச் சுதந்திர நாடாகப் பிரகடனப்படுத்த நடைபெற்றது. ஜோர்ஜ் வாஷிங்டனின் தலைமையிலான இப் போரின் மூலம் அமெரிக்கா விடுதலை பெற்று 1784 ஜூலை 04இல் சுதந்திரப் பிரகடனம் செய்தது. ஜோர்ஜ் வாஷிங்டன் அமெரிக்காவின் முதலாவது ஜனாதிபதியாகப் பதவி வகித்தார். அவரது பெயரிலேயே வாஷிங்டன் நகரம் நிர்வாகத் தலைநகராக உள்ளது.

### 3) பிரெஞ்சுப் புரட்சியும் நெப்போலியன் யுத்தமும் (1792 - 1815)

முதலாம் நெப்போலியனின் கீழ் ஏனைய ஐரோப்பிய வல்லரசுகளுடன் நடைபெற்ற

யுத்தம் இது. இதில் பிரிட்டன், பிரஷ்யா (தற்போதைய ஜேர்மனி), ரஷ்யா, ஒஸ்ரியா ஆகிய நாடுகள் பங்கேற்றன.

பிரான்சியச் சக்கரவர்த்தியான நெப்போலியன் பிரித்தானிய பிரஷ்யப் படைகளினால் தோற்கடிக்கப்பட்டு ஆபிரிக்காவிலுள்ள எல்பா தீவில் சிறை வைக்கப்பட்டான். பின்னர் நெப்போலியன் அங்கிருந்து தப்பியோடி மீண்டும் படை திரட்டிப் போரிட்டான். பெல்ஜியத்தின் வோட்டலூ எனுமிடத்தில் அவனது படைகள் தோற்கடிக்கப்பட்டுக் கைதுசெய்யப் பட்டான். பிரித்தானியப் படைகளின் தளபதியாக இருந்த வெலிங்டன் பிரபுவினாலேயே நெப்போலியனது படைகள் தோற்கடிக்கப்பட்டன. நெப்போலியன் சென்ற் கெலனா தீவில் சிறை வைக்கப்பட்டு அங்கேயே இறந்துபோனான். நெப்போலியன் பிரான்சில் உருவாக்கிய நீதிக்கோவை இன்னும் அந்நாட்டின் சட்டவாக்கத்தில் பெரும்பங்கை வகித்து அவனது பெயரைக் கூறிக் கொண்டு இருக்கிறது.

### 4) அமெரிக்கச் சிவில் யுத்தம் (1861 - 1865)

அமெரிக்கச் சமஷ்டி அரசுக்கும் தெற்கேயுள்ள 11 தெற்கு மாநிலங்களுக்கு மிடையே நடைபெற்ற போர் இது. பின்னர் வடக்கு - தெற்கு என்று அமெரிக்கா பிளவுபட்டது. பின்னர் வடக்குப் பகுதியால் தெற்குப்பகுதி வெல்லப்பட்டு ஒன்றிணைக்கப்பட்டது.

### 5) முதலாம் உலகப்போர் (1914 - 1918)

ஒஸ்ரியாவின் இளவரசர் ஆர்ச் டியூக் பேர்டினன்ட் யூகோஸ்லாவியாவின் சரஜேவோ நகரில் வைத்து 1914 ஜூலை 28ஆம் திகதி படுகொலை செய்யப்பட்டார். இதுவே முதலாம் உலகப்போர் மூளக் காரணமாயிற்று. பிரான்ஸ், பிரிட்டன், ரஷ்யா, அமெரிக்கா ஆகிய நேசநாடுகள் ஒன்றிணைந்து ஓரணியில் போரிட்டன. ஜேர்மனி, ஒஸ்ரியா, ஹங்கேரி, துருக்கி ஆகிய நாடுகள் இன்னொரு அணியிலுமாக போரிட்டன. முடிவில் முதலாவதாகக் கூறப்பட்ட அணியே போரில் வெற்றிபெற்றது. முதலாம் உலகப்போர் 1918 நவம்பர் 11ஆம் திகதியன்று முடிவுக்கு வந்தது.

### 6) ஸ்பானிய சிவில் யுத்தம் (1936 - 1939)

பாஸிஸ இத்தாலி, நாஸிஸ ஜேர்மனி ஆகியவற்றின் ஆதரவுடன் குடியரசுவாத அரசுக்கு எதிராக நடத்திய இராணுவப் புரட்சியே இது. ஜெனரல் பிரான்ஸ்சிஸ்கோ பிராங்கோ தலைமையிலான தேசியவாதப்படை இறுதியில் வென்றது.

### 7) இரண்டாம் உலகப் போர் (1939 - 1945)

ஜேர்மனிய தேசியவாதி அடால்ப் ஹிட்லரால் ஆரம்பிக்கப்பட்ட போர் இது. ஜேர்மனி, ஜப்பான், இத்தாலி ஆகியன அச்சு அணியில் நின்றன. இவற்றுடன் இங்கிலாந்து, பிரான்ஸ், அமெரிக்கா, ரஷ்யா ஆகியன நேச அணியில் நின்று நடத்திய பெரும் வரலாற்றுப் போர் இது. ஜேர்மனிய ஹிட்லரின் படைகள் 1939 செப்ரெம்பர் 01இல் போலந்தைக் கைப்பற்றியதுடன் இரண்டாம் உலகப்போர் ஆரம்பமானதாகக் கூறப்படுகின்றது.

1889இல் பிறந்த ஹிட்லர் 1933இல் ஜேர்மனியின் அரசைப் பொறுப் பேற்றான். 1938இல் ஒஸ்ரியா, செக்கோசிலாவாக்கியா ஆகிய நாடுகளை ஜேர்மனியப் படைகள் கைப்பற்றின.

1940 ஏப்பிரலில் நோர்வே, டென்மார்க், பிரான்ஸ் ஆகிய நாடுகளை ஜேர்மன் படைகள் கைப்பற்றின.

ஐரோப்பாவின் அத்திலாந்திக் மற்றும் ஸ்கண்டிநேவியன் துறைமுகங்க ளெல்லாம் ஜேர்மனியின் கைக்கு வந்தது.

1940இல் பிரித்தானியாவை ஜேர்மனி மிக மூர்க்கமாகத் தாக்கியபோதும் கைப்பற்ற முடியவில்லை. 1941இல் ஜேர்மன் படைகள் ரஷ்யாவுக்குள் நுழைந்தன. ஆரம்பத்தில் ரஷ்யப் படைகள் தோற்றுப் பின்வாங்கின. ஆயினும் அப்போதைய சோவியத் ஒன்றிய அதிபர் ஜோசப் ஸ்ராலினால் ரஷ்யப் படைகள் மீளவும் ஒன்று திரட்டப்பட்டது. ஜேர்மனியின் படைகளுக்கு எதிராக வெற்றிகரமாகத் தாக்குதல் நடத்தப்பட்டது. ஜேர்மனியப் படைகள் பெரும் சேதத்துடன் பின்வாங்கி ஓடின.

1944 ஜூன் 6இல் பிரிட்டிஷ் துருப்புக்கள் பிரான்ஸ்சின் நோர்மண்டிக் கடற்கரையில் தரையிறங்கி Operation "D" Days எனும் பெயரில் பெரும் தாக்குதலை அச்சுப் படைகளுக்கெதிராகத் தொடுத்தன. நேச நாட்டுப் படைகள் மாபெரும் வெற்றி பெற்றன.

பிரான்ஸ் முழுவதும் விடுவிக்கப்பட்டது. இவ் வெற்றியுடன் நேச நாட்டுப் படைகளின் வெற்றிகள் ஏறுமுகத்தில் சென்றன.

1945 ஏப்ரலில் நேசநாட்டுப் படைகள் ஜேர்மனியைக் கைப்பற்றின. சர்வாதிகாரி ஹிட்லர் தான் உயிருடன் பிடிபடுவதிலிருந்து தப்புவதற்காக 1945 ஏப்ரல் 30இல் பெர்லின் நகர நிலவறை ஒன்றில் வைத்துத் தற்கொலை செய்ததாகக் கூறப்படுகின்றது.

1945 ஆகஸ்ட் 6, 9 ஆகிய தினங்களில் முறையே ஜப்பானின் ஹிரோஷிமா, நாகசாகி நகர்கள் மீது அமெரிக்கா அணு குண்டுகளைப் போட்டது. இதையடுத்து ஜப்பான் சரணடைவதாக அறிவித்தது. ஜப்பானின் சரணாகதியுடன் 1945 ஆகஸ்ட் 15இல் இரண்டாம் உலகப்போர் முடிவுக்கு வந்தது.

### 08) இந்தியா - பாகிஸ்தானியப் போர்

காஷ்மீர் தொடர்பாக இந்தியாவும், பாகிஸ்தானும் 1947இல் போர் புரிந்தன. காஷ்மீரின் 1/3 பகுதி பாகிஸ்தான் வசமானது. 1949 ஜனவரியில் ஐக்கிய நாடுகள் சபையின் மத்தியஸ்தத்துடன் யுத்த நிறுத்தம் ஏற்பட்டது. 1965இலும் காஷ்மீர் தொடர்பாக இந்தியாவும் பாகிஸ்தானும் போர் புரிந்தன.

1971 டிசம்பரில் இந்தியா பாகிஸ்தானுடன் போர்புரிந்து கிழக்குப் பாகிஸ்தானைப் பங்களாதேஷ் எனும் தனி நாடாக்கியது.

1999 ஜூலை மாதத்தில் பாகிஸ்தான் ஆதரவு பெற்ற காஷ்மீர் முஸ்லிம் போராளிக் குழுக்கள் காஷ்மீரின் கார்கில், ட்ராஸ், பட்டாலிக் போன்ற பிரதேசங்களில் ஊடுருவின. இதனால் பின்னணியில் நின்ற பாகிஸ்தான் படைகளுடனும் இந்தியப் படைகள் போரிட்டு மேற்கூறிய பகுதிகளைக் கைப்பற்றின. பாகிஸ்தான் ஆதரவு பெற்ற குழுக்கள் இந்திய நிலப்பரப்பில் வன்முறைகளில் ஈடுபடுவதை இந்தியா 'எல்லை தாண்டிய பயங்கரவாதம்' என்ற சொல்லின் மூலம் அழைத்து வருகின்றது. இராஜதந்திர முரண்பாடு களும் அடிக்கடி தோன்றுகின்றன.

### 9) கொரிய யுத்தம் (1950 - 1953)

கம்யூனிச வடகொரியா, தென்கொரியாவை ஆக்கிரமித்தபோது போர் மூண்டது. அமெரிக்கா தலைமையிலான 16 நாடுகளின் அணி வட கொரியாவுக்கு எதிராகத் தாக்குதலை நடத்தின. பல்லாயிரம் அமெரிக்கப் படையினர் கொல்லப்பட்டும், காணாமலும் போயினர். சில இலட்சம் வட, தென் கொரியப் படை வீரர்கள் கொல்லப்பட்டனர். ஈற்றில் வட கொரியா தோற்கடிக்கப்பட யுத்தம் முடிவுக்கு வந்தது.

### 10) மத்திய கிழக்குப் போர்

இஸ்ரேல் அரபு நாடுகளுடன் 3 முறை யுத்தங்களை நடத்தியுள்ளது. 1948இல் இஸ்ரேல் எனும் நாடு உருவாக்கப்பட்டவுடன் ஜோர்தான், சிரியா, எகிப்து தலைமையிலான அரபு நாடுகள் இஸ்ரேலை அழிக்கப் போர் தொடுத்தன.

ஆனால் இஸ்ரேல் அமெரிக்காவினது பலத்த ஆயுத தளபாட ஆதரவுகளுடன் அரபுநாடுகளைத் தோற்கடித்தது.

1967இல் மீண்டும் எகிப்து, சிரியா, ஜோர்தான் ஆகிய நாடுகளின் தலைமையில் அரபு நாடுகளின் தலைமையில் அரபு நாடுகள் இஸ்ரேல் மீது போர் தொடுத்தன.

ஆறு நாள் நடந்த இப்போரிலும் இஸ்ரேல் அமெரிக்காவின் ஆதரவுடன் வீரத்துடன் போராடி பெரு வெற்றியீட்டியது. அரபு நாடுகள் எகிப்திய சினாய் தீபகற்பம், காஸா நுழைவாயில்; ஜோர்தானின் மேற்குக்கரை, கிழக்கு ஜெருசலேம், சிரியாவின் கோலான் குன்றுகள் ஆகியவற்றை இஸ்ரேல் வசம் இழந்தன.

அதாவது இஸ்ரேல் தனது நாட்டைப்போல இன்னுமொரு பரப்பு நிலப்பகுதியைக் கைப்பற்றிப் பாதுகாப்பு ரீதியாகத் தன்னை ஸ்திரப்படுத்திக் கொண்டது.

1973 இல் சிரியா, எகிப்து என்பன இஸ்ரேலுடன் போரிட்டும் தாம் இழந்த நிலப்பகுதிகளைக் கைப்பற்ற முடியவில்லை. இதனாலேயே எகிப்து தனது சினாய் தீபகற்பப் பகுதியை மீளப் பெறுவதற்காக 1978இல் இஸ்ரேலுடன் காம்ப் டேவிட் உடன்படிக்கைக்குச் செல்ல நேரிட்டது.

மத்திய கிழக்கில் அமெரிக்காவின் செல்லப்பிள்ளையாக உள்ள இஸ்ரேல் முழு அரபு நாடுகளுக்கும் ஐந்து தசாப்தங்களுக்கு மேலாகச் சவாலாக உள்ளது.

### 11) யொம் கிப்பூர் யுத்தம் (1973)

யொம்கிப்பூர் யூத விடுமுறை தினத்தன்று எகிப்தும், சிரியாவும் இணைந்து இஸ்ரேலுக்கு எதிராக நடத்திய வியப்புக்குரிய தாக்குதல் இது. சினாய் பாலைவனத்தினுள் எகிப்து நுழைந்தது. நவெம்பர் 11ஆம் திகதி இஸ்ரேல் எகிப்துடன் போர் நிறுத்தம் செய்தது.

### 12) ஈரான் - ஈராக் யுத்தம் (1980 - 1988)

1980ஆம் ஆண்டு ஈரானை ஈராக் ஆக்கிரமித்த போது வெடித்த யுத்தம். இந்த யுத்தத்தினால் இரு தரப்பிலுமாக ஒரு மில்லியன் பேர் உயிரிழந்தனர். 1988ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் ஐ. நா. அநுசரணையுடன் யுத்த நிறுத்தம் ஏற்பட்டது.

### 13) போக்லாந்து யுத்தம் (1982)

பிரிட்டனுக்குச் சொந்தமான போக்லாந்து தீவுகள் ஆர்ஜென்டீனாவால் ஆக்கிரமிக்கப்பட்டதையடுத்து உருவான யுத்தம் இது. 70 தினங்கள் நடைபெற்ற சண்டையை அடுத்து ஆர்ஜென்டீனா பிரிட்டனிடம் தோல்வி யடைந்தது.

### 14) ஆப்கானிஸ்தான் யுத்தம் (1978 - 1989)

ஆப்கானிஸ்தானிலிருந்த கம்யூனிஸ சார்பு அரசாங்கத்தைப் பாதுகாப்பதற் காக 1978இல் சோவியத் படைகளை எதிர்த்து முஜாகுதீன் போராளிகள் கடும் யுத்தம் புரிந்தனர். முஜாகுதீன் போராளிகளுக்கு அமெரிக்கா பாகிஸ்தான் ஊடாக அதி நவீன இராணுவ உபகரணங்களைத் தாராளமாகக் கொடுத்தது.

சோவியத் அமெரிக்கப் பனிப்போரின் தாக்கமே இந்த யுத்தம். முஜாகுதீன் போராளிக் குழுக்களின் தாக்குதலை எதிர்கொள்ள முடியாமல் ஒரு இலட்சத்துப் பதினையாயிரம் சோவியத் படைகள் தோல்வியைத் தழுவிப் பின்வாங்கின. சோவியத் யூனியனுக்கு வரலாற்றில் கிடைத்த மிக மோசமான தோல்வியாக இது கூறப்படுகின்றது.

### 15) வளைகுடாப் போர்

ஈராக் 1990 ஓகஸ்டில் குவைத்தை ஆக்கிரமித்தது. குவைத்தைத் தனது 25வது மாகாணமெனவும் அறிவித்துக் கொண்டது. ஈராக் குவைத்தை விடுவிக்க வேண்டுமென ஐ. நா. சபை தீர்மானம் நிறைவேற்றியது. பெரும்பாலான உலக நாடுகள் ஈராக்கின் இச் செயலைக் கண்டித்தன. ஈராக் குவைத்தை விடுவிக்க மறுத்தது. ஈற்றில் அமெரிக்கா தலைமையில் 28 நாடுகள் நேச நாட்டுப் படைகளாகத் திரண்டு ஈராக்குக்கு எதிராகப் பாலைவனப் புயல் நடவடிக்கை (Operation Desert Storm) எனும் பெயரில் தாக்குதலைத் தொடுத்தன. 1991 ஜனவரியில் நடைபெற்ற இப்போரே வளைகுடாப் போர் (Gulf war) எனவும் அழைக்கப்படுகின்றது. ஈராக்கியப் படைகள் தோற்கடிக்கப்பட்டு குவைத் விடுவிக்கப்பட வளைகுடாப் போர் முடிவுக்கு வந்தது.

### 16) பொஸ்னியா யுத்தம் (1992 - 1995)

யூகோஸ்லாவியாவின் குடியரசுகளில் ஒன்றாக இருந்த பொஸ்னியா கெர்ச்சகோவினாவில் 1992ஆம் ஆண்டில் முஸ்லீம், சேர்பிய, குரோஷிய இனத்தவர்களிடையே நடைபெற்ற உள்நாட்டுப் போர் இது. ஆயிரக்கணக் கான முஸ்லிம்கள் சேர்பியர்களால் படுகொலை செய்யப்பட்டனர். ஆயிரக்கணக்கான பொஸ்னிய முஸ்லீம் பெண்கள் சேர்பியர்களால் இனச் சுத்திகரிப்பு (Ethnic cleaning) என்ற பெயரில் பாலியல் வல்லுறவுக்கு ஆளாக்கப்பட்டனர். 'டேய்ட்டன்' உடன்படிக்கை வெற்றிகரமாக நடை முறைக்கு வந்ததைத் தொடர்ந்து இந்த யுத்தம் முடிவுக்கு வந்தது.

17) கொசோவா யுத்தம் (1998 - 1999)

யூகோஸ்லாவியாவின் மாநிலங்களுள் ஒன்றாகிய கொசோவா தொடர்பாக நடைபெற்ற யுத்தம் இது. இம் மாநிலத்தில் 90% ஆனோர் அல்பேனியர்கள். மிகுதி 10% சேர்பியர்கள். அல்பேனியர்கள் யூகோஸ்லாவிய அரசினால் பலதுறைகளிலும் திட்டமிட்டுப் புறக்கணிக்கப்பட்டனர். அல்பேனிய மக்கள் கொசோவா விடுதலை இராணுவம் (KLA) என்ற அமைப்பின் மூலமாக ஆயுதப் போராட்டம் நடத்தினார்கள். இப்போராட்டத்தை யூகோஸ்லாவிய அரசு கொடூரமாக ஒடுக்கி அல்பேனிய மக்களைப் படுகொலை செய்ய ஆரம்பித்தது. இதனைத் தடுத்து நிறுத்த அமெரிக்கா தலைமையிலான நேட்டோ அமைப்பு நாடுகள் 11 வார காலமாக யூகோஸ்லாவியாவின் மீது கடுமையான விமானத் தாக்குதல்களைத் தொடுத்தன. ஈற்றில் யூகோஸ்லாவியப் படைகள் 1999 ஜூனில் கொசோவாவிலிருந்து பின்வாங்கின.

* * *

| |
|---|
| வாழ்க்கை என்பது இயற்கை அளிக்கும் செல்வம்.<br>ஆனால் நல்ல வாழ்க்கை என்பது ஞானம் அளிக்கும் செல்வம். |

## சர்வதேச நாட்கள் / தினங்கள்

ஐக்கிய நாடுகள் சபை வருடத்தின் குறித்த சில நாள்களை உலக மக்களுக்கு, நல்லெண்ணத்தையும், சமூகப் பொறுப்பையும் வளர்க்கும் நோக்குடன் முதன்மை வாய்ந்த நாள்களாகப் பிரகடனம் செய்துள்ளது. இவ் அறிவிப்பு காலத்திற்குக் காலம் புதிதாகவும் இடம்பெற்று வருகின்றது.

**அவ்வாறு பிரகடனமான சில நாட்கள்**

- மார்ச் 08 - சர்வதேச மகளிர் தினம்
- மார்ச் 22 - சர்வதேச குடிநீர் தினம்
- மார்ச் 27 - சர்வதேச நாடக தினம்
- ஏப்ரல் 07 - சர்வதேச சுகாதார தினம்
- ஏப்ரல் 12 - சர்வதேச தாதிகள் தினம்
- ஏப்ரல் 22 - சர்வதேச பூமிப் பாதுகாப்பு தினம்
- ஏப்ரல் 23 - சர்வதேச புத்தகத் தினம்
- மே 1 - சர்வதேச தொழிலாளர் தினம்
- மே 3 - சர்வதேச பத்திரிகைச் சுதந்திர தினம்
- மே 8 - சர்வதேச செஞ்சிலுவைச் செம்பிறை தினம்

| | |
|---|---|
| மே 8 | - சர்வதேச நூதனசாலை தினம் |
| மே 14 | - சர்வதேச அன்னையர் தினம் |
| மே 15 | - சர்வதேச குடும்ப நலன் தினம் |
| மே 17 | - சர்வதேச தொலைத் தொடர்பு தினம் |
| மே 21 | - சர்வதேச கலாசார/ பண்பாட்டு தினம் |
| மே 31 | - சர்வதேச புகையிலை மறுப்பு தினம் |
| ஜூன் 05 | - சர்வதேச சுற்றுச்சூழல் தினம் |
| ஜூன் 26 | - சர்வதேச போதை மருந்து எதிர்ப்பு தினம் |
| ஜூலை 11 | - சர்வதேச சனத்தொகை தினம் |
| ஜூலை 26 | - சர்வதேச சித்திரவதை எதிர்ப்பு தினம் |
| ஜூலை 28 | - சர்வதேச அகதிகள் தினம் |
| செப்ரெம்பர் 8 | - சர்வதேச எழுத்தறிவு தினம் |
| ஒக்ரோபர் 01 | - சர்வதேச சிறுவர் தினம் |
| ஒக்ரோபர் 03 | - சர்வதேச மது ஒழிப்பு தினம் |
| ஒக்ரோபர் 3 | - சர்வதேச உயிரினங்கள் தினம் |
| ஒக்ரோபர் 06 | - சர்வதேச ஆசிரியர் தினம் |
| ஒக்ரோபர் 09 | - சர்வதேச அஞ்சல் தினம் |
| ஒக்ரோபர் 10 | - சர்வதேச உளச் சுகாரதார தினம் |
| ஒக்ரோபர் 15 | - சர்வதேச வெள்ளைப் பிரம்பு / விழிப்புலன் அற்றோர் நாள் |
| ஒக்ரோபர் 16 | - சர்வதேச உணவு நாள் |
| ஒக்ரோபர் 17 | - சர்வதேச வறுமை ஒழிப்பு நாள் |
| ஒக்ரோபர் 21 | - சர்வதேச விவசாய நாள் |
| ஒக்ரோபர் 30 | - சர்வதேச சேமிப்பு நாள் |
| நவம்பர் 20 | - சர்வதேச சிறுவர் உரிமை நாள் |
| நவம்பர் 21 | - சர்வதேச கடற்றொழில் நாள் |
| டிசம்பர் 01 | - சர்வதேச எயிட்ஸ் நாள் |
| டிசம்பர் 02 | - சர்வதேச ஊனமுற்றோர் நாள் |
| டிசம்பர் 10 | - சர்வதேச மனித உரிமைகள் நாள் |
| டிசம்பர் 18 | - சர்வதேச சிறுவர் ஒலிபரப்பு நாள் |

*எங்கு ஒரு நூலகம் திறக்கப்படுகிறதோ, அங்கு ஒரு சிறைச்சாலை மூடப்படுகின்றது.*

*- சுவாமி விவேகானந்தர்*

## சர்வதேச நிறுவனங்கள்

**1) சிறுவர் பாதுகாப்பு நிதியம்** (Save the Children fund - UK)

பிரித்தானியாவைத் தலைமையகமாகக் கொண்டு இயங்கும் சிறுவர் பாதுகாப்பு நிதியம் 1924ஆம் ஆண்டு ''எக்லான்ரின் ஜெப்'' எனும் பெண்மணியால் ஸ்தாபிக்கப்பட்டது. சிறுவர் நலன்களை உலகெங்கும் பேணப் பாடுபட்டு வரும் இந்நிறுவனம் அரச சார்பற்ற நிறுவன மாகும். இலங்கை உட்பட உலகின் பல நாடு களிலும் இந்நிறுவனம் கிளைப் பயணியகங் களைத் திறந்து இயங்கி வருகின்றது.

**2) றெட்பார்ணா** (REDD BARNA)

வளர்முக நாடுகளின் சிறுவர்களின் நல்வாழ்வுக் காகப் பணியாற்றும் ஸ்தாபனம் இது.

றெட்பார்ணா 1945ஆம் ஆண்டில் நோர்வே நாட்டில் நிறுவப்பட்டது. Redd Barna எனும் சொல் நோர்வீஜிய மொழியில் சிறுவர் பாதுகாப்பு எனும் கருத்தைத் தருகின்றது. இந்நிறுவனம் ஒரு அரச சார்பற்ற நிறுவனம் (NGO) ஆகும்.

**3) கிறீன் பீஸ்** (Green Peace)

சர்வதேச ரீதியில் சுற்றுச்சூழல் பாதுகாப்புக் காகவும் மேம்பாட்டுக்காகவும் பாடுபட்டுவரும் ஓர் அரச சார்பற்ற நிறுவனம் இது. பசுமைப் பாதுகாப்பை நோக்கமாகக் கொண்டு இது இயங்கி வருகின்றது.

சுற்றுச் சூழல் பாதுகாப்புக்குப் பங்கம் விளைவிக்கும் அணு ஆயுதப் பரிசோதனைகள், பாதுகாப்பற்ற முறையில் அணுக்கழிவுகளை வெளிய கற்றுதல், தொழிற்சாலைக் கழிவுகளைப் பிழையான முறையில் வெளிய கற்றுதல், திட்டமிடப்படாத முறையில் காடுகளைப் பாரதூரமாக அழித்தல் ஆகிய இன்னோரன்ன செயல்கள் நிகழும் போதெல்லாம் கிறீன் பீஸ் இயக்கம் மிகவும் வன்மையாகக் கண்டித்து வருகின்றது.

பூமிக்குப் பாதுகாப்பாக உள்ள ஓசோன் படையில் துவாரம் ஏற்படுவதைத் தவிர்க்க CFC (குளோரோ ஃபுளோரோ காபன்)க்குப் பதிலாக ஹைட்ரோ குளோரோ ஃபுளோரோ காபன், பேர் புளோரோ காபன் என்ற வாயுக்களைக் குளிர்சாதனப் பெட்டி உற்பத்திகளின் போது உபயோகிக்கும்படி கிறீன் பீஸ் பிரச்சாரம் செய்து வருகின்றது.

### 4) G 15 அல்லது குழு 15

உலக வர்த்தக ஏற்பாடுகளில் அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளது பொருளாதாரத் தேவைகள் ஒரே குரலில் ஒலிப்பதை நோக்கமாகக் கொண்டு நிறுவப்பட்ட அமைப்பே G 15.

1989ஆம் ஆண்டு யூகோஸ்லாவிய தலைநகர் ''பெல்கிரேட்'' நகரில் வைத்து இந்த அமைப்பு அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

அல்ஜீரியா, ஆர்ஜென்ரீனா, பிரேசில், சிலி, எகிப்து, இந்தியா, இந்தோனே சியா, ஜமேய்க்கா, கென்யா, மலேசியா, மெக்ஸிக்கோ, நைஜீரியா, பெரு, செனகல், வெனிசுவேலா, ஸிம்பாவே, இலங்கை ஆகிய 17 நாடுகள் தற்போது இவ் அமைப்பில் அங்கம் வகிக்கின்றன.

1998 மே மாதம் எகிப்து தலைநகர் கெய்ரோவில் நடைபெற்ற 08ஆவது உச்சி மகாநாட்டில் வைத்து இலங்கை 17ஆவது நாடாக உறுப்புரிமை பெற்றமை குறிப்பிடத்தக்கது. 09ஆவது மகாநாடு 1999 பெப்ரவரியில் ஜமேய்க்காவில் நடைபெற்றது.

### 5) வட அத்திலாந்திக் ஒப்பந்த நிறுவனம் (NATO)

பெல்ஜியம் தலைநகர் பிரசெல்ஸ் நகரில் வைத்து 1949 ஏப்ரல் 04இல் கைச்சாத்திடப்பட்ட பாதுகாப்பு, இராணுவ நலன் சார்ந்த உடன்படிக்கையே வட அத்திலாந்திக் ஒப்பந்த நிறுவனமாகும்.

அமெரிக்காவைத் தலைமை நாடாகக் கொண்டு ஜனநாயக நாடுகள் பல கம்யூனிஸ நாடுகளது அச்சுறுத்தலில் இருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்ளும் நோக்குடன் நிறுவனமயப்பட்டு ஒன்று சேர்ந்தமை குறிப்பிடத் தக்கது.

**6) இஸ்லாமிய மகாநாட்டு அமைப்பு** (OIC)

இஸ்லாமிய நாடுகள் ஒன்று சேர்ந்து 1969ஆம் ஆண்டு மொரோக்கோவில் வைத்து அங்குரார்ப்பணம் செய்யப்பட்ட அமைப்பு இது. தற்போது 54 நாடுகள் அங்கத்துவம் வகிக்கின்றன.

**7) அணிசேரா இயக்கம்** (NAM - Non Aligned Movement)

உலகம் ஒரு காலத்தில் நேட்டோ அணி, வார்சோ அணி என இரு கூறாகப் பிரிவுபட்டிருந்த போது இவ் அணிகளிலிருந்து தமது தனித்துவத்தைத் தற்காத்துக் கொள்ள விரும்பிய நாடுகள் ஒன்றுகூடி உருவாக்கிய இயக்கமே அணிசேரா இயக்கம்.

1961ஆம் ஆண்டு யூகோஸ்லாவியாவின் தலைநகர் பெல்கிரேட்டில் வைத்து இவ் அமைப்பு அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. இவ் அமைப்பின் முதலாவது தலைவராக யூகோஸ்லாவியாவின் அன்றைய அதிபர் மார்ஷல் ரிற்றோ பதவி வகித்தார்.

2003 தரவுகளின்படி அணிசேரா இயக்கத்தில் 116 நாடுகள் அங்கம் வகிக்கின்றன.

**8) சார்க்** (SAARC)

தெற்காசியப் பிராந்திய நாடுகளுக்கான ஒத்துழைப்புக் குழு எனப்படும் இவ் அமைப்பு அதன் ஆங்கிலப் பெயரின் முதல் எழுத்துக்களால் சுருக்கமாக சார்க் (SAARC) என அழைக்கப்படுகின்றது.

1985 டிசெம்பர் 12ஆம் திகதியன்று பங்களாதேஷ் தலைநகரான டாக்கா நகரில் வைத்து இலங்கை, இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ், மாலைதீவு, நேபாளம், பூட்டான் ஆகிய 07 நாடுகளின் தலைவர்களும் ஒன்று கூடிச் சார்க் அமைப்பை அங்குரார்ப்பணம் செய்து வைத்தனர்.

சார்க் அமைப்பின் தலைமைச் செயலகம் நேபாளத்தின் தலைமைப் பட்டணமாகிய காத்மண்ட் நகரில் அமைந்துள்ளது.

தற்போதைய உலக சனத்தொகையில் 20% இனர் சார்க் நாடுகளில் வசித்து வருவது குறிப்பிடத்தக்கது.

**9) பொதுநலவாய நாடுகள் ஒன்றியம் (கொமன் வெல்த்)** (Common Wealth)

பிரித்தானியாவின் குடியேற்ற ஆட்சியிலிருந்து விடுதலையடைந்த நாடுகள் பிரித்தானியாவைத் தலைமை நாடாகக் கொண்டு ஏற்படுத்திய சினேகபூர்வ அமைப்பு இது.

தற்போது 53 நாடுகள் அங்கம் வகிக்கும் கொமன் வெல்த் அமைப்பின் ஆயுட்காலத் தலைவியாகப் பிரித்தானிய மகாராணி கடமையாற்றுகின்றார். ஆகவே தற்போது தலைவியாக எலிசபெத் மகாராணி உள்ளார்.

1945 ஏப்ரல் மாதம் இலண்டனில் வைத்து கனடா, அவுஸ்திரேலியா, நியூசிலாந்து, தென் ஆபிரிக்கா, நியூபவுண்லாந்து ஆகிய நாடுகள் ஒன்று கூடி கொமன் வெல்த் அமைப்பைத் தோற்றுவித்தன.

இலங்கை இவ் அமைப்பில் 1948ஆம் ஆண்டு உறுப்புரிமை பெற்றுக் கொண்டது.

ஒவ்வொரு ஆண்டும் மார்ச் 11ஆம் திகதி பொதுநலவாய நாடுகள் தினமாகக் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது.

கொமன்வெல்த் அமைப்பின் அரசுத் தலைவர்கள் பங்கேற்கும் உச்சி மகாநாடு 02 ஆண்டுகளுக்கு ஒரு முறை நடைபெறுகின்றது.

**10)** G 8 (Group 8) / **குழு** 8

இன்றைய உலகின் முன்னணி 08 தொழில்வள நாடுகளும் ஒன்றுகூடித் தமது வணிகக் கைத்தொழில் நலன்களை மேம்படுத்திக் கொள்ளவென உருவாக் கிய அமைப்பே இது.

இவ் அமைப்பில் பிரான்ஸ், பிரித்தானியா, ஜேர்மனி, இத்தாலி, ரஷ்யா ஆகிய 5 ஐரோப்பிய நாடுகளும் கனடா, ஐக்கிய அமெரிக்கா ஆகிய இரு வட அமெரிக்க நாடுகளும் ஆசியாவில் ஜப்பானும் அங்கம் வகிக்கின்றன.

முன்னர் G 7 ஆகவிருந்த இவ் அமைப்பு 1997 ஜூனில் ரஷ்யாவும் உறுப்பு நாடாகச் சேர்த்துக் கொள்ளப்பட்டதன் மூலம் G 8 ஆகியது.

இவ் அமைப்பின் தலைவர்கள் பங்கேற்கும் உச்சி மகாநாடு வருடாந்தம் நடைபெற்று வருகின்றது.

**11) சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம்** - ICRC

சுவிற்சலாந்து நாட்டைச் சேர்ந்த சேர் ஹென்றி டுனான்ற் என்பவரால் இவ் அமைப்பு 1863ஆம் ஆண்டு ஜெனீவா நகரில் ஆரம்பிக்கப்பட்டது.

உலகின் பல பாகங்களிலும் இடம்பெற்றுவரும் இயற்கை, செயற்கை அழிவுகளுக்கும், சேதங்களுக்கும் இவ் அமைப்பு உன்னதமான மனிதநேய உதவிகளை வழங்கி வருகின்றது.

இஸ்லாமிய நாடுகளில் சிலுவைச் சின்னத்திற்குப் பதிலாகப் பிறைச் சின்னம் உபயோகிக்கப்பட்டு வருகின்றது.

தலைமையகம் சுவிற்சலாந்து, ஜெனீவா.

**12)** ASEM (Asia - Europe Meeting)

ஆசிய, ஐரோப்பிய நாடுகள் 25 இணைந்து உருவாக்கிய இவ் அமைப்பு 1998 ஏப்ரல் 04 இலண்டனில் தனது முதலாவது மகாநாட்டை நடத்தியது.

அடுத்த மகாநாடு 2000ஆம் ஆண்டில் தென்கொரியாவில் நடை பெற்றது.

**13)** **நப்தா** (NAFTA)

வடஅமெரிக்க சுதந்திர வணிக உடன்படிக்கை எனப்படும் இவ் அமைப்பு அதன் ஆங்கிலப் பெயரின் முதல் எழுத்துக்களால் சுருக்கமாக NAFTA என அழைக்கப்படுகின்றது.

ஐக்கிய அமெரிக்கா, கனடா, மெக்சிக்கோ ஆகிய நாடுகளால் எதிர் காலத்தில் கட்டற்ற பொருளாதாரச் சந்தை ஒன்றை ஏற்படுத்தும் நோக்குடன் 1993ஆம் ஆண்டில் கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கையே இது.

15 ஐரோப்பிய நாடுகள் இணைந்து எதிர்காலத்தில் மேற்கொள்ள உள்ள கட்டற்ற பொருளாதாரச் சந்தைக்குப் போட்டியாகவே இவ் அமைப்பு தோற்றுவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

**14)** **இன்ரர் போல்** (Interpol)

இன்ரர் போல்(International Police Commission) என்பது பன்னாட்டு பொலிஸ் கமிஷன் ஆகும். 1923இல் இவ் அமைப்பு உருவாக்கப்பட்டது.

பன்னாட்டு பொலிஸ் துறைக்கிடையே ஒற்றுமையை ஏற்படுத்துவதே இதன் பிரதான நோக்கமாகும். தலைமையகம் - பிரான்ஸ், பரீஸ்.

**15)** **லயன்ஸ் கழகம்** (Lions Club)

1919ஆம் ஆண்டு மெல்வின் ஜோன்ஸ் எனும் அமெரிக்கரால் ஒரு சிறிய குழுவுடன் ஆரம்பிக்கப்பட்டது தான் லயன்ஸ் கழகம். இலங்கை உட்பட உலகின் பல்வேறு நாடுகளில் இது சமூகசேவைப் பணிகளையாற்றி வருகின்றது.

இன்றைய உலகில் மிகப்பெரிய சமூகசேவை நிறுவனமாக இது உள்ளது குறிப்பிடத்தக்கது.

**16)** **ஐக்கிய நாடுகள் சபை** (United Nations Organization - UNO)

உலக நாடுகள் அனைத்தினதும் பொதுமன்றமாக இயங்கும் ஒரு அமைப்பே ஐக்கிய நாடுகள் சபை.

இரண்டாம் உலகப்போர் நடைபெற்ற சமயம் உலகப்போர் ஒன்று மீள ஆரம்பிக்கப்படாமல் இருப்பதற்காகப் பொது அமைப்பு ஒன்று தோற்றுவிக் கப்பட வேண்டுமென்ற கருத்து உலகத் தலைவர்கள் மத்தியில் தோன்றியது.

அதன் செயல்வடிவமாகவே ஐக்கிய நாடுகள் சபை தோற்றுவிக்கப் பட்டது. இதற்கு முன்னோடியாக 1945 ஏப்ரல் 25ஆம் திகதி ஐக்கிய நாடுகள் சாசனம் தோன்றியது.

1945. 06. 26இல் அமெரிக்காவின் சான்பிரான்ஸ்சிஸ்கோ நகரில் வைத்து உலகத் தலைவர்களால் ஐக்கிய நாடுகள் சாசனம் ஏற்றுக்கொள்ளப்பட்டது. இதில் 50 நாடுகள் பங்கேற்றன.

1945 ஒக்ரோபர் 24இல் நியூயோர்க் நகரில் வைத்து உலகின் முன்னணி சக்திமிக்க நாடுகளின் தலைவர்கள் பலரால் ஐக்கிய நாடுகள் சபை கோலாகல மாக அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

ஐக்கிய நாடுகள் என்ற தொடரை முதன்முதலில் F. W. D. ரூஸ்வெல்ட் (அமெரிக்க ஜனாதிபதி) தான் உபயோகித்தார். வருடாந்தம் ஒக்ரோபர் மாதம் 24ஆம் திகதி ஐக்கிய நாடுகள் சபை தினமாக உலகெங்கும் கொண்டாடப்படு கின்றது.

1946இல் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் சபையின் முதலாவது பொதுக் கூட்டத்தில் 51 நாடுகள் மட்டுமே பங்கேற்றன.

ஐ. நா. வின் வருடாந்த அமர்வுகள் செப்ரெம்பர் - டிசம்பர் காலப்பகுதியில் நடைபெறுகின்றது.

தலைமைக் காரியாலயம் நியூயோர்க் நகரில் அமைந்துள்ளது. இக்கட்டடத்திற்காக "டிராக் பெல்லர் பிரவு" நிலம் வழங்கி இருந்தார்.

ஐ. நா. தலைமைக் காரியாலயக் கட்டடத்திற்கான அடிக்கல் 1949 ஒக்ரோபர் 24இல் நாட்டப்பட்டது. 1951ஆம் ஆண்டு கட்டிமுடிக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டது.

உலக சமாதானத்தைக் குறிக்கும் "ஒலிவ்" மரக்கிளை ஐ. நா. சபையின் சின்னத்தில் இடம்பெற்றுள்ளது.

ஐ. நா. சபை பின்வரும் ஆறு பிரதான அமைப்புக்களைக் கொண்டு இயங்கி வருகின்றது.

(i) பொதுச் சபை

(ii) பாதுகாப்புச் சபை

(iii) பொருளாதார சபை

(iv) சர்வதேச நீதிமன்றம்

(v) செயலாளர் நாயகத்தின் பணிமனை

(vi) தர்மகர்த்தா சபை

தற்போது 192 நாடுகள் அங்கம் வகிக்கும் ஐ. நா. சபையில் இறுதியாகச் சேர்ந்த நாடு - கிழக்கு திமோர்

i) **பொதுச் சபை**

அங்கத்துவ நாடுகள் 192உம் இதில் அங்கம் வகிக்கின்றன. இச்சபை தான் ஐ. நா. சபையின் விவாத மேடையாகத் திகழ்கின்றது. புதிய நாடு ஒன்றினைச் சேர்ப்பதாயின் பொதுச் சபையில் 2/3 பங்கு நாடுகளின் ஆதரவு அவசியம் தேவை.

பொதுச் சபையின் முதலாவது அமர்வு 1946 ஜூன் 10இல் நடைபெற்றது. அமர்வுகளின் போது 21 துணைத் தலைவர்கள் தெரிவு செய்யப்படு கின்றனர்.

சித்திரவதைக்கு எதிரான தடைச் சட்டத்தை பொதுச் சபை 1984 டிசெம்பர் 10இல் வெளியிட்டது.

ஐ. நா. பொதுச் சபை தனது அவசரக் கூட்டத்தை முதன்முதலாக 1959இல் சுயெஸ் கால்வாய் பிரச்சனைக்காகக் கூட்டியது.

ii) **பாதுகாப்புச் சபை**

ஐ. நா. சபையில் மிகச்சக்தி வாய்ந்த அமைப்பு இதுவாகும். உலக சமாதானத் தையும், உலகளாவிய பாதுகாப்பையும் பேணுவது பாதுகாப்புச் சபையின் பொறுப்பாகும்.

ஆரம்பத்தில் பாதுகாப்புச் சபையில் 11 நாடுகளே உறுப்புரிமை பெற்றிருந்தன. 1965ஆம் ஆண்டில் இவ் எண்ணிக்கை 15ஆக உயர்த்தப் பட்டு இன்று வரையும் அவ்வாறே இருந்து வருகின்றது. இதில் 5 நாடுகள் நிரந்தர அங்கத்துவ நாடுகளாகவும், 10 நாடுகள் தற்காலிக அங்கத்துவ நாடுகளாகவும் உள்ளன.

பாதுகாப்புச் சபையில் ஐக்கிய அமெரிக்கா, சீனா, பிரான்ஸ், பிரித்தானியா, ரஷ்யா ஆகிய 5 நாடுகளுமே நிரந்தர அங்கத்துவ நாடுகளாக உள்ளன.

இந்த நாடுகளுக்குப் பாதுகாப்புச் சபையில் எடுக்கப்படும் தீர்மானம் தொடர்பில் வீட்டோ(VETO) எனப்படும் ''வெட்டுவாக்கு'' அதிகாரம் உள்ளது.

நிரந்தர அங்கத்துவ நாடொன்று தீர்மானமொன்றின் மீது வெட்டு வாக்கைப் பிரயோகிக்குமாயின் அத்தீர்மானம் செல்லுபடியற்றதாகிவிடும். அதாவது 14 நாடுகள் ஒரு தீர்மானத்திற்கு ஆதரவாகவும் ஒரு நிரந்தர அங்கத்துவ நாடு தீர்மானத்துக்கு எதிராகவும் வாக்களிக்குமானால் அத்தீர்மானம் செல்லுபடியற்றதாகிவிடும்.

இப் பாரம்பரியம் பல சந்தர்ப்பங்களிலும் வளர்முக நாடுகளால் பெரிதும் விமர்சிக்கப்பட்டு வருவதுடன் பாதுகாப்புச் சபையில் தமக்கு நிரந்தர அங்கத்துவம் வழங்கக் கோரியும் வருகின்றன.

பாதுகாப்புச் சபையின் தற்காலிக அங்கத்துவ நாடுகள் 10உம் பொதுச் சபையின் 2/3 பெரும்பான்மையுடன் 02 ஆண்டுகளுக்கு மட்டுமே தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

iii) **பொருளாதார சமூக சபை**

பொருளாதார, சமூக, பண்பாட்டு, மனிதாபிமான பிரச்சனைகள் குறித்து ஆராய்ந்து பொதுச் சபைக்கு தகவல் தரும் அமைப்பு இது. பொதுச் சபையின் 2/3 பங்கு உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்படும் 54 உறுப்பினர்களைக் கொண்டு இயங்குகின்றது.

iv) **சர்வதேச நீதிமன்றம்**

சர்வதேச சட்டப்பிரச்சனைகளைத் தீர்த்து வைப்பதற்கு ஏற்பட்ட இவ் அமைப்பின் விதிமுறைகளுக்கு ஐ. நா. உறுப்பினர் நாடுகள் கட்டுப் பட்டவையாக உள்ளன. 15 நீதிபதிகளைக் கொண்டுள்ள சர்வதேச நீதி மன்றுக்கான நீதிபதிகள் பொதுச் சபையாலும், பாதுகாப்புச் சபையாலும் தேர்ந்தெடுக்கப்படுவது வழக்கம்.

சர்வதேச நீதிமன்றம் நெதர்லாந்து நாட்டின் ''த ஹேக்'' நகரத்தில் இயங்கி வருகின்றது.

v) **செயலாளர் நாயகத்தின் பணிமனை**

ஐ. நா. பணிமனையின் தலைமைப் பொறுப்பைச் செயலாளர் நாயகமே வகிக்கின்றார். இவரது பதவிக் காலம் 5 வருடங்கள்.

சென்ற 1996 டிசெம்பரில் கானா நாட்டின் இராஜதந்திரியும் பழுத்த ஐ. நா. அதிகாரியுமான ''கொபி அன்னான்'' அவர்கள் செயலாளர் நாயகமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இவர் 07ஆவது செயலாளர் நாயகம். எமது ஆசியாவில் ''மியன்மார்''(பர்மா) நாட்டைச் சேர்ந்த ''ஊதாண்ட்'' ஒருவரே இப்பதவியை வகித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

vi) **தர்மகர்த்தா சபை**

குடியேற்ற ஆட்சியிலிருந்து நாடுகளைச் சுதந்திரத்திற்கும் சுயாட்சிக்கும் தயார் செய்வதில் இச்சபை ஈடுபடுகின்றது.

## ஐ. நா. வின் துணை நிறுவனங்கள்

i) **சர்வதேச தொழிலாளர் நிறுவனம்** - ILO

இந்நிறுவனம் 1919இல் அமைக்கப்பட்டது. பின்னர் ஐ. நா. வினுள் சேர்த்துக் கொள்ளப்பட்டது. தலைமையகம் - ஜெனீவா (சுவிற்சலாந்து)

ii) **சர்வதேச அணுசக்தி முகவரகம்** - IAEA

அமைதிப்பணிக்கு அணுசக்தியைப் பயன்படுத்துவதை ஊக்குவிப்பதில் இந்நிறுவனம் ஈடுபடுகின்றது. 1957இல் அமைக்கப்பட்ட இந்நிறுவனம் உலக சமூகத்தின் ஆக்கப்பணிக்கு மட்டுமே அணுசக்தி பயன்படுத்தப்பட அனுமதிக்க வேண்டுமென குரல் கொடுத்து வருகின்றது.

சர்வதேச அணுசக்தி முகவரகத்தின் தலைமையகம் ஒஸ்ரியாவின் தலைநகர் வியன்னாவில் அமைந்துள்ளது.

iii) **உணவு விவசாய நிறுவனம்** - FAO

உலகளாவிய ரீதியில் உணவு முகாமைத்துவ நடவடிக்கைகளை இந்நிறுவனம் மேற்கொள்கின்றது. உலக உணவு நெருக்கடி குறித்து காலத்திற்குக் காலம் பல சர்வதேச கருத்தரங்குகளை நடத்தி வருகின்றது.

1945ஆம் ஆண்டு நிறுவப்பட்ட உணவு விவசாய நிறுவனத்தின் தலைமையகம் ரோம் நகரில் அமைந்துள்ளது.

iv) **ஐ. நா. கல்வி விஞ்ஞான பண்பாட்டு நிறுவனம்** - UNESCO **(யுனெஸ்கோ)**

1946ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட இந்த நிறுவனம் கல்வி, விஞ்ஞான, பண்பாட்டு நடவடிக்கைகளுக்கு உலகளாவிய ரீதியில் பங்களிப்புச் செய்து வருகின்றது.

யுனெஸ்கோ கூரியர் எனும் இதழை பல மொழிகளில் வெளியிட்டு வருகின்றது. தலைமையகம் - பரிஸ் (பிரான்ஸ்)

v) **உலக சுகாதார நிறுவனம்** - WHO

1948இல் நிறுவப்பட்டது. ஐ. நா. வினால் மேற்கொள்ளப்படும் உலகளாவிய சுகாதார நல மேம்பாட்டு நடவடிக்கைகளுக்குப் பொறுப்பாக இருக்கிறது.

தலைமையகம் - ஜெனீவா (சுவிற்சலாந்து)

vi) **அபிவிருத்திக்கும் புனரமைப்புக்குமான சர்வதேச வங்கி அல்லது உலக வங்கி** - IBRD

1945ஆம் ஆண்டில் நிறுவப்பட்டு 1946ஆம் ஆண்டு முதல் உலகவங்கி செயற்பட்டு வருகின்றது.

சர்வதேச ரீதியாக நாடுகளின் பொருளாதார நடவடிக்கைகளுக்கு ஆலோசனை வழங்குவதில் இவ்வங்கி முதன்மை வகிக்கின்றது. தலைமையகம் - வாஷிங்டன்(அமெரிக்கா)

vii) **சர்வதேச நாணய நிதியம்** - IMF

1947இல் நிறுவப்பட்டது. தலைமையகம் - வாஷிங்டன் (அமெரிக்கா). உலக வங்கியும் சர்வதேச நாணய நிதியமும் ''பிறிட்டன் வூட்ஸ்'' உடன்படிக் கையின் மூலம் ஏற்படுத்தப்பட்டன. அதனால் இவ் இரண்டு நிறுவனங் களையும் 'பிறிட்டன் வூட்ஸ் இரட்டையர்கள்' எனச் சிறப்புப் பெயர் கொண்டு அழைக்கின்றனர்.

viii) **உலக வானிலை அமைப்பு** - WMO

சர்வதேச ரீதியான காலநிலை, பருவகால அவதானிப்பு தொடர்பான நடவடிக்கைகளை இந்நிறுவனம் மேற்கொண்டு வருகின்றது.

1950ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட உலக வானிலை அமைப்பின் தலைமையகம் சுவிற்சலாந்து நாட்டின் ஜெனீவா நகரில் அமையப் பெற்றுள்ளது.

ix) **அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர் ஸ்தானிகராலயம்** UNHCR

1959ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட இந் நிறுவனம் சுவிற்சலாந்து நாட்டின் ஜெனீவா நகரில் தலைமையகத்தைக் கொண்டுள்ளது. உலகளாவிய ரீதியில் மனிதாபிமானப் பணிகளை மேற்கொண்டு வருகின்றது. இயற்கை, செயற்கை அனர்த்தங்கள், உள்நாட்டுப் போர் ஆகியவற்றினால் ஏற்படும் இடர்களுக்கு உதவியளித்து வருகின்றது.

அகதிகள் நிவாரணத்திற்கு சிறந்த பணியாற்றியதற்காக UNHCR க்கு 1981இல் உலக சமாதானத்திற்கான நோபல் விருது வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

x) **உலக வர்த்தக நிலையம்** WTO

கற்(Gatt) எனப்பட்ட வியாபாரம் வரி தொடர்பிலான பொது உடன்படிக்கை எனும் அமைப்பு 01. 01. 95 முதல் உலக வர்த்தக நிலையம் எனப் பெயர் மாற்றம் பெற்றுள்ளது. தலைமையகம் - ஜெனீவா (சுவிற்சலாந்து)

xi) **ஐ. நா. குழந்தைகள் நிதியம்** - UNICEF **(யுனிசெப்)**

1946இல் நிறுவப்பட்டது. குழந்தைகள் நலன்களைச் சர்வதேச ரீதியாகக் கவனித்து வரும் அமைப்பு இது. தலைமையகம் - நியூயோர்க் (அமெரிக்கா)

* * *

> வேகம் இல்லாத விவேகம் வெறும் கனவு
>
> விவேகம் இல்லாத வேகம் வேருடன் அழிவு
>
> விவேகத்துடன் இணைந்த வேகம் வெற்றிவாயிலின் நுழைவு

## உலக விருதுகள்

### 1) நோபல் விருது

சுவீடன் தேசத்து விஞ்ஞானியான ''அல்பிரட் நோபல்'' டைனமற் எனும் சேர்வையைக் கண்டு பிடித்து பெருஞ்செல்வம் சேர்த்தார். தனது சொத்துக்களின் கணிசமான ஒரு பங்கை வங்கி யில் வைப்பிலிட்டு அதன் மூலம் பெறப்படும் வட்டித் தொகையிலிருந்து ஆண்டு தோறும் உலக சமாதானம், மருத்துவம் அல்லது உடற் கூற்றியல், இலக்கியம், இரசாயனவியல் அல்லது வேதியியல், பௌதிகவியல் அல்லது இயற் பியல் ஆகிய துறைகளில் சிறந்து விளங்கு வோருக்கு விருது வழங்கப்பட வேண்டுமென உயில் எழுதி வைத்துவிட்டு 1896இல் கால மானார்.

1901ஆம் ஆண்டிலிருந்து ''ரோயல் சுவீடிஷ் அக்கடமி'' எனும் நிறுவனம் மேற்குறித்த துறை களில் சிறந்து விளங்குவோருக்கு பரிசு வழங்கி வருகின்றது.

1969ஆம் ஆண்டிலிருந்து சுவீடன் நாட்டு ''ரிக்ஸ்'' வங்கியின் அன்பளிப்புத் தொகையைக் கொண்டு பொருளாதாரத் துறையில் சிறந்து விளங்குவோருக்கும் நோபல் பரிசு வழங்கப் பட்டு வருகின்றது.

ஒவ்வொரு வருடமும் ஒக்ரோபர் மாத நடுப்பகுதியில் ஒவ்வொரு துறைகளிலும் பரிசுக்கென தேர்ந்தெடுக்கப்பட்டவர்களது பெயர் விபரங்களை பரிசுக்குழு அறிவிக்கும்.

பரிசு அல்பிரட் நோபல் மறைந்த தினமாகிய டிசெம்பர் 10ஆம் திகதி யன்று சுவீடனில் வழங்கப்படுகின்றது.

இலக்கியத்திற்கான நோபல் பரிசு பின்வரும் 07 ஆண்டுகளில் வழங்கப் படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. 1914, 1918, 1935, 1940, 1941, 1942, 1943.

நோபல் பரிசைப் பெற்ற முதல் தமிழர் ''சேர் C. V. இராமன்'' நோபல் பரிசை ஆசியாவில் முதன்முதலாகப் பெற்றவர் - கவிஞர் ரவீந்திரநாத் தாகூர். இவர் தமது கீதாஞ்சலி எனும் கவிதை நூலுக்காக 1913இல் இலக்கியத்திற் கான நோபல் பரிசைப் பெற்றார். மிகக் குறைந்த வயதில் நோபல் விருது வென்றவர் லோரன்ஸ் பிராக்.

உலக அமைதிக்கான நோபல் விருதை அதிக தடவைகள் பெற்றுள்ள நாடு - ஐக்கிய அமெரிக்கா.

நோபல் விருதை முதல் வென்ற பெண் - மேரி கியூரி அம்மையார். இவர் 1903இல் பௌதிகத்திற்காகப் பரிசு பெற்றார்.

லின்ஸ் பௌலிஸ் என்பவர் 1954இல் இரசாயனவியலுக்கான நோபல் பரிசையும் 1962இல் உலக சமாதானத்திற்கான நோபல் பரிசையும் பெற்றுக்கொண்டார்.

1964ஆம் ஆண்டு இலக்கியத்திற்கான நோபல் பரிசை ''ஜீன் பால் சார்ட்ரே'' வாங்க மறுத்துவிட்டார்.

## 2) ரமன் மச்சே சே விருது

விமான விபத்து ஒன்றில் கொல்லப்பட்ட பிலிப்பைன்ஸ் அதிபர் ரமன் மச்சே சே அவர்களின் நினைவாக இவ்விருது 1957ஆம் ஆண்டு முதல் வழங்கப் பட்டு வருகின்றது. சிறந்த அரசாங்கப் பணி, சமூக சேவை என 4 துறைகளில் சிறந்து விளங்குவோர் வருடாந்தம் இவ்விருதைப் பெறுவார்கள்.

இவ்விருதும் உலகில் குறிப்பிடத்தக்க மதிப்புமிக்க விருதாகக் கருதப் படுகின்றது.

## 3) புலிட்ஸர் விருது

ஐக்கிய அமெரிக்காவினால் ஆண்டு தோறும் பத்திரிகைத் தொழில், நாடகம், இலக்கியம் ஆகிய துறைகளில் உலகளாவிய ரீதியில் சிறந்து விளங்குபவர் களுக்கு ஆண்டுதோறும் இவ்விருது வழங்கப்படுகின்றது.

New York World எனும் பத்திரிகையின் ஆசிரியராகவிருந்து உன்னதமான பத்திரிகைப் பணியாற்றிய ஜோசப் புலிட்ஸர் என்பவரின் நினைவாகவே இப்பரிசு வழங்கப்பட்டு வருகின்றது.

### 4) பால்கன் விருது

1956இல் இத்தாலியப் பெண் தொழிலதிபர் ஒருவரால் இவ்விருது ஆரம்பிக் கப்பட்டது. சுவிற்சலாந்து நாட்டின் உயரிய விருது இது.

### 5) காந்தி சமாதான விருது

மகாத்மா காந்தியின் நினைவாக இந்திய அரசினால் 1995ஆம் ஆண்டு முதல் இவ்விருது வழங்கப்பட்டு வருகிறது. 1கோடி ரூபா பணம், பாராட்டுப் பத்திரம், கேடயம் என்பன விருதாக வழங்கப்படுகின்றன. இலங்கையின் சர்வோதய இயக்கத் தலைவர் கலாநிதி ஆரியரத்ன அவர்களும் இவ்விருதை 1996ஆம் ஆண்டிற்குப் பெற்றுள்ளார்.

### 6) புக்கர் விருது

உலகின் சிறந்த இலக்கிய நூலுக்கான இவ்விருது 1968ஆம் ஆண்டு முதல் வழங்கப்பட்டு வருகின்றது. இலக்கியத்திற்காக வழங்கப்படும் நோபல் பரிசுக்கு அடுத்தபடியாக உலகில் மிகவும் மதிப்புமிக்க விருதாக இதுவே கருதப்படுகின்றது. இங்கிலாந்தினால் வழங்கப்படுகின்றது.

* * *

***Answer should be in the finger tip.***

## விண்வெளி அறிவியல்

- ஐக்கிய நாடுகள் சபை 1992ஆம் ஆண்டைச் சர்வதேச விண்வெளி ஆண்டெனப் பிரகடனம் செய்திருந்தது.
- ஐக்கிய அமெரிக்காவின் விண்வெளி ஆய்வு நிகழ்ச்சித் திட்டத்திற்குப் பொறுப்பாக உள்ள நிறுவனம் - நாஸா (NASA). NASA - National Aeronautics and Space Administration
- யூரி ககாரின் என்ற ரஷ்யர் 1961 ஏப்ரல் 12இல் 4.65 தொன் எடையுள்ள ''வொஸ்டொக்'' என்ற விண்கலத்தில் 89.34 நிமிடங்களில் பூமியை ஒரு முறை சுற்றிவிட்டுத் திரும்பினார். இவரே விண்வெளிக்கு முதன் முதலாகச் சென்ற மனிதன் என்ற பெருமையைப் பெறுகின்றார்.
- விண்வெளிக்குச் சென்ற முதல் வீராங்கனை என்ற பெருமையை ''வலென்ரீனா ரெரஸ்கோவ்'' எனும் ரஷ்யப் பெண் பெறுகின்றார். இவர் 1963 யூன் 16இல் ''வொஸ்டொக் - 6'' விண்கலத்தில் 02 நாட்கள் 22 மணி 42 நிமிடங்கள் 48 முறை பூமியைச் சுற்றினார்.
- 1969 யூலை 20இல் அமெரிக்காவினால் அனுப்பி வைக்கப்பட்ட அப்பலோ - 2 எனும்

விண்வெளி ஓடத்தில் ''நீல் ஆம்ஸ்ரோங், எட்வின் அல்ட்றின், மைக்கல் கொலின்ஸ்'' ஆகியோர் பயணம் செய்து சந்திரனை அடைந்தனர்.

நீல் ஆம்ஸ்ரோங் அப்பலோ விண்கலத்திலிருந்து இறங்கிச் சந்திரத் தரையில் கால் வைத்தார். இதன் மூலம் **சந்திரனில் காலடி வைத்த முதலாவது மனிதன்** என்ற பெருமையைப் பெறுகின்றார். அவர் சந்திரனில் காலடி வைத்தபோது ''மனிதனுக்கு இது சிறு அடிதான். ஆனால் மனித குலத்திற்கு மாபெரும் பாய்ச்சல்'' என இந்நிகழ்வை வர்ணித்தார்.

- விண்வெளியில் நடந்த முதல் வீரர் - அலெக்ஸ் A. லியனேவ் ரஷ்யாவைச் சேர்ந்த இவர் 1965 மார்ச் 18 அன்று தமது வொஸ்டொக் - 2 விண்கலத்தில் இருந்து இறங்கி வெளியே நடந்தார்.
- விண்வெளியில் பயணித்த முதல் தம்பதியினர் என்ற பெருமையை அமெரிக்காவைச் சேர்ந்த மாக்லி, ஜேன் டேவிஸ் ஆகியோர் பெறுகின் றனர். 1992 செப்ரெம்பரில் இவர்கள் விண்வெளிக்குப் பயணித்தனர்.
- உலகின் முதலாவது விண் ஓடமான (Space Shuttle) கொலம்பியா (Columbia) அமெரிக்காவால் 1981 ஏப்ரல் 12ஆம் திகதி விண்ணுக்கு வெற்றிகரமாக ஏவப்பட்டது.
- Challenger Shuttle இல் அமெரிக்காவின் முதல் வீராங்கனையான Dr. சாலிரைட் 1983 யூன் 18இல் பயணமானார்.
- 1983 ஒகஸ்ட் 30இல் ''சலஞ்சர்'' (Challenger) இல் அமெரிக்காவின் நீக்ரோ வீரர் ''குயான் எஸ் பூறூ போர்ட்'' பயணமானார்.
- பூமியிலிருந்து இயக்கப்பட்டு சந்திரனில் இறங்கிய முதல் ஆளற்ற விண்வெளி ஓடம் ''லூனா கோடி''. இது 1970 நவம்பர் 17இல் பூமியிலிருந்து சென்றது.
- விண்வெளியைச் சுற்றி வந்த முதல் செயற்கைக் கோள் ரஷ்யாவின் ''ஸ்புட்னிக்''. இது 1957 ஒக்ரோபர் 04இல் ஏவப்பட்டது. எடை 88.6 கிலோகிராம்.
- ''ஹேலீஸ்'' எனும் வால்வெள்ளி 76 ஆண்டுகளுக்கு ஒரு முறையே பூமிக்கு அண்மையாக வானில் தோன்றுகின்றது. இறுதியாக 1986ஆம் ஆண்டு ஹேலீஸ் வால்வெள்ளி தோன்றியது.
- ''ஹெப்பொப்'' எனும் வால் நட்சத்திரம் 1997 மார்ச் மாத நடுப்பகுதியில் இலங்கையின் வானில் தென்பட்டது. இவ்வால் நட்சத்திரம் 4200 வருடங்களுக்கு ஒரு முறைதான் பூமிக்கருகில் தோன்றுகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

- அமெரிக்காவின் Challenger Shuttle எனும் விண்கலம் புறப்பட்ட சில நொடிகளிலேயே வெடித்துச் சிதறியது. இது 1986இல் நடைபெற்றது. இதில் "கிறிஸ்டாக் ஆலிஃப்" என்ற பள்ளி ஆசிரியையான வீராங்கனை உட்பட ஏழு வீரர்கள் மாண்டனர்.

- 1989 மே மாதத்தில் வீனஸ் (Venus) கோளை ஆராய "மெகலன்" என்னும் விண்ணூர்தியை அமெரிக்காவின் Discovery Shuttle செலுத்தியது.

- 1990 ஒக்ரோபர் 09இல் சூரியனை ஆராய "யூலீசஸ்" என்ற விண்கலத்தை Discovery Shuttle மூலம் அமெரிக்கா செலுத்தியது.

- 1986 பெப்ரவரி 20இல் உலகின் 03ஆவது தலைமுறை விண்ணாய்வு கூடமான "மிர்" (Mir) ரஷ்யாவால் செலுத்தப்பட்டது. Mir என்பது ரஷ்ய மொழியில் "சமாதானம்" என்ற கருத்தைத் தருகிறது.

- விண்வெளிப் பயண விதிகளை வரையறுத்த முதல் அறிஞர் சேர். ஐசாக் நியூட்டன் (1642 - 1727). இவரது இயற்கைத் தத்துவத்தின் கணிதக் கோட்பாடுகள் (Mathematical Principles of Natural Philisophy) என்பதே இதனை வரையறுத்தது.

- 11 ஐரோப்பிய நாடுகள் அங்கம் வகிக்கும் ESA (European Space Agency) தனது ஏரியன் (Ariane) ரொக்கெற் மூலம் 1989 ஓகஸ்ட் (33ஆவது பயணத்தில்) "ஹிப்பார்கஸ்" (Hipparcas) என்ற தொலைக்காட்சியை விண்ணுக்குச் செலுத்தியது.

  - ESAஇல் Rocket Launching Pad பிரெஞ்சு கயானாவில் உள்ள "கூரு" (Koru)இல் உள்ளது.

- பூமிக்கு அண்மையில் உள்ள கோள் - புதன்

  மிகக் குளிர்ச்சியான கோள் - புளுட்டோ

  மிக லேசான கோள் - புதன்

  மிகக் கனமான கோள் - வியாழன்

  மிக உஷ்ணமான கோள் - வெள்ளி அல்லது சுக்கிரன்

  சிவப்புக் கோள் எனப்படுவது - செவ்வாய்

- 1996ஆம் ஆண்டின் முற்பகுதியில் பூமிக்கு அண்மையில் தோன்றிய வால் நட்சத்திரத்தின் பெயர் - கியாகுடாவே. இதனைக் கண்டறிந்த ஜப்பானியரின் பெயரே இதற்கு இடப்பட்டது.

- 1957இல் விண்வெளிக்குச் சென்ற ''லைகா'' எனும் நாய் விண் வெளிக்குச் சென்ற முதலாவது உயிரினம் என்ற பெருமையைப் பெறுகின்றது.

- ஞாயிற்றுத் தொகுதியில் மிகப் பெரிய கோளான வியாழன் கிரகத்துடன் 1994 ஏப்ரலில் ''சூ மேக்கர் லெவி - 9'' எனும் வால்வெள்ளி 21 துண்டங் களாக உடைந்து மோதியது. இருபதாம் நூற்றாண்டின் மிகப் பெரிய வால்வெள்ளி மோதலாக இது கூறப்படுகின்றது.
  - இவ்வால் வெள்ளியை சூ மேக்கர் தம்பதியினரும், அவர்களது உதவியாளரான லெவி என்பவரும் கண்டறிந்ததனால் அவர்களது பெயரே இதற்கு இடப்பட்டது.

- அமெரிக்க சுதந்திர தினமான 04. 07. 1997இல் செவ்வாய் கிரகத்தில் அமெரிக்காவின் விண்கலமான பாத் பைன்டர் (Path finder) வெற்றிகர மாகத் தரையிறங்கியது.
  - இவ் விண்கலத்திலிருந்து 06 சக்கர தன்னியக்க இயந்திர வண்டி யான ''சோ ஜோனர் றோவர்'' செவ்வாய் தரையை தீவிரமாக ஆராய்ந்தது.
  - இவ் விண்கலம் செவ்வாய் தரையில் இறங்கிய நிகழ்வு உலக விண்வெளி அறிவியல் வரலாற்றில் குறிப்பிடத்தக்க ஒன்றாகக் கூறப்படுகின்றது.

- விண்வெளிக்குச் சென்ற முதல் பத்திரிகையாளர் - டொகியோ ஹிரா (ஜப்பான்). 1990இல் விண்வெளி பயணமானார்.

- விண்வெளியில் முதல்முதல் உயிர் நீத்த வீரர் - விளாடி மிர் கமெசோடா (சோவியத் ரஷ்யர்)

* * *

| |
|---|
| தோல்வியைக் கண்டு அஞ்சுபவனிடமிருந்து வெற்றி விலகுகின்றது. |

## மருத்துவம்

- மருத்துவத்தின் தந்தை - ஹிப்போ கிறடீஸ்
- மனித உடலின் சாதாரண வெப்பநிலை பரனைற் 98.4 °F செல்சியஸ் 36.8 °C
- குருதியின் வகைகள் - A, B, AB, O
- பொது வழங்கி குருதியின் வகை - AB
- அறுவைச் சிகிச்சையின் போது உடல் விறைப்பதற்குப் பயன்படுத்தப்படுவது - ஈதர்.
- காச நோய்க்குரிய (TB) தடுப்பு மருந்து - BCG
- எலி கடிப்பதால் உண்டாகும் நோய் - பிளேக்
- மனித உடலில்

  மிக நீண்ட எலும்பு - தொடை எலும்பு

  உயிரற்ற கலங்களால் ஆக்கப்பட்ட பகுதி - நகம், மயிர்

  மிகவும் வன்மையான பகுதி - பல் மிளிரி

  மிகப் பெரிய உறுப்பு - கல்லீரல்
- மனித உமிழ்நீரிலுள்ள நொதியங்கள் - தயலின், அமிலேசு
- விற்றமின் (Vitamin) எனும் பெயரை அறிமுகம் செய்தவர் - பங் விற்றமின்

- விற்றமின் A குறைவால் ஏற்படும் நோய் - மாலைக் கண்
- விற்றமின் B குறைவால் ஏற்படும் நோய் - பெரிபெரி
- விற்றமின் C குறைவால் ஏற்படும் நோய் - ஸ்கேபி
- விற்றமின் D குறைவால் ஏற்படும் நோய் - என்புருக்கி

- பித்தத்தைச் சுரக்கும் உறுப்பு - ஈரல்

  பித்தக்கான் தடைப்படுவதால் உண்டாகும் நோய் - செங்கண்மாரி

  இரும்புச் சத்துக் குறைவால் உண்டாகும் நோய் - குருதிச் சோகை

- பென்சிலின் எனும் மருந்து தயாரிக்கப்படும் தாவரம் - பென்சிலியம் எனப்படும் பங்கசுத் தாவரம்

  - பென்சிலின் கண்டு பிடித்தவர் - அலெக்ஸாண்டர் பிளேமிங். இக் கண்டுபிடிப்பு 1928இல் நடைபெற்றது.

- மனித உடலில் உள்ள நோயெதிர்ப்புச் சக்தியை அழிக்கும் தன்மை கொண்ட நோய் எயிட்ஸ் (AIDS) என அழைக்கப்படுகின்றது.

  - HIV எனும் வைரஸ் தொற்றினால்தான் எயிட்ஸ் நோய் மனிதர்களுக்கு ஏற்படுகின்றது. இந்நோய் ஒரு தொற்று நோயல்ல. நோயால் பீடிக்கப்பட்ட ஒருவருடன் ஏனையோர் எதுவித பயமும் இன்றி சகஜமாகப் பழகிக் கொள்ளலாம்.

  - நிணநீர்த் தொற்றுதல், இரத்தம் மூலம் தொற்றுவதாலேயே எயிட்ஸ் ஏனையோருக்குத் தொற்றிக் கொள்கிறது.

  - இருபதாம் நூற்றாண்டில் மருத்துவ உலகிற்கு மாபெரும் சவால் விடுவதாக எயிட்ஸ் விளங்குகின்றது. காரணம் இந்நோய்த் தடுப்பிற் கென இன்று வரையும் மருந்து கண்டுபிடிக்கப்படாதமையாகும்.

  - உலகின் முதலாவது எயிட்ஸ் நோயாளி 1981ஆம் ஆண்டு பிரான்ஸ் நாட்டின் லூயி பாஸ்ரர் விஞ்ஞான ஆய்வு கூடத்தினால் கண்டறியப் பட்டார்.

  - ஆனால் அதற்கு முன்பே பல காலமாக எயிட்ஸ் நோய் இனங்காணப் படாத ஓர் ஆட்கொல்லி நோயாக மட்டுமே அறியப்பட்டது. எயிட்ஸ் எனும் பெயரினையும், நோயை உண்டாக்கும் கிருமி HIV வைரஸ் எனவும் பெயரிட்டது அமெரிக்காவின் தேசிய புற்றுநோய் ஆய்வு நிலையமாகும்.

  - இந் நிகழ்வு 1984இல் நடைபெற்றது.

    AIDS - Acquired Immune Deficiency Syndrome

    HIV - Human Immune Deficiency Virus

- உலகின் முதலாவது சோதனைக் குழாய்க் குழந்தை (Test tube baby) 1978ஆம் ஆண்டில் இங்கிலாந்தில் பிறந்தது. இவ்வாறு பிறந்த பெண் குழந்தையின் பெயர் - லூயி பிரவுண். இப் பரிசோதனைக் குழாய்க் குழந்தையை உருவாக்கும் முயற்சியில் வெற்றி கண்ட இரு மருத்துவர் கள் - Dr. ஸ்ரெப்ரோ, Dr. எட்வெட்ஸ்.

- வெண்குழியங்களின் எண்ணிக்கை மனித இரத்தத்தில் அசாதாரணமாகப் பெருகுவதால் உண்டாகும் நோய் - இரத்தப் புற்றுநோய். இது இலுக்கேமியா எனவும் அழைக்கப்படுகின்றது.

- மலேரியா எனும் நோயை மனிதர்களுக்கு ஏற்படுத்தக் காரணமாக அமையும் பெண் நுளம்பு - அனோபிலிஸ்
  - பிளாஸ்மோடியம் எனும் ஒட்டுயிரி மூலமாகவே அனோபிலிஸ் நுளம்பு மலேரியாவை ஏற்படுத்துகின்றது.

- இங்கிலாந்தின் மருத்துவரான Dr. றிச்சாட் பெட்ரோ 1993ஆம் ஆண்டின் இறுதியில் வியக்கத்தக்க மருத்துவ ஆய்வு முடிவொன்றை வெளியிட் டார். ஒருவர் அஸ்பிரின் மாத்திரையைத் தினசரி 75 மில்லிகிராம் வீதம் உட்கொண்டு வந்தால் மாரடைப்பு, இரத்த அழுத்தம் ஆகிய நோய்கள் வராமல் தடுக்கலாம் என்பதே இவ் ஆய்வு முடிவு.

- உலகின் முதலாவது பெண் தாதி என்ற பெருமையை இத்தாலி நாட்டைச் சேர்ந்த ஃபுளோரன்ஸ் நைற்றிங்கேள் பெறுகின்றார்.
  - இவரை விளக்கேந்திய பெருமாட்டி எனவும் தற்காலத் தாதிச் சேவையின் தாய் எனவும் போற்றுகின்றனர்.

- உள மருத்துவத்தின் தந்தை - சிக்மன் ஃபிராய்ட். இவரால்தான் மனித உளவியல் ஆராயப்பட்டு புதிய முன்னேற்றகரமான கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன.

- முதிர்ச்சி அடைந்த மனிதனில் காணப்படும் மொத்த என்புகள் - 206.

- இருதய மாற்று சத்திர சிகிச்சையை முதன்முதலில் வெற்றிகரமாகச் செய்தவர் - Dr. கிறிஸ்ரியன் பேணாட் (தென்ஆபிரிக்கா). இந்நிகழ்வு 1967இல் நடைபெற்றது.

- மனித உடலில் உள்ள மிகப் பெரிய சுரப்பி - ஈரல்

- ஒரு மனிதனுக்குச் சலரோக நோய் அல்லது நீரிழிவு நோய் இருக்கிறதா என்பதைக் கண்டறிய அவரின் சிறு நீருடன் சேர்த்து சூடாக்கப்படும் கரைசல்கள் - பீலிங்கின் கரைசல் அல்லது பெனடிக்ரின் கரைசல்.

- மனிதர்களின் சராசரி நாடித் துடிப்பு நிமிடத்திற்கு 72 தடவைகள்
  பெண்களின் நாடித்துடிப்பு நிமிடத்திற்கு 78 - 82 தடவைகள்
  ஆண்களின் நாடித்துடிப்பு நிமிடத்திற்கு 70 - 72 தடவைகள்

- மனிதர்களுக்குத் தடிமனை ஏற்படுத்துவது - றேனோ வைரஸ்
- மயிரிழை போன்ற ஊசிகள் மனித உடலில் குறிப்பிட்ட சில இடங்களில் நரம்புகளில் குத்துவதன் மூலம் நோய்களுக்கு சிகிச்சையளிக்கும் பாரம்பரிய சீன மருத்துவமுறை அக்குபஞ்சர் (Acupuncture)
  - இம்முறையில் நோயாளிகளுக்கு மருந்துக் குளிகைகள் எதுவுமே வழங்கப்படுவதில்லை என்பது குறிப்பிடத்தக்கது.
- மிகப் பழமை வாய்ந்த இந்திய மருத்துவமான ''ஆயுர்வேத மருத்துவ முறையின் தந்தை'' எனக் கருதப்படுபவர் - சாரகா
  - கி. மு. 02ஆம் நூற்றாண்டில் ஊர் ஊராக நடந்து போய் ஆங்காங்கே வியாதிகளுக்கு மருத்துவம் பார்க்கும் நாடோடி ஒருவருக்கு மகனாகப் பிறந்தவர்தான் சாரகா.
- ஹோமியோபதி மருத்துவமுறையின் தந்தை - சாமுவேல் ஹனிமன் ஜேர்மனியில் 1755ஆம் ஆண்டு பிறந்த சாமுவேல் ஹனிமனால் உடற் கூற்றையும், உளவியலையும் ஆழமாக ஆராய்ந்து மனித உடல் வியாதி களுக்குப் பரிகாரம் காணக் கண்டறியப்பட்ட சிகிச்சைமுறைதான் ஹோமியோபதி.
- மஞ்சட் காமாலை நோயால் பாதிப்புறும் உடல் உறுப்பு - கல்லீரல்
- மனிதர்கள் தடுமாறாமல் நேராக நிற்கக் காரணமான மூளையிலுள்ள கட்டுப்பாட்டுப் பகுதி - சிறுமூளை
- ஞாபக மறதியையும் புத்திக் கூர்மையையும் பாதிக்கும்நோய் - அல்சைமர் (மறதி நோய்)
- மனிதனின் இருதயத் துடிப்பை அறியும் கருவியின் பெயர் - கார்டியோ கிராப்
- எபோலா (Ebola) எனும் ஒரு வைரஸ் கிருமியின் தொற்றுதல் காரணமாக ஆபிரிக்காவின் கொங்கோ ஜனநாயக குடியரசிலும் (ஸைரே), அயல் நாடுகளிலும் ஏராளமான மக்கள் 1994, 1995 ஆம் ஆண்டுகளில் இறந்தனர்.
  - எபோலா எனும் ஆற்றங்கரை அருகில் வாழ்ந்த மக்களையே இந்த நோய் முதன்முதலில் தாக்கியதனால் அந்நோய்க்கு எபோலா எனப் பெயரிட்டனர்.
  - இந்த நோய் கண்டவர்கள் உடலின் உள் உறுப்புக்கள் கரைந்து இரத்த வாந்தி எடுத்துப் பரிதாபமான முறையில் இறந்துபோவார்கள்.
  - அத்துடன் எபோலா நோய் மிக இலகுவாக ஏனையவர்களுக்கு தொற்றிவிடும் தன்மை வாய்ந்ததாக இருப்பதனால் எய்ட்ஸ் நோயை உண்டாக்கும் HIV வைரஸை விட மிகக் கடுமையாக உள்ளது.

## நவீன மருத்துவக் கண்டுபிடிப்புக்கள்

| கண்டுபிடிப்பு | கண்டுபிடித்தவர் | நாடு | ஆண்டு |
|---|---|---|---|
| இரத்தச்சுற்றோட்டம் | வில்லியம் ஹார்வே | பிரித்தானியா | 1628 |
| புற்றுநோய் | ரொபேர்ட் வெய்னபெரி | அமெரிக்கா | 1682 |
| மயக்கமருந்து(குளோரோபோம்) | ஜேம்ஸ் சிம்ப்ஸன் | பிரித்தானியா | 1847 |
| கொலரா, காசநோய்க் கிருமிகள் | ரொபேட் கோச் | ஜேர்மனி | 1877 |
| கருத்தடை மாத்திரை | பின்கஸ் | அமெரிக்கா | 1955 |
| இதயமின் அலைப்படம் | என்தோவன் | நெதர்லாந்து | 1906 |
| இனப்பெருக்கச்சிகிச்சை | மார்ட்டின்கிளிவ் | அமெரிக்கா | 1980 |
| நீரிழிவு நோய் | பேண்டிக் கெஸட் | கனடா | 1921 |
| சிறுநீரக நோய் | கோல்ப் | நெதர்லாந்து | 1944 |
| குஷ்டரோக கிருமிகள் | ஹான்சன் | நோர்வே | 1873 |
| போலியோ முக்கூட்டு வக்சீன் | அல்பேட் சேபின் | அமெரிக்கா | 1854 |
| திறந்த இருதய அறுவைச் சிகிச்சை | வோல்ரன் வில்லி ஹெல் | அமெரிக்கா | 1953 |
| உடற்கூற்றியல் | அல்பர்சர் வானஹாலர் | சுவிற்சலாந்து | 1757 |
| மனோதத்துவ ஆராய்ச்சி | சிக்மண்ட் பிராய்ட் | அவுஸ்திரேலியா | 1895 |
| புகைப்பட சிகிச்சை | N. R. பின்சன் | டென்மார்க் | 1903 |
| வெறிநாய்க்கடி சிகிச்சை | லூயி பாஸ்ரர் | பிரான்ஸ் | 1860 |
| பாலுணர்வுச் சுரப்பிகள் | யூஜென்ஸ்டினாச் | அவுஸ்ரேலியா | 1910 |
| இரத்தம் உறைதல் | பால் எர்ல்ச் | ஜேர்மனி | 1884 |
| ஸ்ரெதஸ் கோப் | ரேனே லானக் | பிரான்ஸ் | 1819 |
| அம்மை குத்தும் முறை | எட்வேட் ஜென்னர் | அமெரிக்கா | 1796 |

## சினிமா

- உலக சினிமா வரலாற்றின் நூற்றாண்டு விழா நிகழ்வுகள் 1995ஆம் ஆண்டில் உலகெங்கும் கோலாகலமாகக் கொண்டாடப் பட்டது.
  - சினிமாத்துறையின் பல்வேறுபட்ட கால அபிவிருத்திகளும் புரட்சிகரமான மாற்றங்களும் நினைவு கூரப்பட்டன.
- பிரான்ஸ் நாட்டில் வாழ்ந்த லூமியர் சகோதரர்கள் 1895ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் கையால் சுற்றி இயக்கும் புரொஜெக்ரர் ஒன்றின் மூலம் தமக்குச் சொந்தமான தொழிற்சாலையிலிருந்து தொழிலாளர்கள் வேலை முடிந்து புகையிரத நிலையத்திற்குச் செல்லும் காட்சியைப் படமாக்கித் திரையில் காட்டினார்கள்.
  - இது அக்கால உலகில் மிகவும் பரபரப்பாகப் பேசப்பட்டது.
- தொடக்க காலத்தில் மௌனப் படங்கள் / ஊமைப் படங்கள் மட்டுமே வெளிவந்தன. காலப்போக்கில் விரைந்த விஞ்ஞான தொழிநுட்ப வளர்ச்சி காரணமாக பேசும் படங்கள் வந்தன. இன்று மிக உன்னத தொழில்

நுட்பங்கள் சினிமாத் துறையில் பிரயோகிக்கப்படுவதுடன் உலகின் அனைத்து மக்களையும் கவர்ந்து இழுக்கும் சக்தி வாய்ந்த ஊடகமாகவும் சினிமாவே விளங்குகின்றது.

- இலங்கையின் சினிமாத்துறை 1947இல் ஆரம்பிக்கப்பட்டது. இதன் பொன்விழா நிகழ்வுகள் 1997இல் கொண்டாடப்பட்டது.
  - முதலாவது மௌனப் படம் - ராஜ கீய விக்கிரமய
  - முதலாவது பேசும் படம் - கடவுன பொறந்துவ (உடைந்த உறுதி மொழி)
  - இது 1956இல் வெளியாகியது. S. M. நாயகம் எனும் தமிழர் இதனைத் தயாரித்தார்.
  - முதலாவது தமிழ்ப் படம் - சமுதாயம். இப் படத்தை ஹென்றி சந்திரவன்ஸ எனும் சிங்களவர் குறும்படமாகத் தயாரித்து இயக்கி வெளியிட்டார்.
- இலங்கையின் முதலாவது 35 mm (மில்லி மீற்றர்) தமிழ்ப் படம் தோட்டக் காரி. இதை இயக்கியதுடன் கதாநாயகனாகவும் நடித்தவர் - P. S. கிருஷ்ண குமார்.
- இலங்கை அரசினால் தலைசிறந்த சினிமாக் கலைஞர்களுக்கு 'சரசவிய' விருது வழங்கிக் கௌரவிக்கப்படுகின்றது.
- இலங்கையில் எடுக்கப்பட்ட முதலாவது ஆங்கிலத் திரைப்படம் - பிறிட்ஜ் ஒன் த றிவர் குவாய் (Bridge on the River Quai)
  - இப் படம் 1959ஆம் ஆண்டு அமெரிக்க ஹொலிவூட் கலைஞரான 'டேவிட் லீன்' என்பவரால் எடுக்கப்பட்டது.
- முதன்முதலாக திருகோணமலையைச் சேர்ந்த Dr. S. R. வேதநாயகம் (வேதா) என்பவரால் 1978இல் எடுக்கப்பட்ட படம் - தென்றலும் புயலும்.
- முதன்முதலாகப் பாடல்களே இல்லாமல் வெளிவந்த திரைப்படம் - அந்தநாள். நடிகர் திலகம் சிவாஜி கணேசன் நடித்த படம் இது.
- இந்தியத் திரைப்படங்களில் அதிக பாடல்களைக் கொண்டு வெளிவந்த படம் - இந்திரசபா. மொத்தம் 71 பாடல்களைக் கொண்டது. இது ஹிந்தி மொழிப் படமாகும்.
- தென்னிந்திய தமிழ் நடிகரான சிவாஜி கணேசனுக்கு பிரான்ஸ் நாடு தனது கலைத்துறை உயர் விருதான செவாலியோ விருதை 1995 ஆம் ஆண்டு வழங்கிக் கௌரவித்தது.

- கதையம்சம், சிரிப்பு நிறைந்த இன்றைய கார்ட்டூன் (கேலிச்சித்திர) வரிசையில் முதலில் தயாரான படம் - Fanta Smagorie. 1908இல் பிரான்ஸ் பரிஸ் நகரில் இது முதன்முதலில் திரையிடப்பட்டது.

- ''சிம்பொனி'' எனும் உலகின் உயர்ந்த இசை வடிவத்தை 1993ஆம் ஆண்டில் தென்னிந்திய சினிமா இசையமைப்பாளரான இளையராஜா அமைத்தார். சிம்பொனி இசை வடிவமே உலகில் உன்னதமான இசை வடிவமாகப் புகழப்படுகின்றது.
    - பிரித்தானியாவின் ரோயல் பில் ஹார்மோனிக் எனும் இசை நிறுவனத்துக்காக இளையராஜா இதனை அமைத்தார்.
    - சிம்பொனியை ஆசியாவிலேயே இவர் ஒருவர்தான் அமைத்தது குறிப்பிடத்தக்கது.

- சினிமாத்துறையின் உயரிய விருதான ஒஸ்கார் விருதை 1959இல் பென்ஹர் (Benhur), 1998இல் டைட்டானிக் (Titanic) ஆகிய படங்கள் 11 துறைகளுக்காக 11 விருதுகளைப் பெற்றமை சாதனையாகக் கருதப்படு கின்றது.

- இந்திய மேற்கு வங்காளத்தைச் சேர்ந்த உலகப் புகழ்பெற்ற சினிமாக் கலைஞரான காலஞ்சென்ற 'சத்திய ஜித் ரே' கௌரவ ஒஸ்கார் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.
    - இவரால் இயக்கி வெளியிடப்பட்ட 'பதர் பாஞ்சாலி, அபுசன்சார், நாயக், அபராஜிதா, ஜல்சாகர்' ஆகிய படங்கள் உலகத் தரம் வாய்ந்தவை, பிரபல்யமானவை.

- தமிழில் முதன்முதலில் வெளியாகிய முப்பரிமாண (3D) படம் - மைடியர் குட்டிச் சாத்தான்.

- வருடாந்தம் வெளியாகும் சிறந்த படங்களுக்கு 'ஒஸ்கார் விருது (OSCAR)' விருது வழங்கப்படுவது போல அமெரிக்காவில் மோசமான திரைப் படங்களுக்கு 'ராஸ்பெரி' விருது வழங்கப்படுகின்றது.

* * *

| |
|---|
| *உண்மையைச் சொல்லி நன்மையைச் செய்தால்* |
| *உலகம் உன்னிடம் மயங்கும் - நிலை* |
| *உயரும்போது பணிவு கொண்டால்* |
| *உயிர்கள் உன்னை வணங்கும்* |

## விஞ்ஞானம்

- பூமிக்குக் கவசமாக விண்ணில் அமைந்துள்ள படைமண்டலம் - ஓசோன்.
    - இது சூரியனிலிருந்து பூமியை நோக்கி வரும் மனித உடலுக்குத் தீமையான கதிர்வீச்சுக்களைத் தடுத்து நிறுத்து கின்றது. பிரதானமாக மனித உடலில் தோல் புற்றுநோயை உண்டாக்கவல்ல 'அல்றா வயலெற்' (UV) எனும் தீய கதிர்களைத் தடுத்து நிறுத்துகின்றது.
    - ஓசோன் படை மண்டலம் அண்மைக் காலமாக குளிர்சாதனப் பெட்டிகளிலும், வாசனைத் திரவியங்களிலும் உபயோகிக்கப்பட்டு வரும் குளோரோ ஃபுளோரோ காபன் (CFC) என்னும் வாயுவினால் சிதைவடைந்து வருவ தாக விஞ்ஞானிகள் அறிந்துள்ளனர். இதனால் புவியின் சமநிலை பாதிக்கப் பட்டு பாரிய தீய விளைவுகள் ஏற்படலா மென விஞ்ஞானிகள் எச்சரித்துள்ளனர்.
    - ஓசோனின் சிதைவைத் தடுத்து நிறுத்துவதில் விஞ்ஞானிகள் தீவிர கவனம் செலுத்துகின்றனர். CFCக்குப்

பதிலீட்டை அறிமுகம் செய்வதில் தீவிர கவனம் செலுத்துகின்றனர். ஓசோன் ($O_3$) 1840ஆம் ஆண்டு ''சோன்பீன்'' எனும் அமெரிக்கரால் கண்டறியப்பட்டது.

- பூகம்பத்தை அளவிடப் பயன்படுவது - றிச்ரர் அளவு கோல். இதனை Dr. சோல்ஸ் றிச்ரர் என்பவரே கண்டுபிடித்தார்.
- பிரெஞ்சு கணித மேதையான 'பஸ்கல்' 1642இல் Adding Machine (கூட்டல் இயந்திரம்) ஒன்றைக் கண்டுபிடித்தார்.
- சாள்ஸ பபேஜ் (பிரான்ஸ்) என்பவரினால் கண்டுபிடிக்கப்பட்ட Difference Engine, Analytical Engine ஆகியவைதான் கணினியின் (Computer) முன்னோடிகள். இதனால் சாள்ஸ் பபேஜ் கணினியின் கண்டுபிடிப் பாளராகவும், கணினியின் தந்தையாகவும் கூறப்படுகின்றார். இவரது உதவியாளரான 'லேடி அடா' அவர்களே முதலில் கணினி நிகழ்ச்சித் தயாரிப்பாளர் (Computer Programmer) ஆக இருந்தார்.
- 1946இல் J. பிரெஸ்பர் எக்கொட், ஜோன் மௌக்கிளி ஆகியோர் இணைந்து உருவாக்கிய ENIAC நவீன கணினியின் முன்னோடி.
- மின்காந்தக் கொள்கை (Electro Magnetic Thesis) 1870இல் கிளார்க் மக்ஸ் பெல் (1831-79) என்ற ஆங்கில இயற்பியலாளரால் (பௌதிகவியலாள ரால்) அறிவிக்கப்பட்டது.
- ஹீனரி ஹேட்ஸ் (1857 - 1895) என்ற ஜேர்மனிய இயற்பியல் விஞ்ஞானி Radio Waves (மின்காந்தத் கதிர்கள்) ஐக் கண்டறிந்தார்.
- 1895இல் வில்கொம் ரொண்ட் ஜென் (1845 - 1923) என்ற ஜேர்மனிய இயற்பியலாளர் X - Rays (X கதிர்கள்) ஐக் கண்டறிந்தார். இவர் இதற்காக 1901இல் பௌதிகவியலுக்கான நோபல் பரிசை முதலாவதாகப் பெற்றுக் கொண்டார். இவ் வருடமே நோபல் பரிசு வழங்கப்படும் முறை ஆரம்பித் தமை குறிப்பிடத்தக்கது.
- 1800இல் வில்லியம் ஹேர்ஷல் (1738 - 1822) என்பவர் அகச் சிவப்புக் கதிர் வீச்சைக் (Infrared Radiation) கண்டறிந்தார்.
- ஹென்றி பேக்கில் (1852 - 1909) என்ற பிரெஞ்சு விஞ்ஞானி 1896இல் கதிரியக்கம் (Radio Activity) ஐக் கண்டறிந்தார்.
- உலகின் முதலாவது நீர் மூழ்கிக் கப்பலான Turtle (கடல் ஆமை) அமெரிக்கரான டேவிட் புஸ்நெல் என்பவரால் உருவாக்கப்பட்டது.

- 'டொல்பி ஸ்டீரியோ' எனும் ஒலி அமைப்பை (Sound) கண்டுபிடித்த அமெரிக்கர் - டொல்பி

- தொலைக்காட்சி ஒளிபரப்பிற்காக செய்மதியை முதன்முதலில் பயன்படுத்திய நாடு - கனடா. Canada Television Services (CTS) என்ற நிறுவனம் 1976இல் CTS என்ற செயற்கைக் கோளை ஒளிபரப்பு நோக்கத்திற்காக விண்ணுக்குச் செலுத்தியது.

- முதல் வானொலி ஒலிபரப்பு நிலையம் புடாபெஸ்டில் (Budapesth) 1883 இல் தொடங்கப்பட்டது.

- வேதிப் பொருள்களின் அரசன் - கந்தக அமிலம்

- Plaster Paris எனப்படுவது - ஜிப்ஸம்

- துரித வெள்ளி (Quick Silver) - இரசம் (Hg)

- புகையிலையிலுள்ள நச்சுத்தன்மையான பொருள் - நிக்கொட்டீன்

- செயற்கை மழையைக் கண்டறிந்தவர் - எப்லின்லாமு

- **இன்ரெநெற்** (Internet)

  பல்லாயிரக்கணக்கான கணினிகள் ஒன்றோடு ஒன்று இணைக்கப்பட்ட ஒரு வலைப்பின்னல் 'இன்ரநெற்' (Internet) ஆகும். சர்வதேசக் கணினி களின் கூட்டமைப்பு எனவும் இன்ரநெற்றை அழைக்கலாம். Intenational Network என்பதன் சுருக்கமே Internet என அழைக்கப்படுகின்றது. கணினி களின் இணைப்பால் உருவானதால் இதனை 'இணையம்' என்று தமிழில் கூறுகின்றார்கள். இவற்றில் தகவல்களை அனுப்பும் மையங்கள் காணப் படுகின்றன. இவை 'வெப் தளங்கள்'(Web Site) எனப்படுகின்றன.

  - 'வெப் தளங்கள்' (Web Site) என்பது அதன் பெயருக்கு ஏற்ப இன்ரெ நெற்றில் பரவிக் கிடக்கின்ற பல இலட்சக்கணக்கான கணினிக் கோவைகளின் வலையமைப்பாகும்.

- **ஈ - மெயில்** (E-Mail)

  கணினியை உபயோகித்து இணையத்தின் ஊடாக கடிதத்தை வேறு இடத்திற்கு அனுப்புவதையே ஈ - மெயில் (E-Mail) என அழைக்கின்றனர். இலத்திரனியல் தபால் (Electronic Mail) என்பதன் சுருக்கமே ஈ - மெயில் (E-Mail).

- சாதாரணத் தபாலுக்கும் கணினித் தபாலுக்கும் நிறைய வித்தியாசங்கள் உண்டு. கணினித் தபால் அனுப்பும் பொத்தானை அழுத்திய மறுவினாடியே உரிய இடத்தைச் சென்றடைகின்றது. முன்னர் எழுத்துரு மூலமான கடிதங்களை மாத்திரமே ஈ - மெயில் மூலம் அனுப்ப முடிந்தது.

- தற்போது புகைப்படம், படம், வீடியோத் துண்டுகள் என்று எதையுமே ஈ - மெயில் மூலம் அனுப்பிவிடலாம். வெளிநாட்டுக்கு சாதாரண தபாலை அனுப்ப ஏற்படும் செலவை விட மிகக் குறைந்த செலவே ஈ - மெயில் மூலம் அனுப்ப ஏற்படுகின்றது. ஒவ்வொரு தனிநபருக்கும் அல்லது நிறுவனத்திற்கும் தனித்தனியான ஈ - மெயில் முகவரிகள் இருக்கும்.

* * *

அதிஷ்டம் உனக்குச் சட்டியைத் தேடித்தரலாம். ஆனால் சட்டியில் உலையைப் போடுவது உன் உழைப்பைப் பொறுத்ததே.

\- ஜோண் கே

## கலை இலக்கியம்

- முத்தமிழ் முனிவர் எனப் போற்றப்படும் ஈழத்தவர் சுவாமி விபுலானந்தர். அம்பாறை, காரைதீவைப் பிறப்பிடமாகக் கொண்ட இவரது இயற்பெயர் - மயில்வாகனன்.
  - புலமை மிகுந்த தமிழ்ப் பேரறிஞரான இவரால் யாழ் நூல், மதங்க சூளாமணி, கங்கையில் விடுத்த ஓலை ஆகிய நூல்கள் எழுதி வெளியிடப் பட்டுள்ளன. 'விவேகானந்தன்' என்ற பத்திரிகையின் ஆசிரியராகவும் இருந்துள்ளார்.
- முதன்முதலில் கலைக்களஞ்சியம் வெளி யிட்ட நாடு - பிரான்ஸ்
- தமிழில் தோன்றிய முதல் இலக்கண நூல் தொல் காப்பியம்
- 'கவிக்குயில்' என்று மக்களால் அழைக்கப் பட்டவர் - சரோஜினி நாயுடு (இந்தியா)
- தமிழில் முதன்முதலில் தோன்றிய குழந்தை கள் பத்திரிகை - பாலதீபிகை (1840)
- பேராசிரியர் கா. கைலாசபதி அவர்கள் இலங் கையில் இலக்கியத் திறனாய்வு முயற்சி களுக்கு வித்திட்ட முன்னோடியாகக் கருதப் படுகின்றார்.

- கர்நாடக கச்சேரி சங்கீதத்தின் பிதாமகராக 'அரியக்குடி இராமானுஜ அய்யங்கார்' கருதப்படுகின்றார். கர்நாடக சங்கீதத்தில் முதல் இந்திய ஜனாதிபதி விருது பெற்ற வாய்ப்பாட்டுக்காரர் இவர்தான்.

- இலங்கையின் பிரபல கார்ட்டூனிஸ்ட்டுகளில் ஒருவர் - S. சிவஞான சுந்தரம். இவரது இலட்சியப் பத்திரிகையான 'சிரித்திரன்' எனும் பருவ கால இதழ் சிரிப்பே சீவியம் என்பதனைத் தாரக மந்திரமாகக் கொண்டு பல்லாண்டுகளாக வெளிவந்தமை குறிப்பிடத்தக்கது.
  - 'சுந்தர், சிவாஜி' ஆகிய புனை பெயர்களையும் சிவஞானசுந்தரம் கொண்டிருந்தார். இவரால் வரையப்பட்ட "சவாரித்தம்பர், சின்னக் குட்டி, மைனர் மச்சான்" ஆகிய கதாபாத்திரங்கள் பத்திரிகை வாசகர் களிடையே மிகவும் பிரபலமானவை.

- உலகின் மிகப் பழைமையான கலைக் களஞ்சியம் இயற்கை வரலாறு (Natural History)

- ஜவஹர்லால் நேரு சிறைக்குள் இருந்தபோது தனது மகளான இந்திரா காந்திக்கு எழுதிய கடிதங்கள் - Discovery of India என்ற பெயரில் நூலாக வெளிவந்தது.

- தமிழில் சுருக்கெழுத்து முறையைத் தோற்றுவித்தவர் - ஆ. சீனிவாசராவ்

- உலகில் ஆகக் கூடிய பதிப்புரிமை பெற்ற ஒரே புத்தகம் Guiness Book (உலக சாதனைகளின் பதிவேடு) கின்னஸ் புத்தகம்.

- தமிழில் சிறுகதையெனும் இலக்கிய வடிவத்தை அறிமுகம் செய்து வைத்தவர் வ வே. சு. ஐயர். இவரை தமிழ் சிறுகதை முன்னோடி எனவும் அழைப்பர்.

- கவியரசு கண்ணதாசனின் இயற்பெயர் - சா. முத்தையா. பல்லாயிரம் கவிநயமிகு திரைப்படப் பாடல்களை இயற்றி உலகத் தமிழ் மக்கள் மனதில் நீங்காத இடம் பிடித்துள்ளார்.
  - அர்த்தமுள்ள இந்துமதம், சேரமான் காதலி, இயேசு காவியம் போன்ற புகழ்மிக்க பல நூல்களையும் எழுதி வெளியிட்டுள்ளார்.

- தமிழ்ச் சிறுகதை இலக்கிய மேதையெனப் போற்றப்படுபவர் புதுமைப் பித்தன். தமிழ் நாட்டைச் சேர்ந்த இவரது இயற்பெயர் சொ. விருத்தாசலம்.

- தமிழ் நாடக தந்தையெனப் போற்றப்படுபவர் - பம்பல் சம்பந்த முதலியார். இவராலேயே தமிழில் நாடகம் என்ற கலை வடிவம் அறிமுகம் செய்து வைக்கப்பட்டது.

| மொழிகள் | சிறப்புப் பெயர்கள் |
|---|---|
| தமிழ் | பக்தி மொழி |
| பிரெஞ்ச் | காதல் மொழி |
| ஆங்கிலம் | வணிக மொழி |
| கிரேக்கம் | சட்ட மொழி |
| இத்தாலி | இசை மொழி |
| உருது | கவிதை மொழி |

- ''சிறுகதையின் திருமூலர்'' என்று புதுமைப்பித்தனால் புகழப்பட்டவர் ''மௌனி''. தமிழ் நாட்டைச் சேர்ந்த இவரது இயற்பெயர் ''மணி''.
- ''ஆசுகவி'' என அழைக்கப்படும் ஈழத்துப் புலவர் - கல்லடி சு. வேலுப் பிள்ளை
- ''கவிஞர்களின் கவிஞன்'' என்று அழைக்கப்பட்ட ஆங்கிலக் கவிஞர் - எட்மண்ட் ஸ்பென்ஸர் (1552 - 1599)
- தமிழில் வெளிவந்த முதலாவது நாவல் - பிரதாப முதலியார் சரித்திரம். நீதிபதி மயிலாடுதுறை வேதநாயகம்பிள்ளை அவர்கள் இந்நூலை எழுதினார்.

| நூல்கள் | ஆசிரியர்கள் |
|---|---|
| சிலப்பதிகாரம் | இளங்கோவடிகள் |
| இராமாயணம்(மூலம்) | வான்மீகி |
| இராமாயணம்(தமிழ்) | கம்பர் |
| பெரியபுராணம் | சேக்கிழார் |
| மகாபாரதம்(மூலம்) | வியாசர் |
| மகாபாரதம்(தமிழ்) | வில்லிபுத்தூரார் |
| திருவாசகம் | மாணிக்கவாசகர் |
| தேம்பவாணி, ஒப்பிலக்கணம் | வீரமாமுனிவர் |
| மகாவம்சம் | மகாநாம |
| பாஞ்சாலி சபதம் | சுப்பிரமணிய பாரதியார் |
| காஞ்சிப்புராணம் | சிவஞான முனிவர் |
| நற்சிந்தனை | யோகர் சுவாமிகள் |

| நூல்கள் | ஆசிரியர்கள் |
|---|---|
| நன்னூல் | பவணந்தி முனிவர் |
| வெற்றி வேற்கை | அதிவீரராம பாண்டியர் |
| நல்வழி, நீதிநூல்கள், ஆத்திசூடி | ஔவையார் |
| மனோன்மணியம் | சுந்தரம்பிள்ளை |
| கீதாஞ்சலி | இரவீந்திரநாத் தாகூர் |
| மணிமேகலை | சீத்தலைச் சாத்தனார் |
| தொல்காப்பியம் | தொல்காப்பியர் |
| சூளாமணி | தோலாமொழித் தேவர் |
| திருப்புகழ் | அருணகிரிநாதர் |
| போரும் சமாதானமும் | லியோ ரோல்ஸ்றோய் |
| இலியட், ஒடிசி | ஹோமர் |
| நளவெண்பா | புகழேந்தி |
| நள்ளிரவுச் சுதந்திரம் | லாரி காலின்ஸ், டொமினிக், லேப்பியர் |
| அர்த்தசாஸ்திரம் | கௌடில்யர் |
| ஆசியஜோதி | எட்வின் ஆர் நொல்ட் |
| என் சத்திய சோதனை | மகாத்மா காந்தி |
| குடியாட்சி | பிளாற்றோ |
| ஒரு உலகம் | வேன்ட்ஸ் வில்கி |
| மூலதனம் | கார்ல் மாக்ஸ் |
| சகுந்தலை வெண்பா | க. நடேசப்பிள்ளை |
| இனியவை நாற்பது | பூதஞ் சேந்தனார் |
| கீத கோவிந்தம் | ஜெயதேவர் |

- ''சாதுமுனிவர்'' என்ற பட்டப்பெயர் கொண்டு அழைக்கப்படும் தமிழறிஞர் - வி. க. கல்யாணசுந்தரம்.
- ''சிலம்புச் செல்வர்'' என அழைக்கப்படும் தமிழக அறிஞர் - ம. பொ. சிவஞானம்.
- **திருக்குறள்**

தமிழில் வெளிவந்த நூல்களில் ஆகக் கூடுதலாகப் பிறமொழிகளில் மொழி பெயர்க்கப்பட்ட ஒரே நூல் இதுவேயாகும்.

திருக்குறளை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து வெளியிட்டவர் - G. U. போப்.

திருக்குறள் மொத்தம் 1 330 குறள்களைக் கொண்டுள்ளது. 133 அதிகாரங் களில் அமைந்துள்ளன. இக்குறள்கள் அறம், பொருள், காமம் என முப்பால்களாக வகுக்கப்பட்டுள்ளது. குறள்கள் இரண்டு அடியில் செறிவான நிறைவான கருத்துக்களை உறுதியாக வலியுறுத்துவது சிறப்பிற்குரியது. ''அ'' என்ற எழுத்தில் தொடங்கும் திருக்குறள் ''ன்'' என்ற எழுத்தில் முடிவடைகின்றது.

திருக்குறளின் மறுபெயர்கள் : முப்பா நூல், உத்தரவேதம், தெய்வநூல், பொய்யாமொழி, வாயுறை வாழ்த்து, தமிழ் மறை, பொது மறை

திருவள்ளுவரின் மறுபெயர்கள் : முதற்பாவலர், பெருநாவலர், தேவர், செந்நாப்போதார், மாதானுபங்கி, தெய்வப்புலவர், நாயனார், நான்முகனார்

திருக்குறள் உலக நாடுகளின் பல்வேறு மொழிகளிலும் மொழிபெயர்த்து வெளியிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

- முதலாவது உலகத் தமிழாராய்ச்சி மகாநாடு 1966ஆம் ஆண்டு மலேசியாவின் தலைநகர் கோலாலம்பூர் நகரில் நடைபெற்றது. 4ஆவது உலகத் தமிழாராய்ச்சி மகாநாடு 1974 ஜனவரியில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது. அம்மகாநாட்டின் விழாக்குழுவுக்கு அமரர் பேராசிரியர் சு. வித்தியானந்தன் தலைமை தாங்கினார்.
- உலகப் புகழ் பெற்ற பிறந்தநாள் பாடலை Mildred, Patty Hill என்ற சகோதரிகள் 1893ஆம் ஆண்டு "Good morning to you" என்று எழுதினார்கள்.
  - பின்னர் இது "Happy birthday to you" என்று மாற்றப்பட்டு உலகெங்கும் இன்றுவரை பிரபல்யம் பெற்று விளங்குகிறது.
- ஒரு யுகம் என்பது 4 320 000 ஆண்டுகளைக் கொண்டதென "ஆரிய பட்டர்" எழுதிய "ஆரிய பட்டீயம்" என்ற நூல் கூறுகின்றது.

| தமிழ் ஆண்டின் மாதங்கள் | பருவகாலங்கள் |
|---|---|
| சித்திரை, வைகாசி | இளவேனில், வசந்தகாலம் |
| ஆனி, ஆடி | முதுவேனில் |
| ஆவணி, புரட்டாதி | கார்காலம் |
| ஐப்பசி, கார்த்திகை | கூதிர்காலம் |
| மார்கழி, தை | முன்பனி |
| மாசி, பங்குனி | பின்பனி |

- ஐம்பெருங்காப்பியங்கள் - சீவகசிந்தாமணி, சிலப்பதிகாரம், மணி மேகலை, குண்டலகேசி, வளையாபதி.

- சங்ககால எட்டுத்தொகை நூல்கள் - நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல், கலித்தொகை, அகநானூறு, புறநானூறு.

  - சங்ககால பத்துப்பாட்டு நூல்கள் - திருமுருகாற்றுப்படை, பொரு நராற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, முல்லைப்பாட்டு, மதுரைக்காஞ்சி, நெடுநல்வாடை, குறிஞ்சிப் பாட்டு, பட்டினப்பாலை, மலைபடுகடாம்.

| நூல்கள் | மூலமொழிகள் |
|---|---|
| பைபிள் | ஹீப்று |
| தம்மபதம் | பாளி |
| குர்ஆன் | அரபு |

- ''வில்லியம் ஷேக்ஸ்பியர்'' (இங்கிலாந்து) எனும் புகழ்பெற்ற ஆங்கில நாவலாசிரியரால் எழுதப்பட்டு புகழ்பெற்ற கவிதை நாடகங்கள் - யூலியஸ் சீசர், ரோமியோ ஜூலியட், ஒதல்லோ, ஹம்லெற், பிக்மேலியன், மக்பெத்.

- உலகின் முதலாவது தமிழ் புத்தகம் - கிறிஸ்தவ வணக்கம். இது இந்தியாவில் வெளியிடப்பட்டது.

- ''ஆலும் வேலும் பல்லுக்குறுதி நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி'' எனும் தமிழ் பழமொழியில்

  - நாலு எனக் குறிப்பிடப்படுவது - நாலடியார் பாடல்.

இரண்டு எனக் குறிப்பிடப்படுவது - திருக்குறள்.

| திசைகள் | வீசும் காற்றுக்கள் |
|---|---|
| வடக்கு | வாடைக் காற்று |
| தெற்கு | தென்றல் காற்று |
| மேற்கு | கோடைக் காற்று |
| கிழக்கு | கொண்டல் காற்று |

- ''முத்தமிழ் காவலர்'' எனப்படும் இந்திய அறிஞர் - கி. ஆ. பெ. விசுவநாதம்.

- ''ஜனமன கண....'' என ஆரம்பிக்கும் இந்தியாவின் தேசிய கீதத்தை இயற்றியவர் இரவீந்திரநாத் தாகூர்.

| ஆண்டு நிறைவு | விழாக்கள் |
|---|---|
| 10வது ஆண்டு | தசர விழா, தசாப்த நிறைவு விழா |
| 25வது ஆண்டு | வெள்ளி விழா |
| 50வது ஆண்டு | பொன் விழா |
| 60வது ஆண்டு | மணி விழா, வைரவிழா |
| 75வது ஆண்டு | பவள விழா |
| 100வது ஆண்டு | நூற்றாண்டு விழா |

- ஈழத்தில் இசை நாடகக் கலையை வளர்த்தெடுத்து அதனை மக்கள் மத்தியில் பிரபல்யமடையச் செய்தவர் - நடிகமணி வி. வி. வைரமுத்து.
- தமிழ் இலக்கியத்தில் ''முற்றும்'' என்ற சொல்லை முதன்முதலில் அறிமுகப்படுத்தியவர் - இளங்கோவடிகள்.
- ''முதுதமிழ்ப் புலவர்'' என அழைக்கப்படும் ஈழத்துப் புலவர் மு. நல்லதம்பி.

| ஐவகை நிலங்கள் | பண்புகள் |
|---|---|
| குறிஞ்சி | மலையும் மலைசார்ந்த இடமும் |
| மருதம் | வயலும் வயல்சார்ந்த இடமும் |
| முல்லை | காடும் காடுசார்ந்த இடமும் |
| பாலை | மணலும் மணல்சார்ந்த இடமும் |
| நெய்தல் | கடலும் கடல்சார்ந்த இடமும் |

- ''புலவர் மணி'' எனப் போற்றப்படும் ஈழத்துப் புலவர் - A. பெரியதம்பிப் பிள்ளை

இவருக்கு கிழக்குப் பல்கலைக்கழகம் தேகாந்த நிலையில் (மரணத்தின் பின்) இலக்கிய கலாநிதிப் பட்டமளித்துக் கௌரவித்துள்ளது.

| இராகங்கள் | பாடப்படும் நேரங்கள் |
|---|---|
| பூபாளம் | காலை நேரம் |
| ஆனந்தா | மதிய நேரம் |
| வசந்தா | மாலை நேரம் |

- ''பாவேந்தர்'' எனச் சிறப்பிக்கப்படும் தமிழகக் கவிஞர் - பாரதிதாசன். இவரது இயற்பெயர் - கனக. சுப்புரத்தினம்.

- ''காளிதாசன்'' எனும் வடமொழி (சமஸ்கிருதம்) பெரும் புலவரால் இயற்றப்பட்ட காவியங்கள் - மேகதூதம், இரகுவம்சம், குமார சம்பவம், சாகுந்தலம்.

- ''யாதும் ஊரே யாவரும் கேளிர், தீதும் நன்றும் பிறர்தர வாரா'' எனப் பாடியவர் சங்ககாலப் புலவர் - கணியன் பூங்குன்றனார்.

  இதில் வரும் ''கேளிர்'' எனும் சொல் உறவினர்கள் என்ற கருத்தைத் தருகின்றது.

- பல இராகங்களில் பாடப்படுவது ''இராகமாலிகா'' என அழைக்கப் படுகின்றது.

- ''தங்கத் தாத்தா'' என அழைக்கப்படுகின்ற ஈழத்துப் புலவர் - நவாலியூர் சோமசுந்தரப் புலவர்.

- **வரலாற்றுக் காலங்கள்**

  சங்ககாலம் - கி. பி. 1 - 3ஆம் நூற்றாண்டு வரை

  சங்கமருவிய காலம் - கி. பி. 3 - 6 ஆம் நூற்றாண்டு வரை

  பல்லவர் காலம் - கி. பி. 6 - 9ஆம் நூற்றாண்டு வரை

  சோழர் காலம் - கி. பி. 9 - 14ஆம் நூற்றாண்டு வரை

  விஜயநகர நாயக்கர் காலம் - கி. பி. 14 - 16ஆம் நூற்றாண்டு வரை

- இலங்கையில் பாமர மக்களின் கலையாக ஆடப்பட்டு வந்த நாட்டுக் கூத்துக் கலையைப் பல்கலைக்கழக மட்டத்திற்கு எடுத்துச் சென்று அதனை ஆய்வுக்குரிய துறைசார் புலமை வாய்ந்த கலை என்ற தகுதியைப் பெற்றுக் கொடுத்தவர் - பேராசிரியர் சு. வித்தியானந்தன்.

  - இவர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முதலாவது துணை வேந்தர் (VC) பதவியை அலங்கரித்தமை குறிப்பிடத்தக்கது.

| மொழிகள் | அகராதியை முதலில் தொகுத்தவர் |
|---|---|
| தமிழ் | கதிரவேற்பிள்ளை |
| சிங்களம் | சோரட்டதேரர் |
| ஆங்கிலம் | சாமுவேல் ஜோன்சன் |

- இடைக்கால சிங்களக் கலை, சிவ நடனம் ஆகிய நூல்களை எழுதியவரும் மரபு வழியான கண்டியக் கலைகளினதும் கைப்பணிகளினதும் மறுமலர்ச் சிக்கும் உதவியவர் - கலாயோகி சேர். ஆனந்தகுமாரசுவாமி.

- ''மோனாலீஸா'' எனும் உலகப்புகழ் பூத்த பெண் ஓவியத்தை வரைந்தவர் லியனார்டோ டாவின்ஸி (இத்தாலி). மோனாலிஸா ஓவியம் கி. பி. 1503ஆம் ஆண்டில் வரையப்பட்டது. இவ் ஓவியத்தில் உள்ள மோனாலீஸா என்ற பெண்ணின் மென்மையான புன்னகை உலகப் பிரசித்தமானது.
    - டாவின்ஸியினால் வரையப்பட்ட ''இராப்போசனம்'' எனும் ஓவியமும் மிகப் பிரபல்யமானது.
    - டாவின்ஸி அவர்கள் கி. பி. 1452ஆம் ஆண்டு இத்தாலியின் ஃபுளோரன்ஸ் நகருக்கு அருகில் பிறந்தார். இவர் பொறியியல் வல்லுனராக, கட்டடக்கலைஞனாக, நில அளவையாளனாக, இசைக்கலைஞனாக, பாடகனாக, வானியலாளனாக, கணித வல்லுனராக, தாவரவியல் அறிஞராக, விலங்கியல் நிபுணனாக, உடற்றொழிலியல் விற்பன்னராக, சிலைவடிக்கும் சிற்பியாக, பாட்டியற்றும் புலவனாக பல பாத்திரங்களை ஒரே நேரத்தில் வகித்தவர். ஓவியம் இவரின் ஞானக்கடலில் இருந்து வெளிவந்த ஒரு சிறுதுளி என்றே கூறலாம்.

- இந்தியாவில் அண்மைக்காலமாகத் தாழ்த்தப்பட்ட அல்லது பிற்படுத்தப் பட்ட அல்லது ஹரிஜன மக்களால் தமது வாழ்வியல் தொடர்பாகவும் எதிர்கால மேம்பாடு தொடர்பாகவும் படைக்கப்படும் இலக்கியங்கள் ''தலித் இலக்கியம்'' எனும் சிறப்புப் பெயர் கொண்டு அழைக்கப் படுகிறது. மகாராஷ்டிர மொழியிலமைந்த ''தலித்'' எனும் சொல் மண்ணில் வேர் பிடித்தவர்கள் என்ற கருத்தைத் தருகின்றது.
    - ஈழத்தில் தாழ்த்தப்பட்ட மக்கள் தொடர்பாக இவ்வகை இலக்கியங் களைப் படைத்த முன்னோடிகள் - K. டானியல், டொமினிக் ஜீவா

- ''மிக்கி மவுஸ்'' எனும் உலகப் புகழ் பெற்ற கார்ட்டூன் (கேலிச்சித்திரம்) வரைந்தவர் வோல்ட் டிஸ்னி (ஐக்கிய அமெரிக்கா). இவரால் ஐக்கிய அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் சிறுவர்களுக்கான உல்லாச உலகமாக ''டிஸ்னி லாண்ட்'' அமைக்கப்பட்டுள்ளது. இந்த இடம் பெருமளவு சுற்றுலாப் பயணிகளைக் கவர்ந்திழுக்கும் இடமாக உள்ளது.

- ''இலங்கைத் தமிழ் நாடகத் தந்தை'' எனப் போற்றப்படுபவர் - கலையரசு சொர்ணலிங்கம்.

- உலகப் புகழ் பெற்ற ஓவியரான ''பப்லோ பிக்காஸோ'' ஸ்பெயினில் 1881ஆம் ஆண்டில் பிறந்தார். பேசுவதற்குப் பழகமுன் ஓவியம் வரையத் தொடங்கிய மேதையான இவர் 1973இல் காலமானார்.

- சமாதானத்தின் சின்னமாகப் போற்றப்படும் ஒலிவ் கிளை தாங்கிய வெண்புறாவை உருவாக்கியவர் இவரே. ''கொர்னிக்கா'' எனும் பிரபல ஓவியமும் இவரால்தான் வரையப்பட்டது.

- கலைத்துறைக்குப் பிரான்ஸ் நாட்டில் வழங்கப்படுகின்ற உயர் விருது - செவாலியர்.
  - பிரான்ஸ் சக்கரவர்த்தியாகத் திகழ்ந்த மாவீரன் ''நெப்போலியன் போனபார்ட்'' என்பவராலேயே இவ்விருது உருவாக்கப்பட்டது.
  - தென்னிந்திய தமிழ் சினிமா நடிகரான சிவாஜி கணேசனுக்கு பிரான்ஸ் அரசாங்கம் 1995ஆம் ஆண்டில் வழங்கிக் கௌரவித்தமை சிறப்பிற்குரியது.

- தமிழில் வெளிவந்த முதலாவது வரலாற்று நாவல் - மோகனாங்கி
  - நாயக்க மன்னர்களின் காலத்தை நிலைக்களனாக வைத்து இலங்கையரான தி. க. சரவணமுத்து அவர்களால் எழுதப்பட்ட இந்த நாவல் 1865இல் வெளிவந்தது.

- Twinkle Twinkle Little Star எனும் உலகப் புகழ் பெற்ற ஆங்கில மழலைக் கவிதையை எழுதியவர் - ஆன் ரெய்லர்

- தமிழ் சினிமாவின் புகழ் பெற்ற பாடலாசிரியரான பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம் 1938இல் இந்தியாவின் தமிழகத்தில் பிறந்தார்.
  - பொதுவுடமைக் கருத்துக்களையும் இலக்கிய செழுமைமிக்க வரிகளையும் கொண்ட நூற்றுக்கணக்கான பாடல்களை எழுதியுள் ளார்.
  - தமது 29வது வயது வரை வாழ்ந்து பிரகாசித்த இவர் மாரடைப்பால் காலமாகியமை தமிழ் இலக்கிய உலகுக்குப் பேரிழப்பாகும்.

- சென்னை பச்சையப்பன் கல்லூரியில் 1924இல் தமிழறிஞர்கள் ஒன்று கூடி தமிழ் ஆண்டு உருவாக்கப்பட வேண்டியதன் அவசியத்தை உணர்ந்து ''திருவள்ளுவர் ஆண்டை'' உருவாக்கினர்.
  - கி. மு. 3இல் திருவள்ளுவர் காலம் ஆரம்பிக்கின்றது எனக்கொண்டு திருவள்ளுவர் ஆண்டு கணிக்கப்படுகின்றது.
  - ஆங்கில ஆண்டு + 31= திருவள்ளுவர் ஆண்டு. மறைமலை அடிகள் சி. ஆ. பெ. விசுவநாதன், கல்யாணசுந்தரனார், சோமசுந்தர பாரதியார் முதலானோர் இதில் கலந்து கொண்டனர்.
  - பன்னிரு இராசிகளும் தூய தமிழில் தமிழ் மாதங்களாகப் பின்பற்றப் படுகின்றன.

- Descent of Man எனும் நூலை எழுதியவர் - சார்ஸ் டார்வின். Animal Farm நூலை எழுதியவர் - ஜோர்ஜ் ஆவெல்
- தமிழில் முதன்முதலில் வெளிவந்த மாதஇதழ் - மாசத்தினச் சரிதை.
- இலங்கையில் தமிழில் வெளிவந்த முதலாவது நாவல் - அஸன்பே யுடைய சரித்திரம்.
  - முகம்மது காசிம் சித்தி லெப்பை என்பவர் இதனை எழுதியுள்ளார்.
  - இலங்கையின் முதலாவது தமிழ் நாவலாசிரியை - மங்கள நாயகம் தம்பையா.
  - இலங்கையைக் களமாகக் கொண்டு எழுதப்பட்ட முதலாவது தமிழ் நாவல் - சன்மார்க்க ஜெயம். இலங்கை தொடர்பான முதல் வரலாற்று நாவல் - விஜயசீலம்
- சிங்கள நாவல்களை எழுதியவர்கள்

  கரம்பெலிய - மார்ட்டின் விக்கிரமசிங்க

  கொலுஹவத - கருணாசேன ஜயலத்
- ஈழத்தில் எழுந்த முதல் பள்ளு நூல் - கதிரைமலைப்பள்ளு
- ''வெண்பா'' பாடுவதில் வல்லவர் எனப் பெயர் பெற்றவர் - புகழேந்தி
- ''பரணி'' பாடுவதில் சிறந்தவர் எனப் பெயர் பெற்றவர் - சயங் கொண்டார்.
- ஐம்பெருங்காப்பியங்களில் ஒன்றாகிய சிலப்பதிகாரம் ''குடிமக்கள் காப்பியம்'' என அழைக்கப்படுகின்றது.
- முதன்முதலில் வெளிவந்த அகராதி - சதுர அகராதி.
- ஈழத்து சிறுவர் இலக்கியத்துறையில் வெளிவந்த முதல் தமிழ் நாவல் - ஓடிப்போனவன்.
- ''நானாடகம்'' என்ற நாடக நூலை எழுதியவர் - பேராசிரியர் க. கணபதிப் பிள்ளை.
- ''தமிழ் இலக்கிய வரலாறு'' என்ற நூலை எழுதியவர் - பேராசிரியர் வி. செல்வநாயகம்.
- ''தமிழர் சால்பு'' என்ற நூலை எழுதியவர் - பேராசிரியர் சு. வித்தியானந்தன்.
- சோழர் காலத்தை ''காப்பிய காலம்'' எனப் புகழ்கின்றனர்.

* * *

## பல்துறைக் களஞ்சியம்

- புத்திக்கூர்மைப் பரிசோதனையை (IQ) முதன்முதலாக ஆரம்பித்து வைத்தவர் - அல்பிரெட் பினெற் (1857 - 1901), பிரான்ஸ்.
- குடித்தொகைக் கல்வியின் தந்தை - ஜோன் கிராண்ட்.
- 1937ஆம் ஆண்டில் ஜேர்மனி, இத்தாலி, ஜப்பான் ஆகிய நாடுகள் வல்லாதிக்க நோக்குடன் ஒன்றிணைந்து முக்கூட்டு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன.

  இது பேர்லின், ரோம், ரோக்கியோ அச்சு என அழைக்கப்பட்டது. இதனால் இரண்டாம் உலகப்போரின் போது இம்மூன்று நாடு களும் அச்சு நாடுகள் என அழைக்கப்பட்டன. அவற்றுடன் போர் புரிந்த ஏனைய நாடுகள் நேசநாடுகள் என அழைக்கப்பட்டன.

உலகில் பல்வேறு துறைகளிலும் முதலாவதாகச் சாதனை புரிந்த பெண்களின் விபரம்.

| நிலை | பெயர் | நாடு | சாதனை ஆண்டு |
|---|---|---|---|
| மருத்துவம் | எலிஸபெத் பிளக்வெல் | அமெரிக்கா | 1849 |
| பல்வைத்தியர் | லூஸி ஹொப்ஸ் | அமெரிக்கா | 1866 |
| வழக்கறிஞர் | அரபெல்லா மேன்ஸ்ஃபீல்ட் | அமெரிக்கா | 1869 |
| நீதிபதி | எஸ்தர் மோரிஸ் | அமெரிக்கா | 1876 |
| விமானி | மைலி எலிஸி | பிரான்ஸ் | 1909 |
| பொலிஸ் | அலிஸ் ஸ்ரெப்பின்ஸ் வெல்ஸ் | அமெரிக்கா | 1910 |
| ஜனாதிபதி | மரியா ஸ்ரெலா பெரோன் | ஆர்ஜென்ரீனா | 1974 |
| புகையிரத ஓட்டுநர் | அன்னே வின்டர் | ஐக்கிய இராச்சியம் | 1983 |

| நாடுகள் | தேசியப் பறவைகள் |
|---|---|
| இலங்கை | காட்டுக் கோழி |
| இந்தியா | ஆண் மயில் |
| கனடா | வாத்து |
| ஐக்கிய அமெரிக்கா | கழுகு |
| அவுஸ்திரேலியா | சவாலோ பறவை |
| தென்ஆபிரிக்கா | நீலக் கொக்கு |

| நாடுகளின் தற்போதைய பெயர் | முன்னைய பெயர் |
|---|---|
| மியன்மார் | பர்மா |
| ஈரான் | பாரசீகம், பேர்சியா |
| எத்தியோப்பியா | அபிசீனியா |
| ஈராக் | மெசப்பெத்தேமியா |
| நெதர்லாந்து | ஒல்லாந்து, ஹொலான்ட |
| ஸிம்பாவே | தென்ரொடீசியா |
| கம்போடியா | கம்பூச்சியா |
| நமீபியா | தென்மேற்கு ஆபிரிக்கா |
| தாய்வான் | பொமோசா |
| தாய்லாந்து | ஸயாம் |
| சம்பியா | வடரொடீசியா |

| உலகக் குறியீடுகள் | விளக்கம் |
|---|---|
| ஒலிவ் இலைகள் | சமாதானம் |
| வெண்புறா | அமைதி |
| சிவப்புச்சக்கரம் | வளர்ச்சி |
| மஞ்சள்கொடி | தொற்றுநோய் |
| கறுப்புத்துணிப்பட்டி | துக்கம் |
| கண்கள் கட்டப்பட்டு கையில் தராசு வைத்திருக்கும் பெண் | நீதி |
| சிவப்பு முக்கோணம் | குடும்பக்கட்டுப்பாடு |
| செஞ்சிலுவை | மருத்துவ உதவி |
| அரைக்கம்பத்தில் கொடி | துக்கம் |
| சிவப்பு விளக்கு, கொடி | ஆபத்து |

| அறிவியல் துறைகள் | தந்தையர் |
|---|---|
| கணக்கியல் | லூக்கா பெசியோலி |
| கணினி | சாள்ஸ் பபேஜ் |
| மின்சாரம் | மைக்கல் ஃபாரடே |
| அரசியல் | அரிஸ்டோட்டில் |
| சமூகவியல் | மக்ஸ்வெபர், ஹொம்ரே |

| பிரிக்கும் நீரிணைகள் | பிரிபடும் நிலங்கள் |
|---|---|
| பாக்கு நீரிணை | இந்தியாவிலிருந்து இலங்கை |
| பனாமா நீரிணை | வடஅமெரிக்காவிலிருந்து தென்அமெரிக்கா |
| பீரிங் நீரிணை | ஆசியாவிலிருந்து வடஅமெரிக்கா |
| டோவர் நீரிணை | பிரான்ஸ்சிலிருந்து பிரித்தானியா |

- **ஐ. நா. சபை பிரகடனம் செய்த ஆண்டுகள்**

ஐக்கியநாடுகள் சபை ஒவ்வொரு ஆண்டு ஜனவரி மாதமும் அவ் ஆண்டு சர்வதேச ரீதியாக அவ்விடயத்திற்குரிய ஆண்டு எனப் பிரகடனம் செய்து கொள்ளும்.

இப்பிரகடனம் அவ்வக் காலத்தேவையெதுவென மக்கள் மனதில் நல்லெண்ணத்தையும், சமூகப் பொறுப்பையும் ஏற்படுத்தும் நோக்கில் அமைவது வழக்கம். அவ்வாறு பிரகடனமான சில ஆண்டுகள்.

2000 - சர்வதேச சமாதான ஆண்டு

1999 - சர்வதேச முதியோர் ஆண்டு

1998 - சர்வதேச மனித உரிமைகள் ஆண்டு

1997 - சர்வதேச சூழல் பாதுகாப்பு ஆண்டு

1996 - சர்வதேச வறுமை ஒழிப்பு ஆண்டு

- **மனிதனது ஆறு அறிவுகள்**
  உணர்ந்தறிவு, சுவைத்தறிவு, பார்த்தறிவு, முகர்ந்தறிவு, கேட்டறிவு, பகுத்தறிவு.

- பெனிற்றோ முசோலினி 1922இல் இத்தாலியில் ஆட்சியைக் கைப்பற்றி னார். இவராலேயே ''பாசிசம்'' எனும் அரசியல் சித்தாந்தம் அறிமுகப் படுத்தப்பட்டது.
  - முசோலினி இரண்டாம் உலகப்போரின் போது அச்சு நாடுகளின் அணியில் நின்று போரை நடத்தினார். இத்தாலியில் வைத்து இவர் சுட்டுக்கொல்லப்பட்டார்.

- வியட்நாமிய மண்ணில் அமெரிக்கப்படைகளால் மேற்கொள்ளப்பட்ட ஆக்கிரமிப்பு 1975 ஏப்ரல் 30ஆம் திகதியன்று முடிவுக்கு வந்தது. அமெரிக்கப்படைகள் வியட்நாமிலிருந்து முற்றாக வெளியேறின. 1970 - 1975 வரை நடைபெற்ற போரில் 30 இலட்சம் (3 மில்லியன்) வியட்நாமிய மக்களும், 60 000 அமெரிக்கப் படையினரும் கொல்லப் பட்டனர்.

**வினோத உயிரினங்கள்**

| | |
|---|---|
| அதிக நீர் அருந்தும் பறவை | புறா |
| மிகச்சிறிய முட்டையிடும் பறவை | தேன்சிட்டு |
| சத்தமிடாத விலங்கு | ஒட்டகச்சிவிங்கி |
| ஞாபகசக்தி கூடிய விலங்கு | யானை |
| நீலநிற இரத்தத்தையுடைய கடல் உயிரினங்கள் | நண்டு, இறால் |
| பல்லில்லாத முலையூட்டி | தேவாங்கு |
| கடல் நீரைப் பருகும் ஒரேயொரு பறவை | பென்குயின் |
| பறக்கும் போதே தூங்கும் பறவை | ஆல்பட்றாஸ் |
| மிகப்பெரிய வாயுள்ள விலங்கு | நீர்யானை |
| பித்தப்பை இல்லாத முலையூட்டி | எலி |
| நாக்கு இல்லாத ஊர்வன | முதலை |
| கண்களின் மூலம் வியர்வையை வெளியேற்றும் உயிரினம் | முதலை |

| | |
|---|---|
| தான் உண்ட எலும்பை ஜீரணிக்கும் ஆற்றலுடைய ஒரேயொரு உயிரினம் | முதலை |
| பறக்கும் முலையூட்டி | வெளவால் |
| நீந்தத் தெரியாத விலங்கு | ஒட்டகம் |
| மண்டையோடும் அலகும் ஒரே எலும்பால் அமையப்பெற்ற பறவை | மரம்கொத்தி |

- அனைத்துலக அஞ்சல் ஒன்றியம் 1974 ஒக்ரோபர் 09இல் ஆரம்பிக்கப் பட்டது. தற்போது இதில் இலங்கை உட்பட 180 நாடுகள் அங்கம் வகிக் கின்றன.
- பூமி வெப்பமடைவதால் அழிவின் விளிம்பிலுள்ள மிருகங்கள் - துருவக் கரடிக் குட்டிகள், அல்கா
- பறவை இனங்களில் மிகவும் சிறியது - ரீங்காரப்பறவை (Humming Bird) இது கியூபாவில் காணப்படுகிறது.
- சீனப் பெருஞ்சுவரின் நீளம் - 1684 மைல்.
- போகும் இடமெங்கும் கொண்டு சென்று நடமாடியவாறே உரையாடக் கூடிய தொலைபேசி - செலூலர்
- உலகத்தில் மிகச்சிறந்த சுருட்டு எனப் பெயர்பெற்ற சுருட்டு - ஹவானா சுருட்டு (கியூபா)
- ''ஜோர்ஜ் ஸ்மித்'' எனும் பிரான்ஸ் நாட்டவரான ஐக்கிய நாடுகளின் அதிகாரி 66 மொழிகளில் பேசக் கூடியவர்.
- 188 நாடுகளின் தேசிய கீதங்களைப் பாடிச் சாதனை புரிந்தவர் - மைக்கேல் சாசுர் (சுவிஸ் நாட்டு சட்ட மாணவர்)
- **இந்தியாவின் தேசிய....**

  பறவை - மயில்     மிருகம் - புலி

  மலர் - தாமரை     மரம் - ஆலமரம்

- முதன்முதலில் எவரெஸ்ட் சிகரத்தின் உச்சியில் ஏறியவர் - எட்மண்ட் ஹிலாரி.
- உலகின் மிக உயரமான நீர்வீழ்ச்சியான ''Angels falls'' கிழக்கு வெனிசூலா வின் ''கிரேன் சபானா'' அடர்ந்த மலைப்பகுதியில் அமைந்துள்ளது. இது விழும் மலைக்கு பிசாசு மலை என்று பெயர். இந் நீர்வீழ்ச்சியுடைய

இடத்தை 1953இல் கண்டுபிடித்த ஜேம்ஸ் ஏன்ஜெல்ஸ் என்பவரின் ஞாபகார்த்தமாகவே இப்பெயரிடப்பட்டது.

- தேம்ஸ் நதி மீது அமைந்துள்ள நகரம் - இலண்டன்.
- மே தினம் 1890ஆம் ஆண்டு முதல் கடைப்பிடிக்கப்பட்டுவரினும் 1917ஆம் ஆண்டிலேயே சர்வதேச ரீதியாக உத்தியோகபூர்வமாகக் கடைப் பிடிக்கப்படுகின்றது.
  - 1886இல் அமெரிக்காவின் சிக்காக்கோவில் 8 மணிநேர வேலையை முன்னிறுத்தி நடத்திய பேரணியில் வீசப்பட்ட குண்டினால் 07 பேர் இறந்தனர். 66 பேர் காயப்பட்டனர். மே முதலாம் நாளன்று இடம் பெற்ற இந்நிகழ்வே பின்னாளில் மே தினம் கொண்டாடக் காரண மாயிற்று.
- மகாத்மா காந்தி 1949 ஜனவரி 30இல் நதுராம் கோட்சே எனும் இந்துமதத் தீவிரவாதியினால் சுட்டுக் கொல்லப்பட்டார்.
  - இக்கொலைக்காக நதுராம் கோட்சே, நாராயணன் ஆப்தே என்ற இருவருக்கும் மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது.
- 1919 ஏப்ரல் 13இல் இந்திய பஞ்சாப் மாநிலத்து ''அமிர்தசரஸ்'' நகர ஜாலியான் வாலா பாக் மைதானத்தில் பிரிட்டிஷ் படையினர் இந்திய மக்கள் மீது மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் 379 பேர் கொல்லப் பட்டனர்.
  - ''ஜெனரல் மைக்கல் லுடயர்'' என்பவரே இப்படுகொலைக்குப் பொறுப்பாளியாக இருந்தார்.
- உலகில் கடற்கரை இல்லாத நாடுகள் - 26.
- தன் வாழ்நாளில் ஒரேயொரு முறை பூக்கும் தாவரம் - மோனாகாப்பிக்

| சிறப்புப் பெயர்கள் | நாடுகள் |
|---|---|
| தெற்கேயுள்ள பிரித்தானியா | நியூசிலாந்து |
| நள்ளிரவுச் சூரிய உதய நாடு | நோர்வே |
| சூரியன் உதிக்கும் நாடு | ஜப்பான் |
| நைல் நதியின் கொடை | எகிப்து |
| ஆயிரம் வாவிகள் நாடு | பின்லாந்து |
| உலகத்தின் கூரை | திபெத் |
| ஐரோப்பாவின் விளையாட்டு மைதானம் | சுவிற்சலாந்து |

| சிறப்புப் பெயர்கள் | நாடுகள் |
|---|---|
| ஐரோப்பாவின் காப்பகம் | பெல்ஜியம் |
| ஐரோப்பாவின் நோயாளி | துருக்கி |
| புனித நாடு | பலஸ்தீனம் |
| உலகின் சர்க்கரைக் கிண்ணம் | கியூபா |
| தங்கப் போர்வை நாடு | அவுஸ்திரேலியா |
| மரகதத் தீவு | அயர்லாந்து |
| ஆயிரம் ஏரிகள் நாடு | பின்லாந்து |
| பொற்கோபுர நாடு | மியன்மார் (பர்மா) |
| சூரியன் மறையும் நாடு | இங்கிலாந்து |
| இருண்ட கண்டம் | ஆபிரிக்கா |
| மத்தியதரைக் கடலின் திறவுகோல் | ஜிப்ரோல்ரர் |
| லில்லிப் பூக்களின் நாடு | கனடா |
| அதிகாலை அமைதி நாடு | கொரியா |
| ஏழு குன்று நகரம் | ரோம் |
| பவளத்தீவு | பஹ்ரெயின் |
| கங்காருகளின் நாடு | அவுஸ்திரேலியா |

- 20ஆம் நூற்றாண்டின் அதிசிறந்த விஞ்ஞானியெனப் போற்றப்படுபவர் அல்பேர்ட் ஐன்ஸ்டீன்.
  - இவரால் இயற்றப்பட்ட சார்பு நிலைக்கொள்கை உலகப் பிரபல்யம் பெற்றது. பௌதிகவியலுக்கான நோபல் பரிசை 1921இல் பெற்றார்.
- கொங்கோ ஜனநாயகக் குடியரசில் (ஸைரே) மக்களால் தெரிவு செய்யப்பட்ட முதல் அதிபர் பட்ரிஸ் லுமும்பா என்பவராவார்.
  - இவரை மொபுட்டு செசிசீக்கோ என்பவர் கொலை செய்துவிட்டு ஜனாதிபதி பதவியைக் கைப்பற்றினார்.
  - லுமும்பாவின் நண்பரான ''லோறன்ற் கபீலா'' என்பவர் 32 வருடங்களாக உள்நாட்டுப் போர் புரிந்து 1997இல் ஆட்சியைக் கைப்பற்றினார். ரஷ்யாவில் லுமும்பாவின் ஞாபகார்த்தமாக ''லுமும்பா பல்கலைக்கழகம்'' இயங்கி வருவது குறிப்பிடத்தக்கது.
- உலகின் மிகப்பெரிய இந்துக்கோயில் வட கம்போடியாவின் ''சியம்றீப்'' நகரிலுள்ள ''அங்கோவாட்'' ஆகும்.

- உலகின் மிகப்பெரிய ஜனநாயக நாடு - இந்தியா
  உலகின் மிகப்பெரிய கம்யூனிஸ நாடு - சீனா
  மிகப்பெரிய இஸ்லாமிய நாடு - இந்தோனேசியா
  ஒரேயொரு இந்துமத நாடு - நேபாளம்
  ஆகக்கூடிய சனத்தொகை கொண்ட நாடு - சீனா
  ஆகக்குறைந்த சனத்தொகை கொண்ட நாடு - வத்திக்கான்
  ஆசியாவிலேயே ஒரேயொரு கிறிஸ்தவ நாடு - பிலிப்பைன்ஸ்
- உலகில் பெண்களுக்குக் கட்டாய இராணுவப் பயிற்சி அளிக்கும் ஒரேயொரு நாடு - இஸ்ரேல்
- புதிய 4 பொருளாதாரப் புலிகள் என வர்ணிக்கப்படும் தென்கிழக்காசிய நாடுகள் - தென் கொரியா, ஹொங்கொங், தாய்வான், சிங்கப்பூர்
- அமெரிக்காவில் பாதுகாப்பு, இராணுவத் தீர்மானங்களை எடுக்கும் தலைமையகத்தின் பெயர் - பென்ரகன்
- உலகில் அதிகளவு மக்களால் தாய்மொழியாகப் பேசப்பட்டு வரும் மொழி - மண்டாரின். இது சீனாவின் மொழி
- 4 வரிகளையுடைய ஜப்பானின் தேசியகீதம் உலகின் மிகச்சிறிய தேசிய கீதமாக விளங்குகின்றது.
  - 128 வரிகளையுடைய கிரேக்கத்தின் தேசிய கீதம் உலகின் மிகப் பெரிய தேசிய கீதமாக உள்ளது.
- கண் பார்வையற்றவர்கள் கல்வி பயிலும் எழுத்து முறையை உருவாக் கியவர் - லூயி பிறெய்லீ
  - பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த இவரால் உருவாக்கப்பட்ட எழுத்து பிறெய்ல் எழுத்து எனப்படுகிறது.
- செஞ்சிலுவைச் சின்னத்தைத் தனது தேசியக் கொடியில் கொண்டுள்ள நாடு - சுவிற்சலாந்து.
  - ருவண்டா நாடு தனது தேசியக்கொடியில் R என்ற ஆங்கில எழுத்தை மட்டுமே கொண்டுள்ளது.
- ஜேர்மனியை கிழக்கு மேற்காகப் பிரித்துக் கூறுபோட்டு 1962ஆம் ஆண்டில் பெர்லின் சுவர் எல்லைச் சுவராகக் கட்டப்பட்டது.
  - இச்சுவர் 1989ஆம் ஆண்டில் கிழக்கு ஜேர்மனிய மக்களது எழுச்சி காரணமாக உடைத்தெறியப்பட்டது.
  - 1990 ஒக்ரோபர் 03இல் கிழக்கு மேற்கு ஜேர்மனிகள் ஒன்றாக இணைந்து ஜேர்மனி என தனி ஒரு நாடு உருவாகியது.

- உலகின் முதலாவது அஞ்சல் முத்திரை 1840ஆம் ஆண்டு இங்கிலாந்து நாட்டில் வெளியானது. இங்கிலாந்து தனது முத்திரைகளில் தனது நாட்டின் பெயரை அன்றிலிருந்து இன்றுவரை பொறிப்பதில்லை என்பது குறிப்பிடத்தக்கது.
- அதிக நாடுகளைக் கொண்ட கண்டம் - ஆபிரிக்கா

  குறைந்த நாடுகளைக் கொண்ட கண்டம் - அவுஸ்திரேலியா
- ஆசியாவையும் ஆபிரிக்காவையும் பிரிப்பது - சுயெஸ் கால்வாய்
- கம்யூனிசத்தின் தந்தை - கார்ல் மார்க்ஸ்
- அவுஸ்திரேலியாக் கண்டம் 1788ஆம் ஆண்டு கப்டன் ஜேம்ஸ் கூக் எனும் மாலுமியால் கண்டறியப்பட்டது.
- உலகின் மிகப் பழமை வாய்ந்த செய்தி நிறுவனம் - ரொய்ட்டர்

  இதனை யூலிஸ் ரொய்ட்டர் என்பவரே நிறுவினார்.
- ஜோர்ஜ் வாஷிங்டன் என்பவரின் தலைமையில் நடைபெற்ற சுதந்திரப் போரின் மூலம் 1786. 07. 04இல் அமெரிக்கா சுதந்திரம் அடைந்தது.
  - இவரே அமெரிக்காவின் முதலாவது குடியரசுத் தலைவராகப் பதவி வகித்தமை குறிப்பிடத்தக்கது.
  - ஜோர்ஜ் வாஷிங்டன் நினைவாக அமெரிக்காவின் நிர்வாகத் தலைநகருக்கு வாஷிங்டன் எனப் பெயரிடப்பட்டுள்ளது.
- தங்க முக்கோண வலய நாடுகள் என அழைக்கப்படுபவை - மியன்மார், தாய்லாந்து, லாவோஸ்
- BBC ஒலிபரப்புச் சேவை 1922ஆம் ஆண்டுமுதல் இடம்பெற்று வருகின்றது. தமிழோசை எனும் பெயரிலான தமிழ் ஒலிபரப்பு 1941ஆம் ஆண்டு மே மாதம் 03ஆம் திகதி முதல் நடைபெற்று வருகின்றது.
- கூர்ப்புக்கொள்கை அல்லது பரிணாமக் கோட்பாட்டை நிறுவியவர் சார்ள்ஸ் டார்வின்.
- சிலந்திக்கு 08 கண்கள் உண்டு.
- "மாயா" நாகரிகம் விளங்கிய இடம் மெக்ஸிக்கோ
- நாம் இப்போது பயன்படுத்தும் எண் குறியீட்டு முறை இந்து அராபிய முறை என அழைக்கப்படுகின்றது. இந்துக்களினால் உருவாக்கப்பட்டதாலும் அராபியரினால் உலகெங்கும் பரப்பப்பட்டதாலும் இவ் எண் முறை இவ்வாறு அழைக்கப்படுகின்றது. இவ் எண்கள் சிலவற்றுக்கு ரோமர் பயன்படுத்திய குறியீடுகள் பின்வருமாறு,

  1 = I , 5 = V, 10 = X , 40 = XL, 50 = L, 90 = XC, 100 = C, 400 = CD, 500 = D, 1000 = M

- **நேரவித்தியாசங்கள்**

  இலங்கைக்கும் பிரித்தானியாவுக்குமிடையில் தற்போது 6 மணி நேர இடைவெளி உள்ளது.

  உ-ம் : பிரித்தானியாவில் மதியம் 12.00 மணியாயின் இலங்கையில் மாலை 6.00 மணியாக இருக்கும். எனவே பிரித்தானிய நேரத்துடன் 6.00 மணியைக் கூட்டுவதன் மூலம் இலங்கையின் உள்ளூர் நேரத்தைக் கணித்துக் கொள்ளலாம்.

- இலங்கைக்கும் சிங்கப்பூர், மலேசியா, பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகளுக்குமிடையில் அண்ணளவாக 2.00 மணி நேர வித்தியாசம் உள்ளது.

  உ-ம் : இலங்கையின் உள்ளூர் நேரம் மதியம் 12.00 மணி ஆயின் மேற்கூறிய நாடுகளின் உள்ளூர் நேரம் பி.ப. 2.00 மணியாக இருக்கும்.

- இலங்கைக்கும் பிரான்ஸ், ஜேர்மனி, இத்தாலி, சுவிற்சலாந்து, நெதர்லாந்து ஆகிய மேற்கு ஐரோப்பிய நாடுகளுக்கும் இடையில் அண்ணளவாக 5.00 மணி நேர வித்தியாசம் உண்டு.

  உ-ம் : மேற்கூறிய நாடுகளில் மதியம் 2.00 மணியாக இருப்பின் அப்போது இலங்கையில் மாலை 5.00 மணியாக இருக்கும். எனவே மேற்கூறிய நாடுகளின் உள்ளூர் நேரத்துடன் 5.00 மணியைக் கூட்டுவதன்மூலம் இலங்கையின் உள்ளூர் நேரம் பெற்றுக் கொள்ளப்படும்.

- உலகின் முதல் தேசியக் கொடி - டென்மார்க் நாட்டில் கி.பி. 1248ஆம் ஆண்டில் வடிவமைக்கப்பட்டு பறக்கவிடப்பட்டது.

- உலகின் 5 முக்கிய அணுவல்லரசுகள்

  ஐக்கிய அமெரிக்கா, சீனா, பிரான்ஸ், பிரித்தானியா, ரஷ்யா.

- 1928ஆம் ஆண்டில் பிரான்சின் 'ஸ்டால் பரக்' நகரில் ஐரோப்பிய நாடுகளின் தேசிய பாராளுமன்றங்களிலிருந்து 142 உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு ஐரோப்பிய பாராளுமன்றம் உருவாக்கப்பட்டது.

- வெரித்தாஸ் (Veritas) எனும் ஒலிபரப்புச் சேவை 1969, ஏப்ரல் 11ஆம் திகதி முதல் பிலிப்பைன்ஸ் தலைநகர் மணிலாவிலிருந்து ஒலிபரப்பாகி வருகின்றது.

  - வெரிதாஸில் தமிழ்ப்பணி எனும் பெயரிலான தமிழ் ஒலிபரப்பு 1976 நவம்பர் 01 முதல் நடைபெற்று வருகின்றது. ஆசிய கத்தோலிக்க கிறிஸ்தவத் திருச்சபை வெரித்தாஸ் ஒலிபரப்பை மேற்கொண்டு வருகின்றது.

- இந்தியர்களுக்காகத் தென் ஆபிரிக்காவில் மகாத்மா காந்தி நடத்திய உரிமைப் போராட்டத்தின்போது அவரால் பிரசுரிக்கப்பட்ட செய்தித் தாளின் பெயர் - இந்தியனின் கருத்து (Indian Opinion)

- பிரித்தானியப் பாராளுமன்றப் பொதுமக்கள் சபைக் கட்டடத்தின் மீதுள்ள மணிக்கூட்டுக் கோபுரம் 'பிக் பென்' (Big Ben) ஆகும். பெஞ்சமின் ஹோல் என்பவரால் இது நிர்மாணிக்கப்பட்டது.

- மார்ட்டின் லூதர் கிங் என்பவர் அமெரிக்காவில் கறுப்பின மக்களின் உரிமைக்காக அமைதியான முறையில் போராடினார். 1965இல் உலக சமாதானத்திற்கான நோபல் பரிசைப் பெற்றார்.
  - இவரை 1967இல் 'ஏர்ல்றே' என்ற நிறவெறி கொண்ட அமெரிக்க வெள்ளையன் சுட்டுக் கொன்றான்.

- இந்தியச் செய்தி நிறுவனங்கள்

  UNI - United News of India

  PTI - Press Trust of India

- உலகை உலுக்கிய பயங்கரவாதியான 'கார்லோஸ்' பிரான்ஸ் நாட்டில் சிறை வைக்கப்பட்டுள்ளான். பல சாகஸங்கள் புரிந்த இவன் 1994இல் சூடானில் வைத்து கைது செய்யப்பட்டதாக நம்பப்படுகின்றது.
  - 'வெனிசுவேலா' நாட்டில் பிறந்த கார்லோஸினுடைய உண்மைப் பெயர் - இலியச் ராமி ரெக்ஸ்.
  - கார்லோஸ் 'குள்ளநரி' என்ற பெயர் கொண்டும் பிரபலமாகியுள்ளான்.

- சிறுவர்கள் வேலைக்கு அமர்த்தப்படுவதை 1919இல் சர்வதேச தொழிலாளர் ஸ்தாபனம் (ILO) சட்டரீதியாகத் தடை செய்தது. 1953 முதல் ஒக்ரோபர் 01ஐ ஐக்கிய நாடுகள் சபை சர்வதேச சிறுவர் தினமாக அனுஷ்டித்து வருகின்றது.
  - 1979ஆம் ஆண்டை சர்வதேச சிறுவர் ஆண்டாக ஐக்கிய நாடுகள் சபை பிரகடனம் செய்தது.
  - 1996 ஒகஸ்டில் சுவீடனில் ஸ்ரொக்ஹோம் நகரில் 168 சர்வதேச நாடுகள் கலந்து கொண்ட சிறுவர் நலன் பேணல் தொடர்பான மகாநாடு நடைபெற்றது.

- உலகில் அதிக வானொலி நிலையங்களைக் கொண்டுள்ள நாடு - ஐக்கிய அமெரிக்கா

- போர் வீரனின் பாட்டை தேசிய கீதமாகக் கொண்டுள்ள நாடு அயர்லாந்து.

- உலகின் முதல் 5 பெண் பிரதமர்கள்

  ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க (இலங்கை)

  கோல்டா மேயர் (இஸ்ரேல்)

இந்திரா காந்தி (இந்தியா)

மார்கிரெட் தட்சர் (பிரித்தானியா)

பெனாசிர் பூட்டோ (பாகிஸ்தான்)

- அஞ்சல் அட்டை (Post card)ஐ அறிமுகம் செய்து வைத்த நாடு - அவுஸ்திரேலியா
- ஆறுகளே இல்லாத நாடு, சினிமா தியேட்டர்களே இல்லாத நாடு - சவூதி அரேபியா
- இன்று உபயோகத்தில் உள்ள ஹெலிகொப்டரை 'ஹைக்கோஸை கார்ஸ்க்கி' என்ற ரஷ்யர் 1919இல் உருவாக்கினார்.
- இங்கிலாந்தையும், பிரான்சையும் ஆங்கிலக் கால்வாய்க்கு அடியில் இணைக்கும் சுரங்க ரயில் சேவையின் பெயர் - யூரோ டனல்.
  - 1994ஆம் ஆண்டில் ஆரம்பித்து வைக்கப்பட்ட இச்சுரங்க ரயில் பாதையே உலகின் மிக நீளமான சுரங்க ரயில் பாதை என்பது சிறப்பிற்குரியது.
- சர்வதேச தந்தி விதிகள் பற்றிய நாடுகளுக்கிடையே முதல் மகாநாடு 1865 மே 17இல் பிரான்ஸ் நகரில் நடைபெற்றது. இதில் 20 நாடுகள் கலந்து கொண்டு 'சர்வதேச தந்தி அமைப்பு' உடன்படிக்கையில் கைச்சாத் திட்டன.
- பால்டிக் கடலையும், வடகடலையும் இணைப்பது - கீல் (Keil) கால்வாய்
- 1 மைல் = 1.601 km
- உலகின் முதலாவது உணவு உச்சி மகாநாடு 1996 நவம்பரில் இத்தாலியின் ரோம் நகரில் நடைபெற்றது. ஐக்கிய நாடுகள் சபை இம்மகாநாட்டை ஏற்பாடு செய்தது.
- உலகப் பெண்கள் மகாநாடு 1995 செப்ரெம்பரில் சீனத் தலைநகர் பெய்ஜிங்கில் நடைபெற்றது.
- 'சார்க் (SAARC)' அமைப்பு நாடுகள் 1995 டிசம்பரில் 'சப்தா (SAPTA)' என்னும் தெற்காசிய முன்னுரிமை வியாபார உடன்படிக்கையை ஏற்படுத்தின.
- உலக சமுதாய மேம்பாட்டு மகாநாடு முதன்முதலாக 1995ஆம் ஆண்டு டென்மார்க் தலைநகரான 'கோபன் ஹேகன்' நகரில் நடைபெற்றது.
  - ஐக்கிய நாடுகள் சபை இம் மகாநாட்டை ஏற்பாடு செய்திருந்தது.
- தென்ஆபிரிக்கத் தலைவர் நெல்சன் மண்டேலா தனது வாழ்க்கை வரலாற்றை சுதந்திரத்திற்கு நீண்ட பயணம் (Long Walk to Freedom) எனும் பெயரில் நூலாக ஆங்கிலத்தில் எழுதி வெளியிட்டுள்ளார்.

- பிரித்தானியாவின் ஆளுகைக்குள் 150 வருடங்களாக இருந்த தென்கிழக் காசிய நாடான ஹொங்கொங் 1997 ஜூலை 1 முதல் சீனாவின் ஆட்சிக்குள் சென்றது.
- இந்தியாவின் முதலாவது செயற்கைக் கோள் - ஆரியப்பட்டா 'ஆரியப்பட்டர்' எனும் இந்தியக் கணித மேதையின் நினைவாக இது பெயரிடப்பட்டது.
- ஒவ்வொரு ஆண்டும் பெப்ரவரி 14ஆம் திகதி வலென்ரைன் டே என்ற பெயரில் உலக காதலர்களின் தினம் கொண்டாடப்படுகின்றது.
- உலக சாதனைகளின் பதிவேடான 'கின்னஸ் நூல்' 1955ஆம் ஆண்டு முதல் வெளியிடப்பட்டு வருகின்றது.

| நாடுகள் | செய்திநிறுவனங்கள் |
|---|---|
| இலங்கை | லங்கா புவத் |
| இந்தியா | BTI - UNI |
| ஈராக் | INA |
| பிலிப்பைன்ஸ் | PNA |
| பாகிஸ்தான் | APP |
| ஜப்பான் | கியாடே, கிகி |
| பிரான்ஸ் | AFP |
| இத்தாலி | அன்சா |
| ஜேர்மனி | DPA, ADN |
| ரஷ்யா | டாஸ் |
| எகிப்து | மேனா |
| டுனீஸியா | TAP |
| மொரோக்கோ | MAP |
| கானா | GNA |
| கியூபா | பெரிலா |
| மலேசியா | பெர்நமா |
| ஆர்ஜென்டீனா | டீலம் |

* * *

எவன் துணிகின்றானோ அவன் வெல்கிறான்.

# உலக விளையாட்டுக்கள்

**1) ஒலிம்பிக்** - OLYMPIC

உலகின் அனைத்து நாடுகளையும் உள்ளடக்கிய தாக 4 ஆண்டுகளுக்கு ஒரு முறை நடைபெறும் பிரபலமும், மதிப்பும் வாய்ந்த ஒரு விளை யாட்டுப் போட்டி இது. கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலத்தில் கிரேக்கத்தின்(கிறீஸ்) ஒலிம்பியா பள்ளத்தாக்கில் பாரம்பரியமாக ஆடப்பட்டு வந்த ஒலிம்பிக் பின்னர் கைவிடப்பட்டது. நவீன ஒலிம்பிக் போட்டிகள் பியரே கூபர்டின் எனும் பிரான்ஸ் நாட்டவரின் முயற்சியால் முதன்முதலாக 1896ஆம் ஆண்டு கிரேக்க நாட்டின் ஏதென்ஸ் நகரில் நடந்தது.

இதற்கு முன்னோடியாக சர்வதேச ஒலிம்பிக் குழு (IOC) எனும் நிறுவனம் 1894இல் அமைக் கப்பட்டது. ஒலிம்பிக்கை நடத்துவதற்குப் பொறுப்பு வாய்ந்த நிறுவனமாக சர்வதேச ஒலிம்பிக் குழுவே உள்ளது. நவீன ஒலிம்பிக்கின் நூற்றாண்டு விழாப் போட்டிகள் 1996இல் அமெரிக்காவில் நடந்தன. இறுதியாக 27ஆவது ஒலிம்பிக் போட்டி 2000ஆம் ஆண்டில் அவுஸ்தி ரேலியாவின் சிட்னி நகரில் நடந்தது. பதக்கப் பட்டியலின்படி அமெரிக்கா முதலிடத்தை வென்றது.

2004 ஆம் ஆண்டில் கிரேக்கத்தின் ஏதென்ஸ் நகரில் 28ஆவது ஒலிம்பிக் போட்டிகள் நடைபெறவுள்ளது.

- எமது ஆசியாக் கண்டத்தில்,

  1964 - ஜப்பான் - டோக்கியோ நகரம்

  1988 - தென்கொரியா - சியோல் நகரம்

என இருமுறை மட்டுமே இதுவரை இப்போட்டிகள் நடைபெற்றன. ஆனால், ஆபிரிக்க நாடுகளில் இதுவரை ஒலிம்பிக் போட்டிகள் நடைபெறா தமை குறிப்பிடத்தக்கது. ஒலிம்பிக் கொடியேற்றும் வழக்கம் 1920ஆம் ஆண்டில்தான் அறிமுகம் செய்துவைக்கப்பட்டது. கொடியில் இடம்பெறும் ஒலிம்பிக் சின்னம் 5 வளையங்கள் ஒன்றுடன் ஒன்று கோர்த்தது போல போட்டிகளில் ஒற்றுமையாய் பங்கெடுப்பதைக் குறிக்கின்றது.

ஒவ்வொரு வளையமும் நீலம், மஞ்சள், கறுப்பு, பச்சை, சிவப்பு ஆகிய வெவ்வேறு நிறங்களில் உள்ளது. உலக நாடுகளினது தேசியக் கொடிகள் யாவும் இந்த நிறங்களில் ஏதாவது ஒன்றில் இருப்பதைக் காணலாம்.

ஒலிம்பிக் போட்டிகளில் முதன்முதலாகப் பெண்கள் பங்கேற்க அனுமதிக் கப்பட்டது - 1928 இலாகும்.

ஒலிம்பிக் கிராமம் அமைக்கும் முறை 1932இல் அமெரிக்காவின் லொஸ் ஏஞ்சல்ஸ் ஒலிம்பிக்கில் வைத்தே அறிமுகம் செய்யப்பட்டது.

ஒலிம்பிக் தீபமேற்றும் வழக்கம் 1928இல் தான் அறிமுகமாகியது. பாரம்பரிய முறைப்படி ஒலிம்பியா பள்ளத்தாக்கில் வைத்துச் சூரிய ஒளியில் பந்தம் ஏற்றப்பட்டுத் தொடர் ஓட்டக்காரர்மூலம் போட்டி நடைபெறும் இடத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

போட்டிகளில் 1ஆம், 2ஆம், 3ஆம் இடங்களைப் பெற்று வெற்றி பெறுவோருக்கு முறையே தங்கம், வெள்ளி, வெண்கலம் ஆகிய பதக்கங்கள் வழங்கப்படுகின்றன.

தொலைக்காட்சி மூலம் முதலாவதாகக் காட்டப்பட்ட ஒலிம்பிக் - 1936 ஜேர்மனியின் பெர்லின் ஒலிம்பிக்.

1948 இலண்டன் ஒலிம்பிக் போட்டி, 2000ஆம் ஆண்டு அவுஸ்திரேலியா போட்டி ஆகியவற்றில் இலங்கையர்களான டங்கன் வைற், சுசந்திகா ஜயசிங்கா ஆகியோர் முறையே வெள்ளி, வெண்கலம் ஆகிய பதக்கங் களைப் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

**2) சாவ் (SAF) போட்டிகள் அல்லது தெற்காசிய விளையாட்டுக்கள்**

சார்க் (SAARC) அமைப்பில் அங்கம் வகிக்கும் இலங்கை, இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ், நேபாளம், மாலைதீவு, பூட்டான் ஆகிய 7 நாடுகள் ஒன்று சேர்ந்து ஆடிவரும் விளையாட்டே இது.

இவ்விளையாட்டின் ஆங்கிலச் சுருக்கப் பெயரைக் கொண்டு சாவ் (SAF) என அழைக்கப்படுகின்றது.

1991இல் 5ஆவது சாவ் போட்டிகள் இலங்கை, கொழும்பில் நடந்தது குறிப்பிடத்தக்கது.

**3) உலகக்கிண்ணக் கிரிக்கெட் போட்டிகள்**

கனவான்களின் விளையாட்டு எனச் சிறப்பிக்கப்படும் கிரிக்கெட் போட்டியின் 8ஆவது உலகக்கிண்ணப் போட்டிகள் 2003 பெப்ருவரி / மார்ச் மாதங்களில் தென்ஆபிரிக்கா, கென்யா, ஸிம்பாவே ஆகிய நாடுகளில் நடந்தது. அவுஸ்திரேலிய அணி சம்பியன் ஆகியது. இத்துடன் 3 முறை அவுஸ்திரேலிய அணி வெற்றிக்கிண்ணத்தைச் சுவீகரித்து ஆகக்கூடிய தடவைகள் வெற்றி பெற்ற அணியென்ற பெருமையைத் தனதாக்கியது.

4 ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் இப்போட்டிகளை ICC எனப்படும் சர்வதேச கிரிக்கெட் சம்மேளனம் நடத்தி வருகின்றது.

**4) உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டிகள்**

4 ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெற்று வரும் இப்போட்டி உலகில் ஆகக்கூடுதலான இரசிகர்களைக் கொண்ட போட்டியென்ற பெருமையைப் பெறுகின்றது. FIFA எனப்படும் சர்வதேச உதைபந்தாட்டச் சங்கம் இப் போட்டிகளை நடத்துகின்றது.

முதலாவது போட்டி 1930இல் தென்அமெரிக்க நாடான உருகுவேயில் நடந்தபோது அந்த நாடே வெற்றிக் கிண்ணத்தைச் சுவீகரித்தது.

அப்போது வழங்கப்பட்ட வெற்றிக் கிண்ணம் 'யூல்ஸ் றிமெற்' என அழைக்கப்பட்டது.

1982ஆம் ஆண்டே இது FIFA WORLD CUP எனப் பெயர் மாற்றம் பெற்றது.

இறுதியாக 17ஆவது போட்டிகள் தென்கொரியா, ஜப்பான் ஆகிய நாடுகளில் நடந்தேறியது.

ஆசிய நாடொன்றில் முதன்முதலாக நடந்ததுவும், இரு நாடுகளால் முதலாவதாகக் கூட்டாகவும் நடந்தது இப்போட்டியிலேதான்.

இறுதியாட்டம் பிரேசில், ஜேர்மனி ஆகிய நாடுகளிடையே நடைபெற்றது. பிரேசில் வெற்றிக்கிண்ணத்தை வென்றது.

இத்துடன் பிரேசில் 5ஆவது முறையாகவும் உலகக்கிண்ணத்தை வென்று ஆகக்கூடியமுறை சம்பியன் ஆகியுள்ள ஒரேயொரு அணியென்ற பெருமையைத் தனதாக்கியது. இதற்கு முன்னர் 1958, 1962, 1970, 1994 ஆகிய ஆண்டுகளிலும் கிண்ணத்தை வென்றெடுத்தது.

உலகக்கிண்ண கால்பந்தாட்டப் (உதைபந்தாட்டப்) போட்டிகளை நடத்திய கீழ்க் குறிப்பிடப்படும் நாடுகள் சம்பியன் பட்டத்தைக் குறிப்பிடப் படும் ஆண்டுகளில் தமது தாய் மண்ணில் வைத்தே வென்றெடுத்துள்ளன.

1930 - உருகுவே, 1934 - இத்தாலி, 1966 - இங்கிலாந்து, 1974 - மேற்கு ஜேர்மனி, 1978 - ஆஜென்டீனா, 1998 - பிரான்ஸ்.

**5) குளிர்கால / மாரிகால / பனிக்கால ஒலிம்பிக்** - Winter Olympic

குளிர்காலப் பனி விளையாட்டுக்களை முதன்மைப்படுத்திய இப்போட்டியும் 4 ஆண்டுகளுக்கு ஒரு முறை நடக்கின்றது: முதலாவது போட்டி 1924இல் பிரான்சில் நடைபெற்றது.

**6) பொதுநலவாய (கொமன் வெல்த்) விளையாட்டுக்கள்**

பிரித்தானியாவின் குடியேற்ற ஆட்சியிலிருந்து விடுதலை அடைந்த நாடுகளது அமைப்பான கொமன் வெல்த் (Common wealth) அமைப்பு நாடுகளிடையே 4 ஆண்டுகளுக்கு ஒரு முறை இது நடைபெறுகின்றது.

முதலாவது போட்டி 1930இல் கனடாவில் நடந்தது. இறுதியாக 17ஆவது போட்டிகள் 2002ஆம் ஆண்டு இங்கிலாந்தின் மன்செஸ்ரர் நகரில் நடைபெற்றது. ஆசிய நாடொன்றில் முதலாவதாக 1998இல் மலேசியாவின் தலைப் பட்டினமாகிய கோலாலம்பூரில் நடந்தது.

ஒலிம்பிக் போட்டிகளுக்கு அடுத்ததாக மிகப்பெரிய விளையாட்டு நிகழ்வாக இப் போட்டிகளே உள்ளன.

**7) ஆசிய விளையாட்டுக்கள்** - Asian Games

ஆசியக் கண்டத்து நாடுகள் அனைத்தும் பங்கேற்கும் இப்போட்டிகள் முதலாவதாக 1951ஆம் ஆண்டு இந்தியாவின் புதுடில்லி நகரில் நடந்தது. அடுத்த போட்டி 2003 ஜூலையில் பிலிப்பைன்சில் நடைபெறும்.

**8) ரெனிஸ்** - Tennis

ரெனிஸ் விளையாட்டின் தாயகமாக இங்கிலாந்து உள்ளது. இங்குள்ள விம்பிள்டன் ஆடுகளம் புராதனமும், பிரபல்யமும் பெற்று விளங்குகின்றது. விம்பிள்டன் ரெனிஸ் வெற்றிக் கிண்ணங்கள் உலகக் கிண்ணத்திற்கு சமமாக மதிக்கப்படுகின்றன.

பிரான்ஸ், அமெரிக்கா, கனடா, அவுஸ்திரேலிய ரெனிஸ் ஆடுகளங்களும் பிரபல்யமானவை.

## கிரிக்கெற் - இலங்கை

- இலங்கை ரெஸ்ற் (Test) விளையாட்டுக்களில் பங்கேற்கும் அந்தஸ்தை 1982ஆம் ஆண்டில் பெற்றது.
- இலங்கை அணியின் சார்பில் துடுப்பெடுத்தாடி முதல் சதம் (செஞ்சரி) பெற்ற வீரர் - சிதாத் வெத்தமுனி.
- இலங்கை அணி தனது முதலாவது ரெஸ்ற் வெற்றியை இலங்கை மண்ணில் வைத்து 1984இல் பெற்றது. இந்திய அணிக்கு எதிராக இவ் வெற்றி பெறப்பட்டது.
- இலங்கை அணி இலங்கை மண்ணுக்கு வெளியேயான தனது முதலாவது ரெஸ்ற் வெற்றியை 1995 மார்ச்சில் நியூசிலாந்து மண்ணில் வைத்துப் பெற்றது. இவ் வெற்றி நியூசிலாந்து அணிக்கு எதிராகப் பெறப்பட்டது.
- இலங்கை அணி 1996இல் உலகக்கிண்ண கிரிக்கெற் போட்டிகளின் போது அவுஸ்திரேலிய அணியுடன் மோதி உலகக்கிண்ண கிரிக்கெற் சம்பியன் ஆகியது.

## கிரிக்கெற் - சர்வதேசம்

- ஒருநாள் சர்வதேசப் போட்டிகளின்போது ஆகக்கூடிய ஓட்டங்களைப் பெற்றவர் சஹிட் அன்வர் (பாகிஸ்தான்)
  - இந்திய அணிக்கெதிராக 1997இல் இச் சாதனை நிகழ்த்தப்பட்டது.
  - இதற்கு முன்னர் மேற்கிந்தியத் தீவுகளின் வீரர் விவியன் றிச்சார்ட்ஸ் 1984இல் பெற்ற 184 ஓட்டங்களே சாதனையாக இருந்தது.
- பாகிஸ்தானிய கிரிக்கெற் வீரர் 'சாஹிட் அவ்ரிடி' 37 பந்து வீச்சுக்களைச் சந்தித்து 100 ஓட்டங்களைப் பெற்றது தற்போதைய உலக சாதனையாக உள்ளது. அதாவது மிகக்குறைந்த பந்து வீச்சுக்களை எதிர்கொண்டு மிகக்கூடிய ஓட்டம் பெற்றது.
- உலகின் புகழ் பெற்ற கிரிக்கெற் மைதானங்களில் சார்ஜாவும் ஒன்று. 1983இல்தான் முதன்முதலாக இந்த மைதானத்தில் சர்வதேச ஒருநாள் கிரிக்கெற் போட்டி நடைபெற்றது. இப்போட்டி இந்தியா - பாகிஸ்தானிய அணிகளிடையே நடைபெற்றது.
- உலகப்புகழ்பெற்ற முன்னாள் கிரிக்கெற் வீரர் 'சேர் டொன் பிரட்மன்' அவுஸ்திரேலியாவைச் சேர்ந்தவர். பல உலக சாதனைகளின் சொந்தக்கார ராகவும், கிரிக்கெற் உலகின் பிதாமகராகவும் போற்றப்படும் 'பிரட்மன்' தனது வாரிசு என்று இந்திய அணியின் நட்ஷத்திர வீரர் சச்சின் டெண்டுல் கரைக் கூறியுள்ளார். பிரட்மன் அண்மையில் இயற்கை எய்திவிட்டார்.
- ஒரே இன்னிங்ஸில் ஆகக்கூடிய ஓட்டங்கள் பெற்ற வீரர் - பிரையன் லாரா
  - மேற்கிந்திய அணியைச் சேர்ந்த இவர் 1994ஆம் ஆண்டில் ரெஸ்ற் போட்டியில் 375 ஓட்டங்களைப் பெற்று இச் சாதனையைப் புரிந்துள்ளார்.

- இலங்கை அணி கென்ய அணிக்கு எதிராக 1996இல் உலகக் கிண்ணப் போட்டியொன்றின் போது பெற்ற 398 ஓட்டங்கள் சாதனையாகப் பதிவாகியுள்ளது.
- இரு நாட்டு அணிகளுக்காக விளையாடிய வீரர் - கெப்லர் வெஸல்ஸ். இவர் முன்னர் அவுஸ்திரேலிய அணிக்காக விளையாடி பின்னர் தென்ஆபிரிக்க அணிக்குத் தலைமை தாங்கியமை குறிப்பிடத்தக்கது.
- இலங்கை, இந்திய அணிகளுக்கிடையே 1997இல் இலங்கையில் நடைபெற்ற ரெஸ்ட் தொடரின்போது சாதனைகள் பல படைக்கப் பட்டன.
  - இலங்கை வீரர்களான சனத் ஜயசூரிய, ரொஷான் மகாநாம ஆகியோர் 2 நாட்கள் இணைந்து துடுப்பெடுத்தாடி முதலாவது விக்கெற் இழப்புக்குப் பெற்ற 576 ஓட்டங்கள் ரெஸ்ட் போட்டி வரலாற்றில் சாதனையாகப் பதிவாகியுள்ளது.
  - சனத் ஜயசூரிய 340 ஓட்டங்களையும், ரொஷான் மகாநாம 225 ஓட்டங்களையும் பெற்றனர்.
  - நியூசிலாந்து அணி வீரர்களான மார்ட்டின் குரோ, ஜோண்ஸ் ஆகியோர் 1991இல் நியூசிலாந்து, வெலிங்டனில் இலங்கை அணிக்கு எதிராக 467 ஓட்டங்களைப் பெற்ற சாதனையே முறியடிக் கப்பட்டது.
  - இப் போட்டியின் போது இலங்கை அணி 6 விக்கெற் இழப்புக்குப் பெற்ற 952 ஓட்டங்கள் ஒரு அணி பெற்ற ஆகக்கூடிய ஓட்டங்கள் என்ற சாதனையையும் ஏற்படுத்தியுள்ளது.
  - 1938இல் இங்கிலாந்து ஓவெல் மைதானத்தில் இங்கிலாந்து அணி அவுஸ்திரேலிய அணிக்கெதிராக 7 விக்கெற் இழப்புக்காகப் பெற்ற 903 ஓட்டங்களே முன்னைய சாதனை.
- சதுரங்கம் - செஸ் (Chess)
  - இவ் விளையாட்டின் தாயகம் இந்தியா
- விளையாட்டு வீரர்களின் எண்ணிக்கை
  - கிரிக்கெற், உதைபந்து, ஹொக்கி - 11
  - ரக்பி - 15, பேஸ் போல் (Base Ball) - 7
  - வலைப்பந்தாட்டம் (Net Ball) - 6
  - ரெனிஸ் (தனி) - 2, இரட்டையர் - 4
- உலகின் மிகப் பழமையான விளையாட்டு - போலோ (Polo)
- கோல்ஃப் விளையாட்டு தோன்றிய நாடு - ஸ்கொட்லாந்து

* * *

*Our Knowledge Comes from our Experience - but,*
*Experience Comes from our Mistakes*

## சுருக்கப் பெயர்கள் நிறுவனங்கள்

1. UNO - United Nations Organization
   ஐக்கிய நாடுகள் சபை
2. SAARC - South Asian Association for Co-operation
   தெற்காசியப் பிராந்திய நாடு களுக்கான ஒத்துழைப்புக் கூட்டமைப்பு
3. NATO - North Atlantic Treaty Organization
   வட அத்திலாந்திக் ஒப்பந்த நிறுவனம்
4. WTO - World Trade Organization
   உலக வர்த்தக நிலையம்
5. BBC - British Broadcasting Co-operation
   பிரித்தானிய ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்
6. Interpol - International Police Commission
   சர்வதேச காவல்துறை ஆணைக்குழு (இன்ரெர் போல்)
7. ICC - International Cricket Committee
   சர்வதேச கிரிக்கெட் சம்மேளனம்

8. SLBC - Sri Lanka Broadcasting Co-operation
இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

9. SLRC - Sri Lanka Rupavahini Co-operation
இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம்

SLRC - Sri Lanka Red Cross
இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்

10. IOC - International Olympic Commitee
சர்வதேச ஒலிம்பிக் குழு

11. NPT - Nuclear Non-Proliferation Treaty
அணு ஆயுதத் தடுப்பு உடன்படிக்கை

12. IAEA - International Atomic Energy Agency
சர்வதேச அணுசக்தி முகவரகம்

13. OPEC - Organization of Petrolium Exporting Countries
பெற்றோலிய ஏற்றுமதி நாடுகளின் நிறுவனம்

14. VOA - Voice of America
அமெரிக்க ஒலிபரப்புச் சேவை

15. NGO - Non Government Organization
அரச சார்பற்ற நிறுவனம்

16. AL - Arab Leak
அரபு லீக்

17. PLO - Palastine Liberation Organization
பலஸ்தீன விடுதலை இயக்கம்

18. ANC - African Nation Congress
ஆபிரிக்க தேசிய காங்கிரஸ்

* * *

> ஒரு மனிதன் விழாமலே வாழ்ந்தான் என்பது பெருமையல்ல. விழுந்த போதெல்லாம் எழுந்தான் என்பதே பெருமை
>
> - ஆங்கிலக் கவிதையினை மொழி பெயர்த்தவர் கவிஞர் வாலி.

# மாதிரி வினாத்தாள்

## பொது அறிவு

*நேரம் : 1 மணி* *2003 ஜுன்*

இவ்வினாத்தாள் 50 வினாக்களைக் கொண்டது. வினாக்கள் யாவற்றிற்கும் இத்தாளிலே கொடுக்கப்படும் அறிவுறுத்தல்களுக்கு அமைய விடையளிக்குமாறு நீர் கேட்கப்படுகின்றீர்.

### பகுதி - I

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தைப் புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.**

**1. தேசிய சேமிப்பு வங்கியின் தற்போதைய தலைவர் யார்?**

(i) சி.வி.விக்னேஸ்வரன் (ii) ரி. சுவாமிநாதன்
(iii) றோகிணி நாணயக்கார (iv) ஏர்ள் குணசேகர (..........)

**2. இலங்கையில் பிரித்தானியரின் ஆட்சிக் காலத்தில் இந்து மதத்தின் மேம்பாட்டிற்காகவும், மறுமலர்ச்சிக்காகவும் பெரிதும் பாடுபட்டவர் யார்?**

(i) சேர் பொன் இராமநாதன் (ii) சு. வித்தியானந்தன்
(iii) சேர் பொன் அருணாசலம் (iv) ஆறுமுக நாவலர் (..........)

**3. வடஅமெரிக்காவிலிருந்து தென்அமெரிக்காவைப் பிரிக்கும் நீரிணையின் பெயர் என்ன?**

(i) பனாமா நீரிணை (ii) பாக்குநீரிணை
(iii) பீரிங் நீரிணை (iv) மலாக்கா நீரிணை (..........)

**4. மியன்மாரில் (பர்மா) ஜனநாயக உரிமை கோரிப் பல வருட காலமாகப் போராடி வரும் பெண்?**

(i) மெடலின் அல்பிரைட் (ii) அவுங்சான் சூகி
(iii) இமெல்டா மார்க்கோஸ் (iv) சோனியா காந்தி (..........)

**5. சதுரங்க விளையாட்டின் புகழ் பெற்ற விளையாட்டு திடலான 'விம்பிள்டன்' எந்த நாட்டில் உள்ளது?**

(i) ரஷ்யா (ii) சீனா (iii) அமெரிக்கா (iv) இங்கிலாந்து (..........)

**6. இரண்டாவது உலக இந்து மகாநாடு 2003இல் நடைபெற்ற இடம்?**

(i) இந்தியா (ii) மலேசியா (iii) இலங்கை (iv) பிஜி (..........)

7. உலகின் முதலாவது பெண் தாதி, தற்காலத் தாதிச் சேவையின் தாய் எனப் போற்றப்படுபவர்?

(i) மேரி கியூரி அம்மையார்
(ii) கோல்டா மேயர்
(iii) அன்னை திரேசா
(iv) ஃபுளோரன்ஸ் நைற்றிங்கேல் (..........)

8. தமிழ் மொழியில் சிறுகதை எனும் இலக்கிய வடிவத்தை அறிமுகம் செய்து வைத்தவர் யார்?

(i) அ. செ. முருகானந்தன் (ii) கே. டானியல்
(iii) ம. பொ. சிவஞானம் (iv) வ. வே. சு. ஐயர் (..........)

9. 'கம்யூனிஸ சித்தாந்தத்தின் தந்தை' எனப் போற்றப்படுபவர் யார்?

(i) ஏங்கெல்ஸ் (ii) குருசேவ்
(iii) பிடல் காஸ்ட்ரோ (iv) கார்ல் மார்க்ஸ் (..........)

10. உலகப் புகழ் பெற்ற நோபல் விருதுகளை வழங்குவதற்குப் பொறுப்பாக உள்ள சுவீடன் தேச நிறுவனம் எது?

(i) ராக்பெல்லர் பவுண்டேசன் (ii) ரோயல் சுவீடிஷ் அக்கடமி
(iii) பெயாரிங்ஸ் (iv) யூனியன் கார்பைட் (..........)

11. தற்போதைய உலகக்கிண்ண கிரிக்கெற் சம்பியன் நாடு?

(i) இந்தியா (ii) பாகிஸ்தான்
(iii) அவுஸ்திரேலியா (iv) கென்யா (..........)

12. கற் (Gatt) எனப்பட்ட வியாபார வரி தொடர்பிலான பொது உடன்படிக்கை எனும் அமைப்பு தற்போது எப்பெயர் கொண்டு அழைக்கப்படுகின்றது?

(i) உலக வர்த்தக நிலையம் (WTO)
(ii) சப்தா (SAPTA)
(iii) நப்தா (NAFTA)
(iv) ஐரோப்பிய சமூகம் (..........)

13. உலகின் முதலாவது தமிழ்ப் புத்தகம் இந்தியாவில் வெளியிடப்பட்டது. அப் புத்தகத்தின் பெயர் என்ன?

(i) கிறிஸ்தவ வணக்கம் (ii) பாஞ்சாலி சபதம்
(iii) சிலப்பதிகாரம் (iv) குழந்தைப் பாட்டு (..........)

14. மயிரிழை போன்ற ஊசிகள் மனித உடலில் குறிப்பிட்ட சில இடங்களில் நரம்புகளில் குத்துவதன் மூலம் நோய்களுக்கு சிகிச்சையளிக்கும் பாரம்பரியச் சீன மருத்துவ முறை?

(i) ஹோமியோபதி (ii) சித்த மருத்துவம்
(iii) அக்குபங்சர் (iv) ஆயுர்வேதம் (..........)

15. உலகத்தை தற்போது மிகப் பயங்கரமாக அச்சுறுத்தி வரும் புதுவித நோய் எது?

(i) சார்ஸ் (ii) எய்ட்ஸ் (iii) எபோலா (iv) மலேரியா

(..........)

16. இலங்கைப் பிரதமரின் உத்தியோகபூர்வ வதிவிடத்தின் பெயர் என்ன?

(i) மும்தாஜ் மஹால்
(ii) எண்கோண மண்டபம்
(iii) வசந்த மாளிகை
(iv) அலரி மாளிகை (..........)

17. அணிசேரா இயக்கத் தலைவர்கள் பங்கேற்ற உச்சிமகாநாடு இறுதியாக எங்கே நடைபெற்றது?

(i) நைஜீரியா (ii) மலேசியா (iii) கியூபா (iv) இலங்கை

(..........)

18. இந்திய - பாகிஸ்தானிய உறவில் மிக அண்மைக் காலமாகச் சர்ச்சையை ஏற்படுத்தி வரும் மாநிலம் எது?

(i) பஞ்சாப் (ii) குஜராத் (iii) ஆந்திரா (iv) காஷ்மீர்

(..........)

19. பாடல்கள் இல்லாமல் முதன்முதலில் தமிழில் வெளிவந்த திரைப்படம் எது?

(i) சந்திரலேகா (ii) தெய்வமகன்
(iii) தேவர்மகன் (iv) அந்தநாள் (..........)

20. அமெரிக்காவைச் சர்வதேசமெங்கும் அச்சுறுத்தி வரும் இஸ்லாமிய இயக்கம் எது?

(i) ஹமாஸ் (ii) அல் கொய்டா
(iii) ஜிகாத் (iv) அல் ஜஸீரா (..........)

**குறுவிடை தருக.**

21. இலங்கைப் பல்கலைக்கழகத்தில் முதன் முதலில் முதுகலைமாணி (MA) பட்டம் பெற்றவர் (.........................................)

22. இலங்கையில் தற்போது நடைமுறையிலுள்ள நேரம் GMT நேரத்துடன் எத்தனை மணித்தியாலங்கள் கூட்டப்பட்டதாக உள்ளது?

(.........................................)

23. சுஹார்ட்டோ என்ற சர்வாதிகாரி 32 வருடங்கள் ஆட்சி புரிந்த நாடு எது?

(.........................................)

24. "சாவ் (SAF)" என்ற பதத்தினால் குறிக்கப்படுவது எது?

(.........................................)

25. அமெரிக்காவின் தற்போதைய வெளியுறவுத்துறைச் செயலாளர் யார்?

(.........................................)

**கீழே தரப்படும் தரவுகள் சரியாயின் 'சரி' எனவும் பிழையாயின் 'பிழை' எனவும் புள்ளிக் கோட்டில் எழுதுக.**

26. மனித உடலில் எய்ட்ஸ் (AIDS) நோயை HIV எனும் ஒருவகை வைரஸ் கிருமி ஏற்படுத்துகின்றது. (......)

27. இலங்கையின் முதலாவது ஜனாதிபதி என்ற பெருமையை காலஞ்சென்ற J. R. ஜெயவர்த்தன பெறுகின்றார். (.......)

28. பொதுநலவாய நாடுகள் ஒன்றியம் ஆசிய நாடுகளது வணிகத் தொழில் நலன்களைப் பாதுகாக்கவென அமைக்கப்பட்ட ஒரு நிறுவனமாகும். (.......)

29. இலங்கைப் பல்கலைக்கழகம் 1942ஆம் ஆண்டு கொழும்பில் நிறுவப் பட்டது. (.......)

30. பொருட்கள் சேவைகள் வரி (GST) என்பதற்குப் பதிலாக அறிமுகமானதே பெறுமதி கூட்டப்பட்ட வரி VAT. (.......)

**கீழ்வரும் வினாக்களில் கீறிட்ட இடங்களை நிரப்புவதன் மூலம் நிறைவு செய்க.**

31. சர்வதேச சுற்றுச்சூழல் தினம் ஒவ்வொரு ஆண்டும் ஜூன் .......... ஆம் திகதி கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது.

32. உலக சமாதானத்திற்காக நோபல் பரிசை 2002ஆம் ஆண்டு ............ .............. என்பவர் பெற்றுள்ளார்.

33. இலங்கையில் சர்வஜன வாக்குரிமை 1931ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட .................... யாப்பின் மூலம் நடைமுறைக்கு வந்தது.

34. ஒஸாமா பின்லேடனால் இயக்கப்படும் .................... எனும் இஸ்லாமியத் தீவிரவாத அமைப்பு அமெரிக்காவுக்குப் பெரிதும் அச்சுறுத் தலாக உள்ளது.

35. இந்தியாவிற்குத் தற்போது ஜனாதிபதியாக ....................எனும் பிரபல அணு விஞ்ஞானி உள்ளார்.

பின்வரும் ஒவ்வொருவருடனும் தொடர்புபட்ட நாட்டைப் பெயரிடுக.

36. டொனால்ட் ரம்ஸ்பீல்ட் . . . . . . . . . . . . . . . . . . . .

37. ஜான் பீற்றர்சன் . . . . . . . . . . . . . . . . . . . .

38. ஷேன் வோர்ண் . . . . . . . . . . . . . . . . . . . .

39. ஹென்றி ஒலங்கா . . . . . . . . . . . . . . . . . . . .

40. தாரிக் அஸீஸ் . . . . . . . . . . . . . . . . . . . .

பெயரிடுக.

41. இலங்கையில் சிறுவர் நலன்களைப் பேணவென அரசினால் அமைக்கப் பட்டுள்ள நிறுவனம் . . . . . . . . . . . . . . . . . . . .

42. ஐரோப்பிய ஒன்றியத்தில் அங்கம் வகிக்கும் 12 நாடுகள் தமக்கெனப் பொதுவாக உருவாக்கியுள்ள நாணயத்தின் பெயர் . . . . . . . . . . . . . . . . . .

43. "நைல் நதியின் கொடை" எனப் புகழப்படும் நாடு . . . . . . . . . . . . . . . . .

44. ஆசியாவில் முதன்முதலில் நோபல் விருதைப் பெற்றவர் . . . . . . . . . . . . .

45. இலங்கையின் தற்போதைய வெளிவிவகார அமைச்சர் . . . . . . . . . . . . .

நிறுவனத்தைக் குறிப்பிடுக.

46. இலங்கையிலுள்ள வங்கிகள் அனைத்தினதும் வங்கியாகச் செயற்பட்டு வரும் வங்கி . . . . . . . . . . . . . . . . . . . .

47. பிரித்தானியாவின் குடியேற்ற ஆட்சியிலிருந்து விடுதலை அடைந்த நாடுகள் பிரித்தானியாவைத் தலைமை நாடாகக் கொண்டு ஏற்படுத்திய நட்புறவு அமைப்பு . . . . . . . . . . . . . . . . . . . .

48. இலங்கையின் சுற்றுப் புறச் சூழலைப் பாதுகாக்கும் நோக்குடன் உருவாக் கப்பட்ட நிறுவனம் . . . . . . . . . . . . . . . . . . . .

49. உலக சமாதானத்தைக் குறிக்கும் ஒலிவ் மரக்கிளையை தனது இலச்சினை யில் கொண்டு இயங்கும் உலக நாடுகள் அனைத்தினதும் பொது மன்றமாக உள்ள அமைப்பு . . . . . . . . . . . . . . . . . . . .

50. தெற்காசியாவின் 7 நாடுகளும் ஒன்றிணைந்து உருவாக்கிய அமைப்பு . . . . . . . . . . . . . . . . . . . .

## மாதிரி வினத்தாள் : விடைகள்

| | | | |
|---|---|---|---|
| 1. ii | 2. iv | 3. i | 4. ii |
| 5. iv | 6. iii | 7. iv | 8. iv |
| 9. iv | 10. ii | 11. iii | 12. i |
| 13. i | 14. iii | 15. i | 16. i |
| 17. ii | 18. iv | 19. i | 20. ii |

21. B. மகாதேவா
22. 06
23. இந்தோனேஷியா
24. தெற்காசிய விளையாட்டுக்கள்
25. கொலின் பவெல்
26. ✓
27. ×
28. ×
29. ✓
30. ✓
31. 05
32. ஜிம்மி கார்ட்டர்
33. டொனமூர்
34. அல் கொய்தா
35. அப்துல் கலாம்
36. அமெரிக்கா
37. நோர்வே
38. ஷேன் வோர்ண்
39. சிம்பாவே
40. ஈராக்
41. தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை
42. யூரோ அல்லது ஈரோ
43. எகிப்து
44. கவிஞர் ரவீந்திரநாத் தாகூர்
45. டிரோன் பெர்ணாண்டோ
46. இலங்கை மத்திய வங்கி
47. பொதுநலவாய நாடுகள் ஒன்றியம் அல்லது கொமன் வெல்த்
48. ஸ்ரீலங்கா மத்திய சுற்றாடல் அதிகாரசபை
49. ஐக்கிய நாடுகள் சபை
50. சார்க் அல்லது தெற்காசிய பிராந்திய நாடுகளுக்கான ஒத்துழைப்புக் கூட்டமைப்பு

* * *

*எதிர்காலம் என்பது நாங்கள் செல்லும் இடமல்ல. மாறாக நாங்கள் அதனை உருவாக்குகின்றோம். அதற்கான வழிகள் கண்டறியப் படுவதில்லை. மாறாக உருவாக்கப்படுகின்றன. அத்தகைய வழிகளை உருவாக்குவது உருவாக்கு பவரையும், சென்றடையும் இடத்தையும் மாற்றியமைக்கின்றது.*



விலை ரூபா : 150.00